www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 70 ஏப்ரல்.20 - மே.04, 1995 விலை 7.00

**மதிமந்திரிகள்**

**மந்திரிமார் வந்தவுடன் மாலையிட்டு வாழ்த்தவென்று**
**சந்தியிலே போய்நின்று சலித்தாயோ - மந்திரிமார்**
**வந்திறங்கி உங்களுக்கு வாழ்வுதர என்னஅவர்**
**சொந்தமதி அற்றவரோ சொல்!**

**-ஈழமோகம்**

## அமைச்சர் குழு யாழ் செல்லாதது ஏன்?
## புலிகள் எதிர்ப்பு காரணம்?

நான்காவது சுற்றுப் பேச்சுக்காக யாழ் செல்லவிருந்த அமைச்சர்களின் விஜயம் திடீரென ரத்துச் செய்யப்பட்டு, ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான தூதுக்குழு ஒன்று யாழ் சென்றதும் பேச்சுவார்த்தையில் எத்தகைய முன்னேற்றமும் இன்றி திரும்பி வந்ததும் தெரிந்ததே.

இத்திடீர் முடிவுக்கான காரணம் என்ன என்பது பற்றி விசாரித்ததில் சரிநிருக்கு கிடைத்த தகவல்கள் வருமாறு:

'யாழ் வரும் அரச தூதுக்குழுவில் அவ்விடத்திலேயே முடிவெடுக்கக் கூடிய அதிகாரம் படைத்தவர்களும் வரவேண்டும் என்பது புலிகளால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தாலும், நான்காவது சுற்றுப் பேச்சில் அரசியல் தீர்வு விவகாரங்கள் தொடர்பாகப் பேச வேண்டி இருந்ததாலும் உயர்மட்ட அமைச்சர்குழுவைப் பேச்சுகட்காக அனுப்புவது என்று அரசு தரப்பில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் 19ம் திகதி காலக்கெடு விதித்துப் புலிகள் தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத்திலும், பின்னர் சொல்லி அனுப்பியதாகக் கூறப்படும் தகவல்களிலும் புலிகளால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட நான்கு கோரிக்கைகள் தொடர்பான அரசின் நிலைப்பாடு தெரியாதவரை அரசியல் ரீதியாகப் பேசுவதில் அர்த்தமில்லை என்று புலிகள் வலியுறுத்தி அறிவித்ததாகவும், இதன் காரணமாகவே அமைச்சர்கள் விஜயம் செய்வது தவிர்க்கப்பட்டது என்றும் தெரியவருகிறது.

வடபகுதிக்கான எரிபொருட்கள் மீதான தடை நீக்கப்பட்டது தொடர்பாக வர்த்தமானிமூலம் பிரகடனப் படுத்தப்படும் வரை அரசியல் பேச்சுக்களில், ஈடுபடுவதில் அர்த்தமில்லை என்பதில் புலிகள் உறுதியாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்தே அரசு தரப்பில் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான குழுவை அனுப்புவது என்று முடிவெடுக்கப்பட்டது. இக்குழுவில் அரசாங்க சார்பில் வணகென்னத் பெர்னாண்டோ, மொழி ஆணைக்குழு தலைவரும் மோர்ஜ் அமைப்பின் தலைவருமான சார்ள்ஸ் அபயசேகரா, கலாநிதி உயங்கொட ஆகியோரும் சென்றிருந்தனர்.

பேச்சுவார்த்தை வெற்றி அளிக்கவில்லை என்று யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களிடம் புலிகளின் சார்பில் தமிழ்செல்வம் அறிவித்திருந்த போதும், அரசு தரப்பில் இதுவரை எத்தகைய அறிவித்தலும் வெளியிடப்படவில்லை. பதிலாக, புலிகளுக்கு ஜனாதிபதி எழுதிய கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் புலிகளின் கோரிக்கைகளினை அரசு பரிசீலிக்கத் தயாராயிருப்பதாகத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட நெருக்கடிக்கான 'பழி'யைப் புலிகளின் தலையில் போட்டுவிடும் நோக்கமே இக்கடிதத்தை அனுப்பியதற்கான காரணம் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது. அப்பத்திரிகையின் இன்னொரு தகவலின் படி புலிகளுடன் அரசியல் பேச்சு நடைபெறாததனால் குறிப்பிட்ட படி யூலை மாதத்தில் ஜனாதிபதி முறையில் மாற்றம் கொண்டுவரப்படாமல் இருக்கவும் வாய்ப்புண்டு என்றும் குறிப்பிட்டுள்ளது!

## சரிநிகர் மீது வழக்கு!

'சுதந்திரக் கட்சி அமைப்பாளருக்கு ஐந்து லட்சம் + வாகனம்! என்ற தலைப்பில் சரிநிகர் ஜூன் 30 - ஜூலை 13, 1994இல் வெளியான செய்தியை ஆட்சேபித்து வழக்கொன்றை திருமலையைச் சேர்ந்த எஸ்.தவராஜா தொடுத்துள்ளார்.

குறித்த செய்தியானது தனது நேர்மையான சமூக, அரசியல் செயற்பாட்டைக் களங்கப்படுத்துவதோடு, திருமலை மக்கள் மத்தியில் தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதாகவும் உள்ளது என இலங்கைப் பத்திரிகைக் கவுன்சிலுக்கு அனுப்பிவைத்துள்ள குற்றப்பத்திரிகையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வழக்கு எதிர்வரும் மே 02ம் திகதி கொழும்பிலுள்ள பத்திரிகைக் கவுன்சில் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

### வடக்கு கிழக்கு இணைப்பு:

# பொ.ஐ.முவினுள் இழுபறி!

## நிலமையை சமாளிக்க 'ஜனாதிபதி பதவி' யூலைக்குப் பின்னரும் நீடிக்கப்படலாம்?


**உத்தேச புதிய அரசியலமைப்புச் சட்டம், இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்றவை தொடர்பாக ஆளும் கட்சியான பொ.ஜமுவினுள் பலத்த இழுபறி ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வடக்கு கிழக்கை இணைப்பது, அதற்கான புதிய எல்லைகளை வகுப்பது என்பது போன்ற பொது ஜன ஐக்கிய முன்னணியுள் கருத்துக்களை முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) தீவிரமாக எதிர்ப்பதாகவும், இது பொ.ஜ.ஐ.முவினுள் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.**

ஜனநாயக ஐக்கிய முன்னணியினர் தாம் இந்த அரசாங்கத்தில் முக்கியமான ஒரு பகுதியாக இருந்த போதும் தமக்கு தமிழ்க்கட்சிகளுக்கு வழங்கப்படுமளவு மதிப்பு கூட வழங்கப்படுவதில்லை என்றும் பொ.ஜ.முவின் இனப்பிரச்சினை தொடர்பான எந்த முடிவுகளும் சரி, பேச்சுவார்த்தை தொடர்பான கருத்துக்களும் சரி எவையும் தம்முடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும், வடக்கு கிழக்கு இணைப்பை தாம் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசியல் சட்ட நிறைவேற்றத்தினை செய்வதற்கு ஜனாதிபதிக்கு உண்மையான ஆதரவை வழங்க தாம் தயாராக இருந்த போதும் தாம் கணக்கெடுக்கப்படவில்லை. பதிலாக அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் கணிப்புக்குரியவர்களாக உள்ளார்கள் என்று டி.யூ.என்.எப். வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற கூட்டத்தொடரின் போது

→2




யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான 'திசை' வார இதழ் 1990 ஏப்ரலில் வெளியிட்ட கேலிச்சித்திரத்தை காலப்பொருத்தம் கருதி நன்றியுடன் மீள் பிரசுரம் செய்கிறோம்.

### சந்திரிகா:
## சமாதான முகமூடி அணிந்த பேரினவாதி
### விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

''சந்திரிகா குமாரதுங்க சமாதான முகமூடி அணிந்த பேரினவாதி?'' என்ற தலைப்பில் விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ இதழான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் சமாதானப் பேச்சு தோல்வியுறும் நிலைக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கின்றது.

'தமிழ் மக்களின் அத்தியாவசிய - அன்றாடத் தேவைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், 'பாரதூரமான இராணுவ விளைவுகள் ஏற்படும்' என்றும், எனவே தேசிய பாதுகாப்பை அரசு விட்டுக்கொடுக்காது என்றும் கூறி, புலிகளின் கோரிக்கைகளை சந்திரிகா அவர்கள், 09.03.1995ஆம் திகதி பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் நிராகரித்துள்ளார் என அப்பத்திரிகைத் தலையங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

''சந்திரிகா எடுத்துள்ள இந்த அரசியல் நிலைப்பாடானது, 'சிங்கள இனத்தின் பாதுகாப்பிற்குத் தமிழர்கள் அச்சுறுத்தலாக உள்ளார்கள்' என்ற பேரினவாதிகளின் நிலைப்பாட்டை ஒத்ததாகவே புலிகள் கருதுகின்றனர்.''

''தமிழர்களின் அத்தியாவசிய தேவைகளைப் பற்றிக் கேட்டதற்கே இப்படியாகப் பேரினவாத விளக்கங்களை இவர் கொடுக்கிறார் என்றால் தமிழரின் உரிமைக

→2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கண்டியில் மே தின ஊர்வலம் நடத்த ஐ.தே.க ஒற்றைக்காலில் தவம்!

எதிர்வரும் மேதினத்தை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சியால் கண்டியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திற்கு அனுமதி வழங்க முடியாதென அரசாங்கம் அறிவித்துள்ளது. இது ஒரு அரசியல் பழிவாங்கல் முயற்சியென ஐ.தே.க.குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐ.தே.க.வின் மேதின கூட்டத்தை பஸ் நிலையத்துக்கருகில் நடத்த ஏற்பாடு செய்வதற்காக கண்டி நகர சபையிடமிருந்து அனுமதி பெற்றிருந்த போதும், ஒலிபெருக்கி பயன்படுத்துவதற்கான அனுமதியை பெறுவதற்கு பொலிஸ்மா அதிபருடன் ஐ.தே.க.வின் செயலாளர் காமினி அத்துகோரள தொடர்பு கொண்ட போதே மேற்படி அனுமதி மறுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இதுபற்றி பொலிஸ்மா அதிபர் விளக்கமளிக்கும் போது பாதுகாப்பு, நகர நிர்வாக ஒழுங்கு சீர்குலையும் சூழ்நிலை உள்ளது என்றும் கட்சிகளின் மேதினக்கூட்டங்கள் கொழும்பில் நடாத்தப்படுவது நல்லது என்றும் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் முகமாக பிரதி பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்த கருத்துத் தெரிவிக்கும் போது கண்டியில் அக்கூட்டத்தை நடத்தினால் அதனைக் கட்டுப்படுத்த 7000க்கும் மேற்பட்ட பொலிசாரை கடமைக்கமர்த்த வேண்டிவருமென்றும் பாதுகாப்பு ரீதியில் அது பெரிய பிரச்சினையாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

ஐ.தே.க. தரப்பினர் இதுபற்றி கருத்து தெரிவிக்கையில், கட்சி புனருத்தாபனம் செய்யப்பட்டுவருவதாகவும் அதன் முதற்கட்டமாக உறுப்பினர்களை சேர்க்கும் வேலைத்திட்டத்தை அனுராதபுரத்தில் ஆரம்பித்ததாகவும் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் மாத்தளையில் நடத்தப்பட்டதாகவும் அந்த நோக்கில் தான் மே தினக்கூட்டம் கண்டியில் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி பேசுவதற்காக கடந்த 7ம் திகதி ஐ.தே.கவின் தலைமையகமான 'சிறிகொத'வில் நடத்தப்பட்ட கூட்டத்தில் இறுதிவரை அனுமதி கிடைக்காவிட்டால் கண்டியில் உண்ணாவிரதமிருப்பதெனவும் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் நினைவை அனுஷ்டிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. ●

## சம்பள உயர்வல்ல துப்பாக்கி சன்னங்கள் தான் நாம் தருவோம்!

பொ.ஐ.மு. அரசாங்கம் பதவியேற்று சில நாட்களில் நடந்த தொழிலாளர் வேலை நிறுத்தப்போராட்டங்கள் ஒடுக்கப்பட்ட விதம் பற்றி இலகுவில் மறப்பதற்கில்லை. அப்போராட்டங்களின் போது பொலிஸாரால் சுடப்பட்டு படுகாயத்துக்குள்ளான கே.ஏ.பிரேமரத்ன எனப்படும் தொழிலாளி இத்தனை நாட்களாக ஆஸ்பத்திரியில் உயிருடன் போராடிக்கொண்டிருந்தார். கடந்த மார்ச். மாதம் 23ஆம் திகதி அவர் உயிர் உடலைவிட்டு பிரிந்தது.

பொ.ஐ.மு. அரசாங்கம் ஒகஸ்ட்மாதம் பதவியேற்ற பின், செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள என்சல் லங்காவில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக வீதியில் இறங்கி வேலை நிறுத்தம் செய்தனர். பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு மாதத்திற்குள் நடந்த இந்த வேலை நிறுத்தத்தினால் அரசாங்கம் கலவரமடைந்திருந்தது தெரிந்ததே.

வேலை நிறுத்தத்தை நசுக்க பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் அவர்கள் மீது தாக்குதலிலும் ஈடுபட்டனர். தொழிலாளர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யும் அனுமதியை பொலிசார் பெற்றிருந்தனர் எனப் பின்னர் கூறப்பட்டது. சம்பவத்தின் போது 8 பேர் படுகாயத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பொலிஸாரின் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக அரசுதரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டதும் பிரதமர் சந்திரிகாவே நேரில் கலந்து கொண்டு இப்பிரச்சினையை தீர்க்க முயன்றதும் தெரிந்ததே. தொழிலாளர்களின் இந்தப் போராட்டம் ஜே.வி.பியின் போராட்டம் என்று அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டதும் தெரிந்ததே.

எவ்வாறாயினும் இத்துப்பாக்கிச் சூட்டில் தொழிலாளியான பிரேமரத்னவின் மூளைக்குள் துப்பாக்கி குண்டு குடிகொண்டும் வைத்தியர்கள் கைவிரித்துவிட்டதும் பற்றி அரசு எதுவிதமான கரிசனையும் காட்டியதாகத் தெரியவில்லை.

மூன்றுமாத வைத்தியத்தின் பின் பிரேமரத்ன இறந்து போனார். அவரது படுகொலைக்கு எந்தவித பொறுப்புமேற்காத அரசு, அவரது மரணச்சடங்கின் போது மூன்று குற்ற புலனாய்வாளர்களை (NIB - National Intelligent Bureau) அனுப்பி வேவு பார்த்ததைத்தவிர வேறு நல்ல காரியங்களை செய்யவில்லை. மரணச்சடங்கின் போது குற்றப்புலனாய்வாளர்களை சடங்கில் கலந்து கொண்டவர்கள் அடையாளம் கண்டு கொண்டபோது அதில் இருவர் தப்பியோடிவிட்டனர். ஒருவர் நன்றாக உதைவாங்கியபின் விடப்பட்டார்.

## 'சந்திரிகா பதவி விலகி தாய்க்கு வழிவிட வேண்டும்!'

**-வல்பொல ராகுல தேரர்**

''ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தனது பதவியிலிருந்து விலகி அப்பதவியை தன் தாய்க்கு வழங்க வேண்டும். நான் சந்திரிகா மீது வைத்திருக்கும் அன்பை விட எனது நாட்டுக்கும், இனத்துக்கும், பௌத்த தர்மத்தின் மீதும் கூடிய அன்பை வைத்திருக்கிறேன். சந்திரிகாவால் எந்த ஒரு உற்சவத்துக்கும் நேரத்துக்கு செல்ல தெரியாது. கூட்டத்துக்கு போவதாயிருந்தால் கூட்டம் முடிந்த பின்னர்தான் போய்ச் சேருவார். நேரப்படி கடமையாற்ற முடியாதது ஒருவித மனநோய்''



இவ்வாறு களனி பல்கலைக்கழக உபவேந்தரும் பௌத்த பிக்குவுமான வல்பொல ராகுல ஹிமி தெரிவித்துள்ளார். அண்மையில் நடந்த பிலிப் குணவர்த்தன நினைவுதின கூட்டத்தில் உரையாற்றும் போதே தனது கண்டனத்தை வெளியிட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா மீது முன் வைக்கப்படும் முக்கிய குற்றச்சாட்டுக்களில் நேரப்பிரச்சினை முக்கியமான இடத்தை வகிக்கிறது.

ஒரு முறை புனித பிரிஜட் பெண்கள் கல்லூரியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியொன்றிற்கு தலைமை தாங்கிய சிறிமா பண்டாரநாயக்க தனது மகளான சந்திரிகாவைப் பற்றிக்குறிப்பிடும் போது,

''மகள் சந்திரிகா, அன்று பாடசாலை போகும் காலங்களில் கூட நேரத்துக்கு போகும் பழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை''

என கூறியிருப்பதாக அண்மையில் வெளியான சிங்களப் பத்திரிகை யொன்றும் செய்தி வெளியிட்டிருந்தது.

இத்தவறுகளைப்பற்றி எழுதிய சில பத்திரிகைகளுக்கு நடந்த தாக்குதல் சம்பவங்களும் 'கழுதைச்சுதந்திர'' பிரகடனங்கள் வெளியிடப்பட்டதும் வாசகர் அறிந்ததே.

## தேடிப்பிடிக்க ஒரு புதிய படையணி

இராணுவத்தை விட்டு ஓடிய 25,000க்கும் அதிகமானவர்களைத் தேடிப்பிடிப்பதற்கான விசேட படையணி ஒன்றை பாதுகாப்பு அமைச்சு ஆரம்பித்துள்ளது. ஓடியவர்களில் 4,500 பேரை இதுவரை பிடித்துவிட்டதாக இவ்விசேட படையணி அறிவித்துள்ளது. பாதுகாப்பு அமைச்சு விடுத்திருக்கின்ற அறிக்கையொன்றின்படி அண்மைக்காலங்களில் நாட்டில் இடம் பெற்று வருகின்ற கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற பல சம்பவங்களுடன் இப்படி இராணுவத்தைவிட்டு ஓடியவர்களுக்கு தொடர்புண்டு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருவிட்டவில் ஒரு புதிய சிறைச்சாலை

இலங்கையில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் அறிவித்துள்ளார். 1993இல் 5000 பேரளவில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை 1994 இல் 7000 ஆக அதிகரித்துள்ளதாகவும், ஏற்கெனவே இருக்கின்ற 14 சிறைச்சாலைகள் இவர்களை அடைத்துவைக்கப் போதாது என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்விட நெருக்கடி காரணமாக 100 மில்லியன் ரூபா செலவில் குருவிட்ட பிரதேசத்தில் புதிதாக சிறைச்சாலை ஒன்று அமைக்கப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

## வடக்கு...

த.வி.கூ. அவசரகால சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, கிழக்கில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்பட்டால் நாம் அரசிலிருந்து வெளியேறுவோம் என முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப்பும், ஸ்ரீபாதக் கல்வியியல் கல்லூரி விவகாரம் தொடர்பான அரசின் நிலைப்பாட்டில் தான் அரசுக்கான எமது ஆதரவு தங்கியுள்ளது என சந்திரசேகரனும் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

பலவீனமான பாராளுமன்றத்தை கொண்டிருக்கும் சந்திரிகா அரசு, இந்தப் புதிய நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது அதன் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு பாதகமானது என அரசியல் அவதானி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை, ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள்ளும் கூட வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்க்கும் சக்திகள் பலமாக இருப்பதாகவும், நிலைமையை சமாளிக்க ஜனாதிபதி பதவி யூலைக்குப் பின்னும் நீடிக்கப்படக்கூடும் எனவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## சந்திரிகா...

ளைப் பற்றிக் கேட்டால் என்ன நடக்கும்'' என்றும் அது மேலும் தெரிவிக்கிறது.

எவ்வாறாயினும் சந்திரிகா இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்வைக்காமல் அதற்குப் பதிலாக காரணங்களையும், விளக்கங்களையும் கூறிக்கொண்டிருப்பதையிட்டு புலிகள் அதிருப்தி அடைந்துள்ளமையும், அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை வைப்பதை விட மூன்றாவது ஈழப்போருக்கு ஆயத்தப்படுத்துவதே புத்திசாலித்தனமானது என்று கருதிகிறார்கள் என்பதுவும் இத்தலையங்கம் மூலம் வெளிப்படுகிறது.

சமாதான முயற்சிகளுக்கு அரசு தரப்பில் பொறுப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருப்பது, சந்திரிகா அரசு இராணுவத்தீர்வையே நாடுகிறது என்று காட்டுவதாகக் குறிப்பிடும் இத்தலையங்கத்தை புலிகளின் மனோநிலையின் வெளிப்பாடாகக் கொள்வதானால், ஆரம்பத்தில் இருந்த சமாதான நம்பிக்கையை அவர்கள் முற்றாக இழந்துள்ளதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

முன்னைய எல்லா ஆட்சியாளர்களையும் போலவே சந்திரிகா அவர்களும் ஒரு தமிழின விரோதிதான் என்று காட்டிவிட்டார் என்கிறது விடுதலைப்புலிகளின் பத்திரிகை!

அரசுதரப்பு புலிகளைக் குற்றம் சாட்டுகிறது; புலிகள் அரசைக் குற்றம் சாட்டுகிறார்கள்.

இருதரப்பாரும் நாட்குறிக்க முனைவது சமாதான வாழ்வின் தொடக்கத்திற்கா, அதன் முடிவிற்கா என்பதுதான் இன்று மக்கள் முன்னுள்ள கேள்வி!

### பேராசிரியர் கணபதிப்பிள்ளை அரங்கு

தலைமையுரை: பேராசிரியர் ம.மு.உவைஸ்

சிறப்புரை: பேராசிரியர் கா.சிவத்தம்பி
ஈழத்து தமிழ் கலை, இலக்கிய வரலாற்றில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் இடம் - ஓர் இலக்கிய வரலாற்றுப் பதிகை

காலம்: 30.04.95 ஞாயிறு மாலை 4.30 மணிக்கு

இடம்: வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் கலந்துரையாடல் மண்டபம்.

அனைவரும் வருக

ஏற்பாடு: நோக்கு - ஆய்வு வட்டம்

★குறித்த நேரத்திற்கு நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம்...







## நாசமறுப்பான்

'நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை'க்கு, எதிர்பார்த்தபடி அமைச்சரவை மட்டத்திலான தூதுக்குழு யாழ் செல்வது என்ற தீர்மானம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டு ஜனாதிபதியின் செயலாளர் திரு பாலபட்டப்பெந்தி தலைமையிலான குழுவே சென்றிருந்தது ஒன்றும் ஆச்சரியத்திற்குரிய விடயமல்ல. ஏனென்றால், நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது, அரசாங்கத்தின் அரசியல் தீர்வுக்கான அடிப்படைகளை அமைச்சரவை மட்டத்தூதுக்குழு சென்று புலிகளிடம் முன்வைப்பதென்பதும், அவை தொடர்பான விவாதங்களைப் புலிகளுடன் ஆரம்பிப்பதென்பதும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலாக இருந்த அதே வேளை, அன்றாடப் பிரச்சினைகள் குறித்துத் தாம் முன்வைத்த கோரிக்கைகள் எவற்றுக்கும் எத்தகைய முடிவும் சொல்லாமல், அடிப்படைப் பிரச்சினைகளான அரசியல் பேச்சுக்களில் கால் வைப்பதற்கு தாம் உடன்பட முடியாது என்று அரசுக்கு அறிவிப்பதாக புலிகள் முடிவெடுத்திருந்தார்கள். இது தொடர்பாக பிரபாகரன் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில், இவ்விடயம் மிகவும் முக்கியமானது என்றும் வலியுறுத்தியிருந்தார். ஒப்புக்கொள்ளப்பட்டபடி பொருளாதாரத் தடை நீக்கம் பற்றியும், வடக்குக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாகவும் வலியுறுத்திக் கருத்துத் தெரிவித்த புலிகள் தரப்பினர் இப்பொருட்கள் மீதான தடை நீக்க உத்தரவை வர்த்தமானி மூலமாக ஜனாதிபதி அறிவிக்க வேண்டும் என்றும், அவ்வாறு அறிவிக்காதவரை அமைச்சரவை மட்டத்திலான பேச்சுக்களில் அர்த்தமில்லை என்று ஒரு அபிப்பிராயத்தை அரசுக்கு அறிவித்திருந்ததாகவும் தகவல்கள் வெளிவந்திருந்தன.

இந்தக் காரணங்களால் அமைச்சரவை மட்டக்குழுவை அனுப்பும் தமது முடிவை அரசு உடனடியாக மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது.

உண்மையில் அரசாங்கம் எதிர்வரும் 28ம் திகதி பாரிசில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளுக்கான மாநாட்டிற்கு முன்பாக, புலிகளுடனான அரசியல் பேச்சுக்களை ஆரம்பித்துவிட வேண்டுமென்பதில் குறியாக இருந்தது. அன்றாடக் கோரிக்கைகள் தொடர்பான விடயங்களை, பூநகரி முகாம் விடயத்தை ஒட்டி ஏற்பட்ட இறுக்க நிலைக்குப் பின் தொடர்வதை விட, அரசியல் பேச்சை ஆரம்பிப்பது அரசுக்கு அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் சாதகமானது என்று அரசு தரப்பு நிபுணர்கள் கணிப்பிட்டிருந்தனர்.

இதற்காக, தயாரிக்கப்பட்டிருக்கும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் இரண்டாவது வரைபில் குறிப்பிடப்பட்டுள்ள ஓரிரு விடயங்களை - குறிப்பாக வடக்கு கிழக்கு இணைப்பு, ஒற்றையாட்சிமுறை நீக்கம்..... போன்ற விடயங்களைக் கொண்டு சென்று புலிகளுடன் பேச்சை ஆரம்பித்தால் ஏற்கெனவே அடிப்படைப் பிரச்சினைகளை ஒட்டி எழுந்துள்ள இறுக்கத்தை தவிர்க்க முடியும் என்பதுடன் அரசியல் தீர்வுக்கான விவாதம் ஆரம்பிக்கப்பட்டால், அது உதவிவழங்கும் நாடுகள் மாநாட்டில் அரசுக்கு ஒரு பலமான நிலையைத் தரும் என்றும், இது ஒருவாறு காலத்தைக் கடத்துவதற்கு அரசுக்கு வாய்ப்பாக இருக்கும் என்றும் அரசு தரப்பினர் கணிப்பிட்டிருந்தனர்.

ஆனால், புலிகளின் முடிவு இவர்களின் முடிவுக்கு நேர் எதிர்மாறாக இருந்ததால் அரசாங்கத்தின் திட்டம் வெற்றி பெறாமல் போய்விட்டது. அவர்கள் அரசாங்கத்தின் நோக்கத்தைப் புரிந்து சந்தேகித்தது மட்டுமல்ல, அரசு இழுத்தடிப்புச் செய்கிறது என்றும் பகிரங்கமாக அறிவித்தும் விட்டார்கள். ஏற்கெனவே 19ம் திகதி காலக்கெடு வேறு அவர்களால் விதிக்கப்பட்டிருந்ததால், அரசு அவசர அவசரமாக ஒரு புதிய குழுவை ஜனாதிபதி செயலாளர் தலைமையில் அனுப்பி வைத்தது.

இம்முறை, இந்தத் தூதுக்குழுவில் கலாநிதி உயாங்கொட, சார்ள்ஸ் அபேசேகரா, வண. கென்னத் பெர்ணான்டோ ஆகியோரையும் சேர்த்து அனுப்பியிருந்தது. இதற்கும் முக்கியமான காரணம் ஒன்று உண்டு. ஏனென்றால் இவர்கள் ஏற்கெனவே தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு புலிகளுடன் பேசியதுடன், நீண்ட காலமாக புலிகளிடம் கைதிகளாக இருந்த பொலிசாரை விடுதலை செய்வதில் பெரும் பங்காற்றியவர்கள். தவிரவும் சமாதானம் தொடர்பாக இவர்களது கடந்தகால நடவடிக்கைகள் காரணமாகத் தமிழ் மக்கள் மத்தியில் இவர்களுக்கு ஒரு நல்லபிப்பிராயமும் உண்டு. எனவே புலிகளின் மனதை மாற்றி இணங்க வைக்க இவர்களுக்கு முடியும் என்று அரசு தரப்பினருக்கு நம்பிக்கை இருந்தது. தவிரவும், புலிகள் இவர்களுக்கு இணங்காத பட்சத்தில் சமாதானத்திற்கு எதிரானவர்கள் புலிகளே என்ற அபிப்பிராயம், அரசு தரப்பின் ஊடாக அல்லாமல் இவர்கள் போன்ற சமாதானத்திற்காக இயங்கும் தனிநபர்கள் ஊடாக வெளிவருவது சிறப்பானது என்று அரசாங்கம் கணக்குப் போட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் வந்த பின்னும் ஒரு நாள் தங்கியிருந்து, புலிகளின் கோரிக்கைகளின் நியாயத்தன்மையை நேரடியாக அவதானிக்க, மீன்பிடித்துறைமுகங்கள் போன்றவற்றையும் பார்வையிட்ட பின் அவர்கள் திரும்பி வந்து ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார்கள். இவர்களது அபிப்பிராயங்கள் அரசுக்கு தமது முடிவுகளை - குறிப்பாக ஜனாதிபதிக்கு - மாற்ற வைத்திருக்க வேண்டும்!

ஏனென்றால் இந்தச் சந்திப்பின் பின்னர், பொருளாதார தடைநீக்கம் செய்வதாகக் கூறப்பட்ட பொருட்களை வடக்குக்கு எடுத்துச் செல்வதற்குத் தொடர்ந்தும் நிலவும் முட்டுக்கட்டைகளை நீக்கும் விதத்தில், புலிகள் கேட்டுக்கொண்டபடி அவை வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி, புலிகளுக்கு தமது நிலைப்பாட்டை விளக்கி இன்னொரு கடிதம் எழுதியுள்ளார். இக்கடிதத்தில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மீதான தடைநீக்கம் மட்டுமல்ல, பூநகரி விவகாரம் தொடர்பாகவும் ஆலோசிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

19ம் திகதிய காலக்கெடுவுக்கு இன்னும் இரண்டு நாட்களே இருக்கும் நிலையில் புலிகள் இக்கடிதத்தை அவசர அவசரமாகப் பரிசீலித்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அரசாங்கத்திற்கு இரண்டு முனைகளில் நெருக்கடி தோன்றியுள்ளது. புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது தம்முடன் கலந்தாலோசிக்காமல், ஜனாதிபதி தம்பாட்டுக்கு நடந்து கொள்கிறார் என்றும், வடக்கு கிழக்கு இணைப்பை நாம் ஏற்கத் தயாரில்லை என்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் டி.யூ.என்.எப். (லலித் பிரிவு) தெரிவித்துள்ளது. அரசாங்கத்தில் பங்குவகிக்கும் எம்மைவிட வெளியில் உள்ள கட்சிகளிடம் அரசு நம்பிக்கை வைத்துள்ளதாக தெரிகிறது என்றும் தாம் இதன் மூலம் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் இப்பிரிவு தெரிவித்துள்ளது. அடுத்த நெருக்கடியை தோற்றுவித்திருப்பவர் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இன்னொருவரான முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப் அவர்கள். கிழக்கில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்பட்டால் தாம் அரசை விட்டு விலக வேண்டி வரலாம் என்று அறிவித்துள்ளார் அவர்.

ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் என்ற நிலை ஜனாதிபதிக்கு.

தான் முன்வைக்கும் சரியான அரசியல் தீர்வு ஒன்றினை நோக்கி அனைத்து சக்திகளையும் - சமாதானத்தில் நம்பிக்கையுள்ள அனைத்து சக்திகளையும் - வென்றெடுத்து அதை நடைமுறைப்படுத்த அவர்களது ஆதரவைத்திரட்டும் முயற்சியில் இறங்குவதற்குப் பதில், தன்னுடன் உள்ளவர்கள் புலிகள், இடைத்தரகர்கள் என்று ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்த முயன்றால் இத்தகைய ஒரு நிலைமை தவிர்க்க முடியாதது தான்.

கிழக்கில் புலிகள் ஆயுதத்துடன் திரிவது, வடக்குக் கிழக்கு இணைப்பு போன்றவற்றால் அரசுக்குள்ளே எழுந்துள்ள நெருக்கடிகள், அரசாங்கத்தின் இனப்பிரச்சினை தொடர்பாக எத்தகைய தெளிவான முடிவுக்கும் இன்னமும் வரவில்லை என்பதையே காட்டுகின்றன.

பலவீனமான அரசாங்கமொன்றை கொண்டுள்ள ஜனாதிபதி இனப்பிரச்சினை போன்றதொரு பாரிய பிரச்சினையை தீர்ப்பதில் நம்பிக்கை வைத்துச்செயல்பட வேண்டியது மக்களிடமே என்பதை மறந்துவிடக்கூடாது. எப்போதும் நியாயமானதும் சரியானதுமான தீர்வை மக்கள் ஆதரிப்பார்கள் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் அவரோ, தமது நிலைப்பாட்டை இன்னமும் வெளிப்படையாக வைக்காமல் ''இராஜதந்திர'' நடவடிக்கைகளிலேயே கவனம் செலுத்தி வருவதாகத் தெரிகிறது.

ஒரு புறத்தில் இங்குள்ள பத்திரிகைகளும், இனவாதிகளும் ஜனாதிபதி புலியின் வாலைப்பிடித்துக் கொண்டு ஆடுகிறார் என்றும், புலிகளுக்கு விட்டுக்கொடுக்கும் ஒவ்வொரு விட்டுக்கொடுப்பும், பலத்தபின் விளைவுகட்கு இட்டுச் செல்லும் என்றும் எதிர்ப்பிரச்சாரம் செய்யும் நிலையில், டி.யூ.என்.எப்., முஸ்லீம் காங்கிரஸ் போன்ற தமது சொந்த அரசியல் லாபங்களையே முதன்மைப்படுத்தும் கட்சிகளைத் தன்னகத்தே கொண்ட அரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி கவனமாக இருக்க வேண்டும்!

''அரசியல் தீர்வு'' முன்வைக்கப்பட்டால் மட்டுமே மக்களின் நம்பிக்கையை ஜனாதிபதி பெற முடியும். மக்களின் நம்பிக்கையை அவர் பெறத்தவறினால், தமது அரசை நீண்டநாள் அவரால் பாதுகாத்து வைத்திருக்க முடியாது!

புலிகளுக்குப் போக்குக்காட்டி விடுவதோ, சகபாடிகளைத் தாஜா பண்ணுவதோ நீண்ட கால அரசியல் நலன்களுக்கு உகந்ததல்ல.

நீண்ட காலத்துக்குப் பிறகு, சகல இன மக்களதும் ஆதரவுடனும், நம்பிக்கையுடனும் ஆட்சியிலேறியவர் என்கிற முறையில், தான் எந்தவொரு குறிப்பிட்ட இனத்தினதும் பிரதிநிதியல்ல. முழு இலங்கை மக்களதும் பிரதிநிதி என்பதைப் புரிந்து கொண்டு செயற்படல் வேண்டும். காலத்தைக் கடத்தினால் சரி என்ற கோட்பாடு ஜனாதிபதியின் கோட்பாடாக இருக்க முடியாது.

வெல்லப்போவது புலிகளா அல்லது நானா போன்ற சராசரிகளின் சவால் விவகாரமாக இனப்பிரச்சினையை அவர் பார்ப்பதற்குப் பதில், நாட்டில் சமாதானம் வந்தால் அது எனது வெற்றி, எனது மக்களது வெற்றி என்று புரிந்துகொள்ள வேண்டும்; அதற்காகச் செயற்பட வேண்டும்.

அதுதான் வரலாற்று நாயகர்களின் வழி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# முஸ்லீம் மக்களும் மலையக மக்களும்

வ.ஐ.ச.ஜெயபாலன்

முஸ்லீம் மக்களில் 60%க்கும் அதிகமான பகுதியினரும், மலையகத் தமிழர்களைப் பொறுத்து 90%க்கும் அதிகமான பகுதியினரும் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் வாழ்கின்றனர். மலையக மக்கள் என்ற பதம் 1981ம் ஆண்டு புள்ளிவிபரங்களில் இந்திய தமிழர் என்று உத்தியோகபூர்வமாக குறிப்பிடப் படுகிறவர்களையும் கொழும்பு, கம்பஹா மாவட்டங்கள் புறநீங்கலாக ஏனைய தென்னிலங்கை மாவட்டங்களில் இலங்கைத் தமிழர் என்று குறிப்பிடப்படுகின்றவர்களில் பெரும்பான்மையினரையும் உள்ளடக்கும் வரலாற்றுப்போக்கு கொழும்பு, கம்பஹா மாவட்டத்து இலங்கைத் தமிழர்களும், மலையகத் தமிழர்களின் அணியின் கீழ்ப்படுவார்கள் என்பதை கோடி காட்டி நிற்கின்றது. இந்தவகையில் தென்னிலங்கையில் சிங்களவருக்கு அடுத்த பெரிய இனக்குழுவாக மலையகத்தமிழர் (தென் இலங்கைத் தமிழர்) வளர்ச்சி பெற்று வருகின்றனர். இது காறும் அடிப்படை பாராளுமன்ற அரசியல் உரிமைகளை இழந்திருந்தமையால் தென்னிலங்கை இனத்துவ அரங்கில் சிங்களவருக்கு அடுத்ததாக முஸ்லீம் மக்களது நடவடிக்கைகள் மட்டுமே முதன்மைப்பட்டிருந்தது. மலையக தமிழர்களும் இந்திய வம்சாவழித் தமிழர்களாக சுருங்கிப்போயிருந்தார்கள். இன்று காலம் மாறியுள்ளது. புதிய நிலைமைகள் தென்னிலங்கை பாராளுமன்ற தேர்தல்களில் முஸ்லீம் மக்களது முக்கியத்துவத்தை ஏற்கெனவே பாதிக்கத் தொடங்கியுள்ளது.

மலையகத் தமிழர்களில் 60%த்துக்கும் அதிகமானவர்கள் ஹட்டன் மேட்டு நிலத்திலும், அதை சார்ந்த உயர் நிலங்களிலும் செறிந்து வாழ்கிறார்கள். இதைவிட இவர்களுள் 70% - 80% மக்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களாக இருப்பதில் அரசியல் அரங்கிற்கு வரமுன்னமே நீண்டகாலமாக தொழிற்சங்க ரீதியாக நிறுவன மயப்படுத்தப்பட்டவர்களாகவும், பொதுப் பிரச்சினைகளில் போராடி பலம் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இவை மலையக தமிழர்களுக்கு பலம் சேர்க்கும் அம்சங்கள். தென்னிலங்கையில் சிதறிவாழ்கிற மலையக தமிழர்களைக் கூட தொழிற்சங்க வலைப்பின்னல்கள் மத்திய மலைநாட்டுடன் ஏற்கனவே பிணைத்துள்ளமையும் இங்கே குறிப்பிடப்படவேண்டியதாகும்.

**தென்னிலங்கை முஸ்லீம்கள்:**

தென்னிலங்கையில் முஸ்லீம் மக்களுக்கு மலையக தமிழர்களை ஒத்த புவியியல் குவிவோ அல்லது புவியியல் தொடர்ச்சியோ இல்லை. மலையகத் தமிழர்களின் இரண்டு பெரும் பிரிவுகளான பெருந்தோட்டத் தொழிலாளர்கள், நகர்ப்புற நடுத்தரவர்க்கத்தினர் என்பவற்றுடன் ஒப்பிடும் போது தென்னிலங்கை முஸ்லீம் மக்களது பல்வேறு பிரிவினரின் பொருளாதார அரசியல் நலன்கள் கூட பெரிதும் ஒருமுகப்படவில்லை. இதைவிட இலங்கையில் நவீன அரசியல் ஆரம்பித்த காலங்களில் குறிப்பாக 1915ல் இடம்பெற்ற சிங்கள பேரினவாதிகளது முஸ்லீம் விரோத கலவரங்களின் பின் தென்னிலங்கை முஸ்லீம் மக்கள் ஒருவகை சரணாகதி மனோநிலைக்குள் வாழ்ந்து வருகின்றனர். புவியியல் தொடர்ச்சி இன்மையால் பிளவுபடுகிற முஸ்லீம் மக்களது எழுச்சிகள் (யாவும்) குறித்த பிரதேச மட்டத்திலான குறும் இனக்கலவரங்கள் அல்லது அரசபடை தாக்குதல்கள் மூலம் அரசுகளால் சீர்குலைக்கப்படுகிறதும் மீண்டும் சரணாகதி நிலைக்கு முஸ்லீம் மக்கள் தள்ளப்படுகிறதுமே தென்னிலங்கையின் வரலாறாகியுள்ளது. இந்நிலைமையின் பின்னணியில் முகிழ்த்துவரும் இளைய தலைமுறை முஸ்லீம் தலைமைத்துவம் பின்வரும் மூன்று விடயங்கள் தொடர்பாக தெளிவான ஆய்வுக் கண்ணோட்டத்தை வளர்த்திட வேண்டியது மிக மிக அவசியமாகும்.

*1.* முஸ்லீம் மக்களது புவியியல் சிதறல் தொடர்பாக எழுகிற அரசியல் நிறுவன நெருக்கடிகளை எப்படி வெற்றிகரமாக எதிர்கொள்வது.

*2.* தென்னிலங்கை அரசியல் அரங்கில் சமமாக பலப்பட்டுள்ள மலையகத் தமிழர்களை புரிந்து கொள்வது. மலையகத் தமிழர்களுடனான உறவுகளை பேரினவாத சக்திகள் பிரித்தாழும் அடிப்படையில் கையாள வழிவகுக்காதவகையில் அபிவிருத்தி செய்வதற்கான உத்திகளை அபிவிருத்தி செய்தல்.

3. சிங்கள தமிழ் நட்பு சக்திகளை புரிந்து கொள்வதும், செயற்பாட்டு அடிப்படையில் அவர்களுடன் ஒற்றுமைப்படுவதும்.

தென்னிலங்கை அரசியல் அரங்கில் மேற்படி மூன்று பிரச்சினைகளும் மலையகத் தமிழர்களாலும் எதிர்கொள்ளப்படுகிறது. எனவே இது தொடர்பான ஆய்வு அனுபவங்கள் இருதரப்பினராலும் பகிர்ந்து கொள்ளப்படக்கூடியவை. மலையக முஸ்லீம் மக்கள் ஒருவரிடம் இருந்து ஒருவர் கற்றுக் கொள்வதற்கும், தமிழ் சிங்கள இனத்துவ வரலாற்று அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்வதற்கும் நிரம்பவே உண்டு.

அண்மைக்கால நிகழ்வுகள் பல பதவி வழங்கல்களில் இருந்து தோட்டங்களில் இடம் பெறும் நிலப்பறிப்பு வரை கடந்த ஐம்பது வருடகாலமாக முஸ்லீம் மக்களை கையாண்ட வகையிலேயே சிங்களப் பேரினவாத அரசுகள் மலையக மக்களையும் கையாள முனைகிறது என்பதைத் தெட்டத்தெளிவாக காட்டுகிறது. தென்னிலங்கை அரசியல் அரங்கில் மட்டுமன்றி சமூக பொருளாதார அரங்கில் கூட மலையகத் தமிழர்களது தலை ஏற்கெனவே முஸ்லீம் மக்களது தலை வைக்கப்பட்ட பலிபீடத்திலேயே வைக்கப்பட்டுள்ளது என்பதை மலையகத் தமிழர்களும் உணருவது அவசியம். இத்தகைய பரஸ்பரம் புரிந்துணர்வையும் கலந்துரையாடல்களையும் முன்னெடுத்துச் செல்வதற்கான அவசியத்தை இது காறும் முஸ்லீம், மலையக தலைமைகள் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. எனது மலையக மக்களும் முஸ்லீம் மக்களும் என்ற கட்டுரைத் தொடரில் இருதரப்பினரும் உணரவேண்டிய சில உடனடிப்பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயவுள்ளேன்.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கினால் அனைவர்க்கும் தாழ்வு''



# முஸ்லீம் பிரதேசங்களை ஊவாவுடன் இணைப்பது இன்னொரு சதியே!

சிங்களப் பேரினவாதத்தின் அரசியல் கனவான ஒற்றையாட்சி முறை முழுமையாக சந்தேகிக்கப்படுமளவிற்கு இனப்பிரச்சினை தனது கோரமுகத்தை வெளிப்படுத்திவருகிறது. இவ்வாறானதொரு தேசியப் பிரச்சினையினை தீர்த்து சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காக வாக்குகளைப் பெற்று சிம்மாசனம் அமர்ந்துள்ள புதிய அரசாங்கம், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தனது விருப்பத்திற்கு அப்பால் சில வகையான முயற்சிகளைத் தொடர வேண்டிய புறவியல் சூழலிற்குள் தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான முயற்சியில் சமஷ்டி பற்றிய யோசனை தீவிரமாய் ஆராயப்பட்டு வருகின்றது. உத்தேச சமஷ்டித்தீர்விற்குள் கிழக்கு முஸ்லிம்கள் நிலை தொடர்பாக அரசாங்கம் ஆயினும் சரி, தமிழ்ப் புலிகளாயினும் சரி சரிவர சிந்தித்ததாக வில்லை என்பதே கவலையான விடயமாகும்.

மிக அண்மைக்காலத்திற்கு முன்பாக பேசப்பட்டுள்ள தீர்வு ஆலோசனைகளின் பிரகாரம் உத்தேச சமஷ்டிக்குள் அம்பாறையின் முஸ்லீம் தொகுதிகளை ஊவா மாகாணத்துடன் இணைப்பது தொடர்பாக ஆர்வம் காட்டப்படுகின்றது. குறுகிய அளவில் சிந்திக்குமிடத்து இவ்வாறான தீர்வுகள் சுவாரஸ்யமாக இருந்தாலும் நீண்டகால அடிப்படையில், தமிழ் - முஸ்லீம் ஒற்றுமையின் அடிப்படையிலும் முஸ்லிம்களது அரசியல் நலனின் அடிப்படையிலும் நோக்குமிடத்து இவ்வாறான செயற்பாடு தெளிவானதொரு அரசியல் படுகொலையாகவே அமையும்.

கிழக்கில் நிகழும் அரசியல் யதார்த்தம் தமிழ், முஸ்லீம் மக்களின் ஒற்றுமைக்குச் சாதகமானதாகவில்லை என்பது வெளிப்படையான சமாச்சாரமாகும். இவ்வாறான சூழலுக்குரிய காரணங்கள் துரதிர்ஷ்டமானவை. தமிழ், முஸ்லீம் சமூகத்தில் உள்ள இனவாதத் தலைமைகளே இதற்குரிய பொறுப்பான காரணம் என்பதும் வெளிப்படையானது. தமிழ்த் தேசியத்தை முன்னெடுப்பதாகச் சொல்லிக்கொண்ட தமிழ்ப் புலிகளும், முஸ்லீம் தேசியத்தைத் தூக்கிப்பிடிப்பதாக பெருமை பேசிய முஸ்லீம் காங்கிரஸ் தலைமையும் கிழக்கில் இனப்பகைமை உருவாகுவதற்குரிய பொறுப்பான குற்றத்தை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இவ்விரு தலைமைகளின் குறுங்குழுவாத நடவடிக்கைகளின் விளைவுகளினை இன்றுவரை நாம் சகல பரிமாணங்களிலும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆயினும் இவ்வாறான இனப்பகைமைகள் நிரந்தரமானதல்ல, முழுமையான இன உறவு என்பது சரியான அரசியல் நடவடிக்கைகளில் தங்கியுள்ளது. இது உத்தேச தீர்வு விவகாரத்திலிருந்து அந்நியமாகக்கூடிய நிலைமைகளே நீடித்துள்ளன.

கிழக்கின், அம்பாறை மாவட்டங்களின் பகுதிகள் ஊவா மாகாணத்துடன் இணைக்கப்படும் போது மட்டக்களப்பு மாவட்ட, திருமலை மாவட்ட மற்றும் வடபகுதி முஸ்லீம்களின் அரசியல், நிர்வாக நலன்கள் முழுமையான அளவில் கேள்விக்குரியதாகிவிடும்.

முஸ்லீம்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு எதிராகவே அமையும். இதன் இன்னொரு விளைவாக சிங்கள மாகாணத்துள் முஸ்லீம் பகுதி உள்ளடங்குவதுடன் முஸ்லீம் பாதுகாப்பு மற்றும் முஸ்லீம் தேசியமும் வினாவுக்கு உட்படுகின்றது.

தமிழ்த்தேசிய இனப்பிரச்சினை விரைவாய்த் தீர்க்கப்படவேண்டிய தேவை உள்ளது. இவ்வாறான ஒரு சூழலால்தான் குறுங்குழுவாத இயக்கங்களை அந்நியமாக்கலாம், ஆயின் முஸ்லீம்களுக்கான தீர்வு என்பதும், தமிழ்த்தேசிய இனப்பிரச்சினைத்தீர்வில் பிரிக்கமுடியாத விடயமாக அமைதல் வேண்டும்.

ஒருபுறம் தமிழ் இயக்கங்களில் இராணுவ நடவடிக்கைகள் மட்டக்களப்பு, திருமலை, மற்றும் வடக்கு முஸ்லீம்களுக்கு எதிராக மீளவும் ஓங்கக் காரணங்கள் உள்ளன. இது நீண்ட கால நோக்கில் முஸ்லீம்களது பாதுகாப்பிற்கு வசதியான வாய்ப்புக்களை ஏற்படுத்தாது. இதுவிடயத்தில் நிதானமாய் சிந்திப்பது ஆரோக்கியமானதாகும்.

மறுபுறமாக வளர்ந்து வரும் முஸ்லீம் தேசியத்தின் மூலாதாரக்கோரிக்கையான முஸ்லீம் நிர்வாக அலகுக் கோரிக்கையும் சாத்தியமற்றதாகவே காணப்படும். இது கிழக்கு வெறுமனே வடக்கு, கிழக்கு தமிழ்ப்பகுதிகளை ஒரு நிர்வாக அலகுக்குள் கொண்டுவருவதும் முஸ்லீம் பகுதிகளை ஊவாமாகாணத்துடன் இணைப்பதுமான செயல்படுகையானது நிலையான, கௌரவத்தீர்வுக்கு உதவப் போவதில்லை.

இலங்கைத்தமிழ்த் தேசிய இனத்தின் நீண்ட கால நட்பு இனம் முஸ்லீம்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் முஸ்லீம்களைத் திட்டவட்டமாகப் பிரிப்பதில் சிங்களப் பேரினவாதச் சக்திகளும் தமிழ் - முஸ்லீம் குறுங்குழுவாத அமைப்புக்களும் வெற்றி பெறுவதனை அனுமதிப்பது பரந்தளவான பின்னடைவாகும். இதுவிடயத்தில் இன ஒற்றுமையில் ஆர்வம் உள்ள முஸ்லீம், தமிழ், சிங்கள சக்திகள் தமது பங்களிப்பைச் செய்தல் வேண்டும். தமிழ்த் தேசிய இனத்திற்குரிய கௌரவபூர்வமான தீர்வுக்காய் உழைக்கும் அதேவேளை முஸ்லீம்களுக்கான சுயமான நிர்வாக அலகு பற்றியும், தனித்துவம் பற்றியும் தீட்சண்யமான முறையில், நீண்டகால அடிப்படையில் சிந்திப்பதும், அதற்காய் உழைப்பதும் சமாதானத்தை நேர்மையாய் நேசிக்கும் மனிதர்களது மறுக்கமுடியாத வரலாற்றுக்கடமையாகும். இதற்கு மாறான முஸ்லீம் பகுதிகள் ஊவா மாகாணத்துடன் இணைவதானது இன்னொரு அரசியல் சதியாகவே முடியும்.

ஆர்.எம்.இம்தியாஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கடற்புலிகளால் இலங்கை கடற்படையின் கட்டுப்பாடு கவிழ்கிறதா?

டி.சிவராம்





இன்று அரசு புலிகள் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறுமா, பெறாதா என்று பலரும் சிந்திக்கின்ற நிலையிலும், நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றினை இரு தரப்பினரும் இணைந்து நடைமுறைக்குக் கொண்டுவர காலதாமதமாகிச் செல்லும் சூழலிலும், இரண்டாம் ஈழப்போரின் முடிவில் காணப்பட்ட இராணுவச் சமநிலையை (Military Balance) சீர்தூக்கிப் பார்த்தல் அவசியம். இதில் மிக முக்கியமானதும் புதியதுமான பரிமாணம் எனச் சொல்லப்படக்கூடியது புலிகளின் கடற்பலமே. இரண்டாம் ஈழப் போரின் பலப்பரீட்சைகளில் ஒரு முக்கிய தீர்மானிக்கும் சக்தியாக புலிகளின் கடற்பலம் அமையவில்லை என்பது உண்மையாயினும், அதன் வளர்ச்சிப் போக்கானது திட்டவட்டமான முறையில் இராணுவச் சமநிலையை புலிகளுக்கு ஓரளவு சாதகமாகத் திருப்பிடக்கூடிய தன்மையைப் பெற்றுள்ளது எனக்கூறுவது மிகையாகாது. வடக்கில் பெரும் இராணுவத்தளங்களான பலாலி, காரைநகர், தீவுப்பகுதி, பூநகரி, ஆனையிறவு ஆகியனவற்றைப் பேணுவதற்கு இன்று கடல் மார்க்கமே அத்தியாவசியமாகிவிட்டது. இத்துடன் வடமாகாணத்தில் மன்னார்த்தீவு - வங்காலை, தள்ளாடி, மாந்தை உட்பட்ட பகுதிகளையும், முல்லைத்தீவு நகர முகாமையும் இராணுவரீதியாகத் தக்க வைத்துக்கொள்வதற்கும் இலங்கை அரசிற்குக் கடல் வழிதான் பிரதானமானது. இரண்டாம் ஈழப்போரின் ஆரம்பத்திலிருந்து தரைச்சண்டைகளில் புலிகள் வெளிப்படுத்திய துரித வளர்ச்சியின் காரணமாக இராணுவம் வடக்கில் தன் படைபலத்தை தரைமார்க்கமாகப் பேணும் எண்ணத்தை அநேகமாகக் கைவிட்டு விட்டதென்றே கூறலாம். இராணுவத்தின் கிளாலியை நோக்கிய படையெடுப்பின் போது நடைபெற்ற புலோப்பளைச்சமர் வடக்கில் தரை வழிப்படை நகர்த்தல் என்ற சாத்தியப்பாட்டை இலங்கை அரசு மீண்டும் எண்ணிப் பார்க்காதிருக்கும் ஒரு சூழலைத்தோற்றுவித்தது. இங்ஙனமாகத் தரைவழிப்படை நகர்வும், அதோடொட்டிய பிரதான வழங்கற்பாதைகளைப் (Main Supply Routes - MSR) பேணுகின்ற சாத்தியமும் இல்லாது போனநிலையில், புலிகளிடம் தற்செயலாக விமான எதிர்ப்புச் சுடுதிறன் கிடைத்துவிட்டால், கடல் மார்க்கமாக மட்டுமே வடக்கில் படைகளை வைத்திருக்கலாம் என இலங்கை அரசிற்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது. எனவே இரண்டாம் ஈழப்போரின் நடுக்கூற்றிலே இலங்கை அரசு வடமாகாணத்தில் தன். அனைத்துத் தளங்களையும் கரையோரப்பிரதேசங்களுக்கு நகர்த்தியது. ஆனையிறவு முகாமிற்குக் கடல் மார்க்க வழங்கலை சாத்தியமாக்கக் கூடிய முறையில் வெற்றிலைக்கேணி ஊடாக ஒரு இராணுவ வேலியை (Corridor) அமைத்தது. ஆகவே இரண்டாம் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் வடமாகாணத்தில் உள்ள இலங்கை அரசின் இராணுவ பலமானது கடல் வழிகளிலேயே தங்கியிருக்க வேண்டியதாயிற்று. மன்னார்த்தீவு, மற்றும் மன்னார்ப் பெரு நிலப்பரப்பின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் ஆகியவற்றைத் தக்கவைக்க இலங்கைக் கடற்படையின் மேற்குப் பிராந்தியத் தளங்களும், முல்லைத்தீவு வெற்றிலைக்கேணி - ஆனையிறவு, பலாலி, காரைநகர், தீவுப்பகுதி, பூநகரி ஆகியவற்றைப் பேணிவர திருமலைக்கடற்தளமும் இன்றியமையாதனவாகியுள்ளன.

மேற்குக்கரையோரத்தில் உள்ள கொழும்பு, றங்கல (வெலிசற), மற்றும் கற்பிட்டித்தளங்கள் மூலமாக மேற்குக்கடற் பிராந்தியம், மன்னார்க்குடா (Gulf of Mannar) ஆகியவற்றினை இலங்கைக் கடற்படை கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. ஆனால் புலிகள் 1992இன் பிற்கூற்றில் மன்னாரின் தென்கரையோரம் ஒரு கடற்தளத்தை அமைத்தபின்னர் படிப்படியாக மன்னார்க்குடாவில் கடற்படையினரின் தங்குதடையற்ற போக்குவரத்து சற்று சிக்கலாகத் தொடங்கிற்று. புலிகள் தரை மூலமாகவும், கடல் வழியாகவும் ஒருங்கிணைந்த ஒரு தாக்குதலை மேற்கொள்ளலாம் என எதிர்பார்த்த இராணுவம் இதன் பின்னர் சிலாபத்துறையில் இருந்த தனது முகாமையும் சிறு கடற்தளத்தையும் அகற்றியது. மன்னார் - புத்தளம் மாவட்ட எல்லையில் காணப்படும் முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி (முன்னர் முஸ்லீம்கள் இருந்த இடம்), பூக்குளம் பிரதேசக்கரையோரத்தில் நிறுவப்பட்டு வளர்ந்து வந்த கடற்புலிகளின் தளமும் சிலாபத்துறை முகாம் அகற்றப்பட்டமைக்கு ஒரு கார்ணம் எனலாம் சிலாபத்துறையில் இராணுவமும் கடற்படையும் நீங்கிய சிறிது காலத்தில் புலிகள் அங்கும் ஓர் கடற்புலித் தளத்தை நிறுவி வளர்க்கலாயினர். மன்னார் கரைப்பிராந்தியத்தின் தென்பகுதியில் இயங்கி வளர்ந்து வந்த இவ்விரு கடற்புலித்தளங்களின் நடவடிக்கைகள் காரணமாக கற்பிட்டிக் கடற்படைத்தளமானது மன்னார்க்குடாக்கடலின் ஊடாக மன்னார்த்தீவுக்கும், பெரு நிலப்பரப்பின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் இராணுவத் தளபாடங்கள், உணவுப்பண்டங்கள், கட்டிடப் பொருட்கள் மற்றும் இன்னோரன்ன விடயங்களை அனுப்பி வைப்பது கடினமாயிற்று. அத்துடன் கற்பிட்டிக்கு மேலாகக் காணப்படும் காரைதீவையும் அதை அண்டிய சிறிய தீவுகளையும் புலிகளின் போக்குவரத்தில் இருந்து பாதுகாப்பதென்பதும் கடினமாயிற்று. அவ்விடங்களின் புலிகள் வரிகள் அறவிடுவதையும், மற்றும் படகுகள், இயந்திரங்கள் என்பவற்றை எடுத்துச் செல்வதையும் கற்பிட்டிக் கடற்தளத்தால் பெரிதாகத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதற்குரிய பலமும் அவர்களிடம் இருந்ததாக அவர்கள் கருதவில்லை. இதன் காரணமாக மன்னார்க்குடாக்கடலினை இலங்கைக் கடற்படையினர் கட்டுப்படுத்திய நிலை மாறிற்று. அத்துடன் இலங்கையின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மேற்குக்கரையோரமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாயிற்று. கொழும்புத் துறைமுகத்தை நோக்கிய வர்த்தகக் கப்பற் பாதைகள் (Merchant Shipping Lanes) அனைத்தும் மன்னார்க்குடாக் கடலின் ஊடாகவோ அல்லது அதையண்டியோ அமைந்துள்ளன என்பது மிக முக்கியமான விடயம்.

இப்பாதைகளை ஒரு நாட்டின் பொருளாதார உயிர்நாடி எனில் மிகையாகாது. 19ம், 20ம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற நாடுகளுக்கிடையிலான பிரதான போர்கள் அனைத்திலுமே இவ்வாறான வர்த்தகக் கப்பற்பாதைகளை முற்றாகவே துண்டித்துவிடுவதனை குறிக்கோளாகக் கொண்ட கடற் சண்டைகள் முக்கிய பங்கு வகித்ததை நாம் கவனிக்க வேண்டும். இதற்கு முக்கிய உதாரணமாக இரண்டாம் உலகப்போரின் செல்நெறியைத் தீர்மானித்த அத்திலாந்திக் சமுத்திரக் கடற்போரைக் குறிப்பிடலாம். ஜேர்மனியுடைய நீர் மூழ்கிகளாகவும், போர்ப்படகுகளாகவும் தேவைக்கேற்ப இயங்கக்கூடிய தன்மை கொண்ட (U. Boat) என்பவை அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாக அமெரிக்காவில் இருந்து நேசநாடுகளை நோக்கிய அனைத்து வர்த்தகக் கப்பற் போக்குவரத்துப் பாதைகளையும் துண்டிக்க முற்பட்டன.

இரண்டாம் உலகப்போரின் ஆரம்ப வருடங்களில் இதில் கணிசமான வெற்றியும் கண்டன. தொடர்ந்து ஜேர்மனியினால் இந்நிலையைப் பேணியிருக்க முடிந்திருந்தால் நேசநாடுகள் வீழ்ந்திருக்கும். ஆனால் அமெரிக்காவின் தலையீடு காரணமாகவும், றேடார் கண்டுபிடிக்கப்பட்டமையாலும் நேசநாடுகளின் வர்த்தகக் கப்பல் அணிகளின் (Convoys) பாதுகாப்பு வியூகங்களில் ஏற்பட்ட கணிசமான தந்திரோபாய முன்னேற்றங்கள் காரணமாகவும் நிலைமை ஜேர்மனிக்கு சாதகமில்லாமற் போயிற்று. இப்படிப் பல உதாரணங்களை நாம் காணலாம். ஒரு நாட்டிற்கான வர்த்தகக் . கப்பற் பாதைகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டால் அல்லது கடும் அச்சுறுத்தலுக்குள்ளானால் அந்நாடு ஒருசில மாதங்களில் சரணாகதி நிலையை அடையக்கூடிய சூழல் தோன்றலாம். எனவே மன்னார்க்குடாவிலும் இலங்கையின் மேற்குக்கரைப் பிராந்தியத்தின் பல பகுதிகளிலும் புலிகளின் கடலாதிக்கம் வளர்ச்சியடையுமானால் மன்னார்த்தீவையும் இராணுவத்தின் கையிலிருக்கும் மன்னார்ப்பெரு நிலப்பரப்பின் சில பகுதிகளையும் தக்கவைத்துக்கொள்வதென்பது கடினமாகிவிடும் என்பது மட்டுமல்ல, இலங்கைப் பொருளாதாரத்தின் மூலாதாரமும் சிக்கலுக்குள்ளாகும். மன்னார்க்குடாவில் இலங்கைக் கடற்படையின் ரோந்துக்கப்பலான சாகரவர்த்தனவிற்கு இரண்டாம் ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் விழுந்த மரண அடியுடன் நாம் மேற்சொன்ன கடற்பிராந்தியத்தில் ஆதிக்கநிலை ஓரளவு புலிகளின் கைகளுக்குள் செல்லக் கூடிய அறிகுறி தோன்றிற்று. இவ்விடத்தின் நாம் கடற்பிராந்தியங்களில் ''ஆதிக்கம்'' ''கட்டுப்பாடு என்னும் இரு கேந்திர எண்ணக்கருக்களை (Strategic Concepts) ஆராய்வது முக்கியமாகும்.

முதலாவதாக '' கட்டுப்பாடு'' ((Control) என நாம் கடற்பிராந்திய விவகாரங்களில் எதைக்கருதுகிறோம் என்று பார்க்கலாம். ஒரு நாட்டினுடைய கரைகளில் இருந்து சர்வதேச ரீதியாகச் சட்டப்படி வரையறுக்கப்பட்ட அரசிற்குட்பட்ட கடலளவு அந்நாட்டின் கடற்பிராந்தியம் (Maritime Zone) எனப்படும். இது அந்நாட்டின் இறைமைக்குட்பட்ட பிரதேசமாகும். இதற்குள் தன் முன்அனுமதியின்றி நிகழும் எந்தவொரு நடமாட்டத்தையும் அறிந்து தடுக்கும் ஒரு அரசின் சக்தியையே நாம் கட்டுப்பாடு என்கிறோம். கள்ளக்கடத்தல் போன்ற நிகழ்தல் எப்போதும் சாத்தியமெனினும், பெயரளவிலாவது ஒரு கடற்படையின் றேடார் வசதியின், கரைக்காவல் (Coast Guard ) மற்றும் சுங்கத்துறை ஆகியன ஒரு அரசிற்கு இருக்குமாயின் ''கட்டுப்பாடு'' என்பது கருத்தளவில் நடைமுறையில் உள்ளது எனக்கொள்ளலாம். அதாவது தன் கடற்பிராந்தியத்தில் தன் இறைமையையும் (Sovereignty) , அதிகாரத்தையும் (Authority). வெளிப்படையாக எவரும் மீறாது பார்த்துக் கொள்ளும் ஒரு அரசின் கடல்வலுவைக் ''கட்டுப்பாடு'' என்கிறோம். கருத்தளவிற் கட்டுப்பாடு (Control in Theory) என்பது என்னைப் பொறுத்தவரை 1941இல் அத்திலாந்திக் கடற்சண்டைகளின் காரணமாகத் துரிதமாகப் பரீட்சிக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட றேடார் (RADAR - Radio Detection and Ranging) போன்ற பல கருவிகள் மூலமாகவே ''கருத்தளவிற் கட்டுப்பாடு'' என்னும் நிலை சாத்தியமாகிறது. ஏனெனின் இச்சாதனங்களின் வருகைக்குப் பின்னர்தான் ஒரு நாட்டின் கடற் பிராந்தியத்தினுள் நுழையும் எந்தவொரு கலத்தையும் கருத்தளவில் (In Theory) அறியும் நிலை தோன்றிற்று. ''கட்டுப்பாடு'' சாத்தியமாவதற்கு இது இன்றியமையாதது. மறுகையிற் பார்க்கும் போது ''ஆதிக்கநிலை'' என்பது ஒரு அரசு தனதெனக்கருதும் கடற்பிராந்தியமொன்றில் தனது கடற்படைப்பலத்தின் மூலம் மாற்றாரின் நடமாட்டத்தை முறியடிக்கும் தகைமையையே கருதுகிறோம். அத்துடன் தன்னுடனான வர்த்தகப் கப்பற்பாதைகளை காக்கும் கடற்திறனையும் (Naval Power) ''ஆதிக்கம்'' என்னும் கேந்திர எண்ணக்கரு உள்ளடக்குகிறது. றேடாருக்கு முற்பட்ட காலங்களில் கடல் சம்பந்தப்பட்ட விடயங்களில் ''ஆதிக்கம்'' பற்றிப் பேசலே பொருந்தும். உதாரணமாகச் சோழப்பேரரசு 12ம், 13ம் நூற்றாண்டுகளில் வங்காள விரிகுடாவில் கொண்டிருந்த கடற்படை வலுவை ''ஆதிக்கம்'' என்னும் எண்ணக்கரு மூலமாகவே ஆராய வேண்டும். கிழக்காசிய, தென்கிழக்காசிய நாடுகளுடனான (சீனா உட்பட) தன்முக்கிய வர்த்தகக் கப்பற் பாதைகளையும் காக்கும் கடற்படைப்பலத்தையும் சோழப்பேரரசின் கடலாதிக்கம் பற்றிப் பேசுகையில் நாம் கருத்திற் கொள்கிறோம்.

உலக நாடொன்றின் கடற்பிராந்தியத்தின் மீதான கட்டுப்பாட்டு நிலையையும், ஆதிக்க நிலையையும் இல்லாதொழிக்கும் அல்லது பலவீனமாக்கும் திறன் வல்லரசுகளுக்கே உண்டு. (உ+ம்:- புரட்சிக்குப்பிந்திய நிக்கராகுவாவின் கடலில் அமெரிக்காவின் தலையீடு)

**நவீன உலக வரலாற்றில் கடற்புலிகளே முதன் முறையாக ஒரு இறைமையுள்ள நாட்டின் கடற்பிராந்தியக் ''கட்டுப்பாடு'' என்பதற்கு நேரடிச்சவாலை விடுத்த அரசல்லாத சக்தியாவர்.**

''கட்டுப்பாடு'' என்னும் கேந்திர எண்ணக்கரு ஒரு நாட்டின் பிராந்திய ஒருமையுடனும் (Territorial Integrity) அதிலிருந்து தோன்றும் இறைமையுடனும் பின்னிப்பிணைந்தது என்பதை நாம் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும். ''கருத்தளவிற் கட்டுப்பாடு'' என்பது இன்று இலங்கையரசின் சட்டரீதியான கடற்பிராந்தியத்துள் அற்றுப் போய்விட்டது, கடற்புலிகளின் வருகையால். இது, நாம் முற்கூறியது போல, நவீன இராணுவ வரலாற்றின் ஏடுகளின் ஒரு புது அத்தியாயமன்றி வேறில்லை என்பதை இராணுவ வரலாறு கற்றவர் அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

இரண்டாம் ஈழப்போரின் புதிய பரிமாணம் புலிகளின் தரைப்போர்த்திறன் வளர்ச்சி மட்டுமல்ல, கடற்புலிகளின் கடல் கெரில்லா போர்த்திறனும் ஆகும். நவீன இராணுவவியலுக்கு இது புதியதோர் கருத்தியற் பரிமாணம் எனலாம்.

அடுத்த இதழில் முடியும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






இன்றைய இலங்கையின் சனத்தொகையில் 49% த்தினர் பெண்களாவர். இது ஏறத்தாழ நாட்டின் சனத்தொகையில் அரைப் பங்காகும். இருப்பினும் இவ்வீதாசாரத்திற்கேற்ப பெண்கள் ஆட்சி நிர்வாகத் துறைகளில் பங்குபற்றல் இல்லாமல் இருக்கின்றனர்.

பாராளுமன்றத்தில் இதுவரை பெண்களின் பிரதிநிதித்துவ வீதாசாரம் என்பது 5% க்கும் குறைவானதாகவே இருந்துள்ளது. இவ்வாறு அரசியலில் பங்கு கொள்ளும் பெண்களின் விகிதாசாரம் குறைவானதாக காணப்பட்ட போதும், இதுவரை இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை பெண்கள், மூன்று தடவைகள் கைப்பற்றி, ஆட்சி அதிகாரம் செலுத்தும் அளவிற்கு இருந்துள்ளனர். அத்துடன் காலத்துக்கு காலம் அமைச்சரவைகளிலும் பல பதவிகள்ள வகித்து அமைச்சு விவகாரங்களிலும் பங்காற்றி இருக்கின்றனர்.

ஆனாலும் இவற்றாலெல்லாம் பெண்களின் உரிமைகள் வென்றெடுக்கப்பட்டனவா? அரசியலுக்கு வந்த பெண்கள் பெண்களைத்தான் பிரதிநிதித்துவப்படுத்தினார்களா என்ற கேள்விகளை எழுப்பினால் சூனியமே மிஞ்சும்.

எனவே, ஆட்சி அதிகாரப் பங்கு பற்றுதலை நோக்கிய அடுத்தகட்ட வளர்ச்சி பற்றி சிந்திப்பதனால் நமது பெண்களின் கடந்த கால அரசியல் பங்களிப்பை மீள தொகுத்துப் பார்த்தல் அவசியமாகும்.

அந்த வகையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமைக்கான அன்றைய கால கோரிக்கைகள், கடந்து வந்த பாதைகள், மற்றும் இன்றும் சமூகத்தில் பெண்களின் பின்தங்கிய நிலை என்பவற்றை பற்றிய ஒரு மீள்பார்வை மேற்கொள்வதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

இலங்கையின் சுதந்திரம் 'கத்தியின்றி இரத்தமின்றி' பெறப்பட்டது - என்று கூறப்படுவதைப்போல் இலங்கையில் பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கான வாக்குரிமையையும் நீண்டகால முயற்சிப்படி நிலைகள் எதுவும் இன்றி பெற்றுக்கொள்ளப்பட்டதேயாகும்.

பெண்களின் அரசியல் சமவுரிமை என்பது பெண்ணியத்தில் வலியுறுத்தப்படும் முக்கிய அம்சங்களில் ஒன்றாக காணப்படுகிறது. என்றாலும் அவ்வுரிமைக்கான விஷேட முயற்சிகளெதுவுமின்றி 'ஓடுமாற்றில் கூடச்சேர்ந்தோடும் கிளைநதி' போல இயல்பாக ஓடும் அரசியல் ஓட்டத்துடன் சேர்ந்து கொள்வதே நடைமுறை வழக்கமாகிவிட்டது என்பதை மறுக்க முடியாதுள்ளது.

## பெண்கள் வாக்குரிமை

இலங்கைப் பெண்களின் வாக்குரிமைப் போராட்டம் தொடர்பாக விளங்கிக்கொள்வதற்கு ஏனைய உலக நாடுகளில் இப்போராட்டம் தொடர்பாக என்ன நடந்து கொண்டிருந்தது என்று தெரிந்து கொள்வது உதவியாக இருக்கும்.

பொதுவாக இன்று நடைமுறையிலுள்ள தந்தை வழிச்சமூக ஆணாதிக்க சூழ்நிலையானது குடும்ப அமைப்புமுறையின் மூலம், பெண்களிடம் பொறுப்புக்களைச் சுமத்திவிட்டுள்ளது. அச்சுமைகளிலிருந்து ஆணினம் தான் விடுதலையடைவதற்காக பெண்களைக் குடும்பச் சூழலைவிட்டு வெளியேற முடியாம நிர்ப்பந்தத்திற்குட்படுத்தி வருகிறது. ஆதிக்கம் செலுத்தும் உரிமை ஆணிடமிருந்து பெண்களின் கைக்கு மாறிவிடும் என்ற அச்சத்திலும், அடக்கி ஆளும் அதிகாரத்தை ஆண்மட்டுமே வைத்திருக்க வேண்டும் என்ற மரபுவழி கருத்தியல் குணாம்சத்திலுமே இது ஊன்றியுள்ளது எனக் கூறலாம்.

மேற்படி கருத்தோட்டத்தில் இருந்தே பல நாடுகள் பெண்களுக்கான வாக்குரிமையை வழங்குவதில் மறுப்பு தெரிவித்திருந்தன, அல்லது தாமதப்படுத்தின.

உலகிலேயே பெண்களுக்கு முதல் முதலில வாக்குரிமை வழங்கிய நாடு நியூசிலாந்து. இங்கு 1918ம் ஆண்டு பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டது.

ஜனநாயகக் கோட்பாடுகளை உலகிற்கு அறிமுகப்படுத்திய மேற்கத்தேய நாடுகள் கூட பெண்களுக்கான ஜனநாயக பாரபட்சத்தை காட்டத்தவறவில்லை.

பாராளுமன்றம் தோன்றிய நாடான பிரித்தானியாவில் பல ஆண்டுகளாக 'வாக்குரிமைப் போராட்டம்' நடந்து வந்துள்ளது. பல ஆண்டு காலமாக அங்கு சொத்து படைத்தவருக்கும், கல்வியறிவு படைத்தவர்களுக்கும் மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. இங்கிலாந்தில் 1918 இல் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் கூட 30 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கும் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும் மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. 1928 இல் கொண்டு வரப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் மூலமே

**"கடவுளின் விருப்பப்படி பெண்கள் இந்த உலகத்தில் கீழானவர்களாக உள்ளமை எதற்காக என்பது பற்றி நீங்கள் அறிய நியாயமில்லை"**

**-பொன். இராமநாதன்**



கோ. நடேசய்யர்

21 வயதுக்கு மேற்பட்ட பெண்களும் வாக்குரிமை பெற்றனர்.

உலகில் பல நாடுகள் பெண்களுக்கான வாக்குரிமை வழங்குவதில் மிகவும் தயக்கம் காட்டியிருந்தன. பிரான்ஸ் நாட்டில் பெண்கள் 1945 இலேயே வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டனர்.

ஜப்பானில் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் 1947இல் அமெரிக்காவின் தலையீட்டுடன் நடந்த தேர்தலிலேயே ஜப்பானியப் பெண்கள் முதன் முதலில் வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டனர். அதற்கு முன் ஜப்பானில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. அவர்கள் தங்களுக்கு எழுதப்படிக்கத் தெரியும் என்பதை தெரிவிப்பதற்கு தேர்தலின் போது வாக்குச் சீட்டில் அவர்களின் பெயரை எழுதி நிரூபிக்க வேண்டும்.

ஜனநாயகம் பற்றிப் பேசிய பல மேலைத்தேய முதலாளித்துவ நாடுகள் பல ஜனநாயக ரீதியில் பெண்களுக்கான சம வாக்குரிமையை வழங்குவதில் - தயக்கம் காட்டின - தாமதித்தன.

### இலங்கைப் பெண்களின் வாக்குரிமைப் போராட்டம்

இலங்கையை இறுதியாக ஆண்ட காலனியாதிக்க ஆங்கிலேயர்கள் (1796 - 1948) தமது காலனித்துவ நாடுகளில் எழுந்து வந்த தேசியவாத எழுச்சி காரணமாக அவர்களுக்கான தூசான சலுகைகளை வழங்கி அவற்றைத் தணிக்க முயன்றனர். அந்த வகையில் இலங்கையின் பிரச்சினைகளை ஆராய்ந்து அரசியலமைப்பு சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்காக ''டொனமூர்'' என்பவரின் தலைமையிலான குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பி வைத்தனர்

1927 டிசம்பர் தொடக்கம் 1928 ஜனவரி வரை அவர்கள் ஆணைக் குழுவொன்றை அமைத்து விசாரணை நடத்தி அறிக்கையொன்றை சமர்ப்பித்தனர். இவ்வறிக்கையின் படி இலங்கைக்கு 'சர்வஜன வாக்குரிமை' (Universal Franchise) வழங்கினர். பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளில் சர்வஜன வாக்குரிமையைப் பெற்ற முதல் நாடு இலங்கை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

டொனமூர் அறிக்கையில் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது ''ஆண்களாயின் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், பெண்களாயின் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் என மட்டுப்ப



பொன். இராமநாதன்

டுத்தப்பட்டிருந்தது. இதற்கான காரணம் அன்று டொனமூர் குழுவின் முன் பெண்கள் வாக்குரிமையைப் பற்றிய சிபாரிசை முன் வைப்பதில் தேசிய தலைவர்கள் எனக் கூறப்படுவோரில் பெரும்பாலோனார் தயக்கம் காட்டியிருந்ததுடன் பெண்களின் வாக்குரிமைக்கெதிரானவர்களும் பெருமளவில் இருந்தது தான். இலங்கை தேசிய காங்கிரஸ் போன்றன கூட ஆண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுவதையே வலியுறுத்தியிருந்தன' (இவ்வமைப்போடு சில அமைப்புகள் சேர்ந்தே பிற் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது.)

இலங்கை தேசிய காங்கிரஸானது இலங்கைக்கான பூரண சுயாட்சி கோரிக்கையை முன்வைத்து போராடியிருக்கவில்லை. அரச அதிகாரத்துவத்தை அரசியல் சீர்திருத்தத்துக்கூடாக கொஞ்சம் கொஞ்சமாக பெற விரும்பினர். இலங்கை தேசிய காங்கிரஸின் நடவடிக்கைகளில் ஆரம்ப காலங்களில் ஈடுபட்ட பெண்களில் டொக்டர் நல்லம்மா முருகேசு, ஐ.கங்குலி, மகேஸ்வரி செகராஜசிங்கம் ஆகியோர் முக்கியமானவர்கள். பெண்களுக்கான வாக்குரிமை பற்றி இலங்கை தேசிய காங்கிரஸ் வலியுறுத்த வேண்டும் என்று இவர்கள் கட்சிக்குள் அமுக்கக் குழுவாக செயற்பட்டிருக்கவில்லையென்றே தெரிகிறது.

சேர்.பொன்னம்பலம் இராமநாதன் போன்றோர் கூட பெண்களுக்கு வாக்குரிமை வழங்கத் தேவையில்லை என டொனமூர் குழுவினரிடம் முறையிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி ''தேசபக்தன்'' (13-4-1928) இதழில் மீனாட்சியம்மாள் (இவர் மலையகத்தின் பழம் பெரும் தலைவர் கோ.நடேசய்யரின் மனைவி) எழுதிய கட்டுரையில்;

**''இந்தியாவை விட முற்போக்கடைந்திருப்பதாக கூறப்படும் இலங்கையில் ஸ்திரிகளுக்கு சுதந்திரம் கொடுக்கக்கூடாது என்றால் இலங்கை எவ்விதத்தில் முற்போக்கடைந்திருக்கிறது..? சேர் இராமநாதன் போன்றோர்க்கு இலங்கையில், பெண்கள் பொது சன சேவையில் ஈடுபடக்கூடாதென்றால் ஒரு பெண் கூட எக்காலத்திலும் வெளியில் வரக்கூடாது என்று ஒரு சட்டத்தை நிரந்தமாக ஏற்படுத்த முயற்சித்தல் மேலாகும்''** எனக் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் அரசாங்க சபை சர்வஜன வாக்குரிமையை உள்ளடக்கியிருந்த டொனமூர் யாப்பு 2 மேலதிக வாக்குகளாலேயே நிறைவேறியிருந்தது. சேர் பொன்னம்பலம் இராமநாதன் உட்பட பலர் எதிர்த்தே வாக்களித்திருந்தனர்.

1928ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ம் திகதி அரசாங்க சபையில் 'டொனமூர்' யாப்பு தொடர்பான விவாதத்தின் போது பொன்னம்பலம் இராமநாதன் கீழ் வருமாறு பேசியிருந்தார்.

***''சர்வஜன வாக்குரிமையானது எமக்கு எதுவித நன்மையையும் அளிக்காது என்று கூறிக் கொள்கிறேன்.''***

***''ஆணையாளர்கள் வயது வந்தவர்களுக்கான வாக்குரிமையைப் பற்றி கூறுகிறார்கள்... இவர்கள் எதற்காக இந்த நாறிப்போன தத்துவத்தை எமக்குப் போதிக்கிறார்கள். எதற்காக எமது தொண்டைக்குள் இவற்றைத் திணிக்கிறார்கள்''.***

இதே பொன்னம்பலம் இராமநாதன் டொனமூர் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

***''நீங்கள் எங்கள் பெண்களை அவர்பாட்டில் இருக்க விடுங்கள். கடவுளின் விருப்பப்படி அவர்கள் இந்த உலகத்தில் கீழானவர்களாக உள்ளமை எதற்காக என்பது பற்றி நீங்கள் அறிய நியாயமில்லை. பெண்களின் முழு வாழ்க்கையும் அவர்களது கவனமும் வீட்டிலேயே இருக்க வேண்டும். அதற்கப்பாலான ஒரு உலகமில்லை. வீட்டுப் பொறுப்பிற்கப்பால் அவர்கள் செல்வதற்கு இடம்கொட வேண்டாம்.***

(சாட்சியம் இலக்கம் 101, சாட்சியமளித்த தினம் - 20 டிசம்பர் 1927)

வரும்

**என்.சரவணன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தேசியவாதம்: தொடரும் விவாதம் — 9.2

# தேசியவாதமும் மாக்ஸீயவாதமும்

-ராம் மாணிக்கலிங்கம்

"தேசியவாதத்தை ஆதரிக்கும் மார்க்ஸீயவாதிகள் குறிப்பிட்ட அரசியல் சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட தேசியவாதம் அந்நாட்டில் எவ்வாறு சோஷலிஸத்தை நிலைநாட்ட உதவும் அல்லது, ஆகக் குறைந்தது பாடாளிவர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்க உதவும் என்பதை காட்ட வேண்டும். நேரடியாக சுயநிர்யை உரிமையை அல்லது சிறுபான்மை தேசிய இனத்தின் சமத்துவத்தைக் கோருவது மார்க்ஸீயவாத அடிப்படையிலான தர்க்கம் அல்ல."

சென்ற இதழில் தேசியவாதத்திற்கும் இனவாதத்திற்குமிடையிலுள்ள வேறுபாட்டைப் பற்றி எழுதப்பட்ட கட்டுரையில் இனவாதம் எவ்வாறு இனங்களுக்கிடையிலான தர அடுக்குதலையும் (Hierarchy) (அதாவது ஓரினம் உயர்ந்தது மற்றது தாழ்ந்தது என்ற கருத்து), விஞ்ஞானவாத அடிப்படையிலான நியாயத்தையும் கொண்டுள்ளமையை சுருக்கமாக ஆராய்ந்தோம். அதேபோல தேசியவாதத்தில் விஞ்ஞானவாத அடிப்படை இல்லாதபோதிலும் தேசங்களுக்கிடையிலான முரண்பாடுகள் ஒரு தேசம் மேலானது மற்றது கீழானது என்ற தர அடுக்குதலில் போய் முடியலாம் என்ற கருத்தை முன்வைத்தோம். தேசியவாதத்தில் "நல்லது" எது? "கூடாதது" எது என்பதை வேறுபடுத்திப்பார்ப்பதற்கு ஓர் அரசியல் - ஒழுக்கவியல் அளவுகோல் அத்தியாவசியமானது என்ற கருத்தையும் முன்வைத்தோம்.

தேசியவாதத்தில் "நல்லதேசியவாதம்", "கூடாத தேசியவாதத்தை" அளவிடுவதற்கு தேசியவாதத்தை அல்லது தேசியவாதத்திலிருந்தே அளவுகோலை எடுப்பதென்பது எந்த அளவிற்கு சரியானது என்பதைப்பார்க்க வேண்டும்.

தேசியவாதத்திற்கு சார்பாக எழுதிய 19ஆம் நூற்றாண்டின் ஜேர்மனிய வரலாற்றறிஞரும் தத்தவஞானியுமான "ஹேர்டர்" (HERDER) இன் கருத்தின்படி தேசியவாதத்திற்கும் மனிதர்களிடையேயான சமத்துவத்திற்கும் எந்த முரண்பாடும் இல்லை. அவர் குறிப்பிட்ட எந்த ஓர் தேசியவா்தத்தையும் புகழவில்லை. எல்லாத்தேசியவாதங்களையும் அங்கீகரிப்பதன் மூலம் தான் மனித சமத்துவத்தையும் தேசங்களுக்கிடையே சமத்துவத்தையும் பேணலாம் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். ஹேர்டர் தேசியவாத தத்துவஞானியாக இருந்த போதும் அவர் எல்லாத்தேசியவாதங்களையும் அங்கீகரித்ததனால் அவர் ஓர் சர்வதேசியவாதி என்றே கூறவேண்டும். அவர் தேசங்களின் தனித்துவத்தையும், அடையாளத்தையும் அங்கீகரித்து, அவற்றைப் பேண வேண்டும் என்ற வாதத்தை முன்வ்வத்தார். ஹேர்டர் இன் கோட்பாட்டின்படி ஒவ்வோர் தேசத்திற்கும் ஒரு தனித்துவமான சாராம்சம் (essence) உண்டு. எந்தத் தலையீடுமற்ற சுதந்திரம் அத்தேசத்தின் தனித்துவமான சாராம்சத்தை வளர்த்தெடுப்பதற்கு அவசியமாகிறது.

மனித சமத்துவத்தையும், தேசங்களின் சமத்துவத்தையும் மதிக்கும் ஒருவருக்கு இவ்வாதங்களைப் பார்த்த உடன் எடுத்த எடுப்பிலேயே ஏற்றுக்கொள்ளக்கூடியதாகத் தோன்றலாம். இதற்குக் காரணம் ஹேர்டரின் கருத்துக்களில் தேசங்களின் தர அடுக்குதல் (அதாவது ஒருதேசம் மேலானது இன்னொன்று கீழானது என்ற கருத்து) வெளிப்படையாகப் பிரதிபலிக்கவில்லை என்பதாகும். ஆனால் தேசங்களின் சாராம்சம் பற்றித் தேசியவாதிகள் முன்வைக்கும் வாதங்களில் இத்தர அடுக்குதல் மறைமுகமாகத் தோன்றுவதைக்காணலாம். உதாரணம், ஜேர்மனிய தேசத்தின் சாராம்சம் தத்துவமும் கலை கலாசாரமும் என்று ஜேர்மனிய தேசியவாதிகள் கோரலாம். அதேபோல், இங்கிலாந்து தேசியவாதிகள் பொருளாதார, கைத்தொழில் வளர்ச்சியை தமது சாராம்சமாகக் கோரலாம். அதேவேளை இவ்விரு தேசியவாதிகளும் ஆபிரிக்க நாடான கொங்கோவின் சாராம்சம் உடலுழைப்பு என்றும் யப்பானின் சாராம்சம் கீழ்ப்படிவு என்றும் சுட்டிக்காட்டலாம். எனினும் இச்சாராம்சங்களுக்கு இடையிலான தர அடுக்குதல் வெளிப்படையானவை. ஹேர்டரோ அல்லது பிரித்தானிய, ஜேர்மனிய தேசியவாதிகளோ இதனை ஓர் தரஅடுக்கல்ல என்று மறுத்தாலும் கொங்கோ, யப்பானிய தேசியவாதிகளைப் பொறுத்தவரை இது தரஅடுக்கே என்று நோக்குவதில் ஆச்சரியமில்லை.

இவ்வுதாரணம் இன்னோர் தேசியவாதத்தை புறக்கணிக்காமல் அல்லது தரம் தாழ்த்தாமல் தேசியவாதத்தை அங்கீகரிக்க முனையும் ஹேர்டரின் முயற்சி தோல்வியடைந்துவிட்டதைக் காட்டுகிறது. ஹேர்டருக்கு ஓர் பாரிய நோக்கு இருந்தது. அவர் தேசியவாதங்களை சமமாக அங்கீகரித்ததற்குக் காரணம் உலகத்தில் பலவிதமான கலாசாரங்கள் முரண்பாடின்றிப் பூத்துக்குலுங்க வேண்டும் என விரும்பியே. ஹேர்டரின் இவ்வுயர்ந்ததும் பாரியதுமான நோக்கினை நாம் வளர்த்தெடுக்க வேண்டுமானால் தேசியவாதத்தில் "நல்லது" எது "கூடாதது" எது என்பதை சரியாக அளவிட வேண்டும்.

அதன் மூலமே ஒன்றுக்கொன்று முர,ண்படாத அல்லது தர அடுக்கற்ற தேசியவாதத்தினைப் பற்றிப் புரிந்து கொள்ளமுடியும். தேசியவாதம் தொடர்பான சிறந்த தத்துவஞானியான ஹேர்டருக்கே தேசியவாதக் கோட்பாட்டிலிருந்து நல்ல தேசியவாதம் எது? கூடாத தேசியவாதம் எது? என்று குறிப்பாக உணர்த்த முடியவில்லை என்றால், "நல்ல", "கூடாத" தேசியவாதங்களை சரியாக அளவிட தேசியவாதத்திலிருந்தே அல்லது தேசியவாதக் கோட்பாட்டிலிருந்தே அளவிட முடியாது; வேறோர் முறையான அளவீடே தேவைப்படுகிறது என்ற முடிவுக்கே நாம் வர முடியும்.

வேறு சிலர் தேசியவாதத்தை நியாயப்படுத்த மார்க்சிசத்தைப் பயன்படுத்த முனைகின்றனர். இது ஆச்சரியமானது. மார்க்சிசம் இனங்களை அன்றி வர்க்கங்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதில் அரசியல் என்பது தேசத்தின் அங்கத்துவத்தின் அடிப்படையிலன்றி கட்டமைப்பில் ஒருவரின் வர்க்கநிலையிலிருந்துதான் நிர்ணயிக்கப்படுகின்றது. தேசியவாதம், கலாசாரம், மதம் போன்றவை ஓர் சமுதாயத்தின் பொருளாதார நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் அதே வேளை, அச்சமுதாயத்தின் வர்க்க மேலாதிக்கத்தைப் பேணிப்பாதுகாப்பதற்கே உதவுகின்றன. கம்யூனிஸ்ட் அறிக்கையில் மார்க்சின் "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்ற சுலோகம் மொழிகள், இனங்கள், கலாசாரங்கள், மதங்களைக் கடந்து வர்க்கவிடுதலைக்காக தொழிலாளர்களை ஒன்றிணையக் கோருகிறது. இங்கு இத்தொழிலாளர் வர்க்கத்தை இன, மொழி, மத கலாசார அடிப்படையிற் பிரிக்கக்கூடிய தேசியவாதத்தை அவர் மறுக்கிறார் என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

வர்க்கப்போராட்டத்தை துரிதப்படுத்தும் என்ற அடிப்படையிலும், தேசங்களின் எல்லைகளை உடைப்பது வர்க்க ஒற்றுமைக்கு வழிவகுக்கும் என்ற அடிப்படையிலும், சில வேளைகளில் ஏகாதிபத்தியத்தையே மார்க்ஸ் ஆதரித்திருக்கிறார். உதாரணம்; இந்தியாவில் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியைப் பொறுத்தவரை மார்க்சுக்கு இருவிதமான நோக்கு இருந்தது. ஒரு புறத்தில் பொருளாதார ரீதியில் இந்தியா சுரண்டப்படுவதைக் கண்டித்த மார்க்ஸ் மறுபுறத்தில் இவ்வேகாதிபத்தியத்தின் கீழ் ஏற்பட்ட சமுதாய, கலாசார மாற்றங்களை (சாதியமைப்பில் மாற்றங்களும், பெண்களின் நிலையில் மாற்றங்களும்) வரவேற்கிறார். இங்கு இந்தியாவில் பிரித்தானிய ஆட்சியின் போது ஏற்பட்ட சமூகமாற்றம் பற்றி மார்க்சின் பார்வை சரியா பிழையா எனப்பார்ப்பது முக்கியமல்ல. முக்கியம் எதுவெனில் ஏகாதிபத்தியத்தினால் இந்தியாவின் கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் சீரழிக்கப்படுகின்றன என்று கண்டிக்கவோ, அதனைப்பாதுகாக்க முற்படவோ இல்லை என்பதுடன், அதுபற்றி அவர் அக்கறைப்படவில்லை என்பதாகும். இது மார்க்சின் நிலைப்பாடு

எனினும் மார்க்சின் வழியில் வந்த வேறு சோசலிசவாதிகள் சிறுபான்மை இனங்களின் தேசியவாதத்தை ஆதரித்தனர் என்று சிலர் வாதிடலாம். லெனின், ஸ்டாலின் போன்றவர்கள் "ருசிய பெருந்தேசியவாதத்துக்கு" எதிராக போராடியமையை இதற்கு உதாரணமாகச் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். இது உண்மையாகும். எனினும் லெனினும் ஸ்டாலினும் எப்போது ஏதறகாக சிறுபான்மை தேசியவாதத்தை ஆதரித்தனர் என்பதை நாம் ஆராயும் போது அவர்களும் மார்க்சின் அடிப்படை நிலைப்பாட்டையே அணுகுகின்றனர் என்பது புலனாகும்.

ருசிய ஆட்சியின் கீழிருந்த ஜோர்ஜிய தேசியவாதத்தைப் பற்றிய லெனினின் நிலைப்பாட்டைப் பார்ப்போம். 1917இல் ருசிய புரட்சிக்கு முன் ஜோர்ஜிய சிறுபான்மைத் தேசியவாதத்தை ஆதரித்த லெனின், அப்புரட்சியின் பின் அத்தேசியவாதத்தை அடக்க ஜோர்ஜியரான ஸ்டாலினை அங்கு அனுப்பினார். எடுத்த எடுப்பிலே இவை முரணான அணுகுமுறைகளாகத் தோன்றலாம். ஏனெனில் புரட்சிக்கு முன்னும் பின்னும் ஜோர்ஜிய தேசத்தை ஆட்சி செய்தது ருசியாவே.

ஆனால், இது ஒரு சடுதியான தேசியவாத முடிவு, மார்க்சியவாத முடிவல்ல. சிறுபான்மைத் தேசியவாதமென்ற ரீதியிலல்ல, சோசலிசப் புரட்சியை துரிதப்படுத்தும் என்ற ரீதியில் தான் லெனின் ஜோர்ஜிய தேசியவாதத்தை ஆதரித்தார். புரட்சி ந்டைபெற்றதும் அத்தேசியவாதம் லெனினைப் பொறுத்தவரையில் அதன் "சரித்திர அவசியத்தை" இழந்துவிட்டது. லெனின், ஸ்டாலின் போன்ற மார்க்சியவாதிகள் தேசியவாதத்துடன் உருவாக்கிய கட்சி (Alliona) ஓர் அரசியல் ரீதியான தந்திர உபாயமான கூட்டே தவிர மர்ர்க்சிய அடிப்படைக் கொள்கை ரீதியானதொன்றல்ல. ஒரு மார்க்சியவாதி மார்க்சிய தத்துவத்தின் அடிப்படையிலிருந்து தேசியவாதத்தை ஆதரிக்க முடியாது. எனினும், நடைமுறை அரசியலில் மார்க்சியவாதிகள் சில வேளைகளில் தேசியவாதத்துடன் சேர்ந்து இயங்கியுள்ளனர். இதற்குக் காரணம் அந்நேரத்தில் அச்சூழ்நிலையில் தேசியவாதத்துடனான கூட்டு சோசலிச புரட்சியைப் துரிதப்படுத்தும் என்ற நம்பிக்கையேயாகும். ஆகவே, தேசியவாதத்தை ஆதரிக்கும் மார்க்சியவாதிகள் குறிப்பிட்ட அரசியல் சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட தேசியவாதம் அந்நாட்டில் எவ்வாறு சோசலிசத்தை நிலைநாட்ட உதவும் அல்லது ஆகக்குறைந்து பாட்டாளிவர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்க உதவும் என்பதைக் காட்ட வேண்டும். நேரடியாக சுயநிர்ணய உரிமையை அல்லது சிறுபான்மை தேசிய இனத்தின் சமத்துவத்தைக் கோருவது மார்க்சுவாத அடிப்படையிலான தர்க்கம் அல்ல.

நாம் இம்மார்க்சிசவாத நிலைப்பாட்டை மறுக்கலாம். ஏனெனில், பாட்டாளி வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்காமல் விட்டாலும், ஓரினத்தின் ஒடுக்குமுறையை அகற்றும் என்ற ரீதியில் நாம் சில அரசியல் மாற்றங்களை அங்கீகரிக்கலாம். அதே போல சோசலிசப் புரட்சியின் பின் இன வேறுபாடுகளிருந்தால் அவற்றை அகற்ற வேண்டும் என்றும் நாம் வாதாடலாம்.

எனினும், தேசியவாதம் பற்றிய இம்மார்க்சிய நிலைப்பாட்டை நாம் மறுத்தாலும் இது மார்க்சிசத்தின் நிலைப்பாடு என்பதை மறுக்க முடியாது.

தேசியவாதம் "நல்லதா", "கூடாததா" என்பதிலும் மார்க்சியம் சரியா பிழையா என்பதிலும் எமக்குள் உடன்பாடுகளோ, முரண்பாடுகளோ இருக்கலாம். ஆனால் தேசியவாதத்தை நியாயப்படுத்த மார்க்சியத்தைப் பயன்படுத்துவது தவறு என்பதில் எமக்கு வேறுபாடு இருக்க முடியாது.

எனவே "நல்ல தேசியவாத"த்தையும், "கூடாத தேசியவாத"த்தையும் வேறுபடுத்தி புரிந்துகொள்வதற்கு தேசியவாதத்தை முழுமையாக அங்கீகரிக்கும் ஹேர்டரின் தேசியவாதத்துவத்தையோ தேசியவாதத்தை முழுமையாக மறுதலிக்கும் மார்க்சியத்தையோ ஓர் அரசியல், ஒழுக்கவியல் அளவுகோலாகப் பயன்படுத்த முடியாது என்பது தெளிவாகிறது.

எனவே இதனை அளவிட வேறோர் அரசியல் ஒழுக்கவியல் அவசியமாகிறது.

(தொடரும்....)

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போதிய வசதிகள் இல்லாத யாழ் போதனா வைத்தியசாலை: அரசு புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல லட்சக்கணக்கான மக்களின் நோய்களைத் தீர்ப்பதற்கு இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரேயொரு வைத்தியசாலை யாழ். பேரதனா வைத்தியசாலை ஆகும். இன்று இந்த வைத்தியசாலையில் பல தரப்பட்ட குறைபாடுகளும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகின்றன. ஆனால, இந்தக் குறைபாடுகளைப் பார்ப்பதற்கு அரசாங்கம் போதிய கவனம் செலுத்துவதாக தெரியவில்லை.

வைத்தியசாலையில் நோயாளர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் நிர்வாகம் அவதிப்படுவதை நாள்தோறும் காணக்கூடியதாகவுள்ளது.




போதனாவைத்தியசாலையாக மாற்றப்படுவதற்கு முன்னர் அமைக்கப்பட்ட கட்டிடங்களே இன்றும் காணப்படுகின்றது. பெயரள்விலேயே போதனா வைத்தியசாலையாக மாற்றப்பட்டுள்ளது. ஆனால் எந்தவிதமான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. போதனா வைத்தியசாலையாக மாற்றப்படுவதற்கு முன்னர் ஒரு வாட்(விடுதி) ஆக இருந்த கட்டிடம் இன்று இரண்டு வாட்டுக்களாக (விடுதியாக) மாற்றப்பட்டுள்ளது. இதனால் நோயாளர்களின் வாட்டுக்களாக இருந்த கட்டிடங்கள் பல இன்று மாணவர்களின் பரிசோதனை நிலையங்களாகவும், வகுப்பறைகளாகவும் மாற்றப்பட்டுள்ளன.

இதனால் பல நோயாளர்கள் இன்று விறாந்தைகளிலும் நடைபாதைகளிலும் பாயில் படுத்தும் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. தென் இலங்கையில் போதனா வைத்தியசாலைகளாக மாற்றப்பட்டுள்ள வைத்தியசாலைகளில் நோயாளர்களின் வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் யாழ் போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் வசதிகள் குறைக்கப்பட்டுள்ளன. இன்று வைத்தியப்படிப்பை மேற்கொள்கின்ற மாணவர்களினதும், கல்வியை கற்பிக்கும் நிபுணர்களினதும் தேவைகளுக்குத் தேவையான கட்டிடங்கள் போக மிகுதியான கட்டிடங்களில் மொத்தம் முப்பது வார்ட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில வார்ட்டுக்கள் அறைகள் போல காட்சியளிக்கின்றன. குறைந்தது பத்துக்கட்டிடங்கள் தான் இங்கு போடக்கூடியதாக வுள்ளது. 30 வார்ட்டுக்களிலும் சுமார் 1200 நோயாளர்கள்தான் கட்டில்களில் படுத்திருந்து ஓரளவு வசதியாக சிகிச்சை பெற முடியும். ஆனால் இங்கு சுமார் 2000 நோயாளர்கள் சிகிச்சை பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. சுமார் 800 நோயாளர்கள் விறாந்தைகளிலும் நடைபாதைகளிலும் பாய்களில் படுத்திருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். கடும் நோயாளர்கள் கூட கட்டில்கள் இல்லாமையினால் பாய்களில் படுத்திருந்து சிகிச்சை பெறுவது அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

நாளொன்றுக்கு சுமார 2000 நோயாளர்கள் தங்கியிருந்தும் சுமார் 800 நோயாளர்கள் வெளி நோயாளர் பகுதியிலும் சிகிச்சை பெறும் இவ்வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. மாதம் ஒருமுறை சிளினிக் பகுதிக்கு சிகிச்சை பெறவரும் பல தரப்பட்ட நோயாளர்களும் தமக்குத் தேவையான வைத்தியக் குறிப்பையும் மருந்துகளையும் வைத்திய அதிகாரிகள் குறிப்பிடுவதற்கு தாமே காகிதாதிகள் கொண்டு செல்ல வேண்டும். அப்படிச் செய்தும் மருந்துகளின் தட்டுப்பாட்டினால் ஒரு மாதத்துக்கு தேவையான மருந்துகள் கொடுக்கப்பட வேண்டிய இடத்தில் 15 நாட்களுக்கு போதுமான மருந்துகளே வழங்கப்படுகின்றது. வெளிநோயாளர் பிரிவிலும் நோயாளர்களுக்கு ஒரு வாரத்துக்கு போதுமான மருந்துகள் வழங்கப்பட வேண்டிய இடத்தில் மூன்று நாட்களுக்கு போதுமான மருந்துகளே வழங்கப்படுகின்றன.

வைத்திய அதிகாரிகள், தொழில் நுட்ப அலுவலர்கள், சிற்றூழியர்கள், மருந்தாளர்கள். ஆகியோரின் பற்றாக்குறை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. கடந்த 5 வருடங்களுக்கு மேலாக முறிவு நெரிவு சத்திரசிகிச்சை நிபுணர், மூளை நரம்பு சத்திரசிகிச்சை நிபுணர் எவரும் இல்லாமல் இவ் வைத்தியசாலை இயங்கிவருகின்றது இவ்வைத்தியசாலையில் சுமார் 100 வைத்திய அதிகாரிகள், மருந்தாளர்கள் பற்றாக்குறைவினால் வெளிநோயாளர்கள் பகுதியில் மணித்தியாலக்கணக்கில் நோயாளர்கள் நீண்ட கியூவரிசையில் நிற்க வேண்டியுள்ளது. யுத்தம் ஆரம்பமானதில் இருந்து இன்று வரை முறிவு நெரிவு சத்திரசிகிச்சை நிபுணர் இல்லாமல் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் தகுந்த சிகிச்சை பெற முடியாமல் அவதியறுகின்றனர். பொம்மர், சுப்பசோனி, ஷெல் போன்றவற்றின் தாக்கத்தினாலும் கை,கால்களை இழந்த நூற்றுக்கணக்கானவர்கள் கடந்த காலங்களில் தகுந்த சிகிச்சை பெற முடியாமல் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வடபகுதிக்கான பொருளாதாரத்தடையினாலும் இவ்வைத்தியசாலையால் நோயாளர்களுக்கு தகுந்த சிகிச்சையை மேற்கொள்ள முடியவில்லை. மின்சாரத்தடையினால் இங்கு ஜெனரேற்றர்கள் மூலம் மின்சாரம் வழங்கப்படுகின்றது. ஜெனரேற்றர்களை இயக்குவதற்குரிய எரிபொருள் (டீசல்) அரசாங்கத்தினால் போதுமான அளவு வழங்கப்படாமையினால் ஜெனரேற்றர்கள் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் இயக்கப்படுகின்றது. இதனால் மின்சாரம் சத்திரசிகிச்சைக்கூடம், இரத்தவங்கி தவிர்ந்த ஏனைய சிகிச்சை நிலையங்களுக்கும், விடுதிகளுக்கும், மலசல கூடங்களுக்கும் இரவு நேரம் மட்டுமே வழங்கப்படுகின்றது. இரவு நேரங்களில் மட்டும் வழங்கப்படும் மின்சாரம் கூட வார்ட்டுக்களுக்கும், மலசல கூடங்களுக்கும் போதுமான மின்குமிழ்கள் எரிவதற்கு வழங்கப்படுவதில்லை. இதனால் மலசல கூடங்களுக்கு செல்லுகின்ற நோயாளர்கள் பலர் விழுந்து எழும்புவதைக் காணக்கூடியதாகவுள்ளது. பகல் நேரங்களில் மின்சாரம் தண்ணீர் தாங்கிக்கு (Water Tank) குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் வழங்குவதனால் மலசல கூடங்களுக்கு செல்லுகின்ற நோயாளர்கள் தண்ணீர் பற்றாக்குறைவினால் மலசல கூடங்களை ஒழுங்காக பாவிப்பதில்லை. இதனால் சில நேரங்களில் வார்ட்டுக்களில் (விடுதிகள்) நோயாளர்கள் மூக்கைப் பொத்தியபடி துர்நாற்றத்தை சுவாசிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர். சத்திரசிகிச்சைக்கூடங்களில் வைத்திய அதிகாரிகள் போதியளவு உபகரணங்கள் இல்லாமையினால் பெரும் அவதியுறுகின்றனர், சில வேளையில் அவசர நோயாளர்களுக்கு உபகரணங்கள் இல்லாமையினால் சத்திரசிகிச்சையை மேற்கொள்ள முடியாமல் தொடர்ந்த சத்திரசிகிச்சை முடியும் வரை காத்திருக்க வேண்டிய நிலைமையும் உள்ளது. மலம், சலம், இரத்தம் ஆகியவற்றை பரிசோதனை செய்யும் ஆய்வு கூடங்களுக்கு இரசாயனப் பொருட்கள் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் பல நோயாளர்களுக்கு ஆய்வு கூடப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. அவசர நோயாளர்களுக்கு மட்டுமே ஆய்வுகூட பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எக்ஸ்றே பகுதியிலும் தேவையான அளவு படம் எடுப்பதற்குரிய படச்சுருள் (Film roll) வழங்கப்படாமல் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதனால் அவசர நோயாளர்களின் எக்ஸ்றே படங்கள் மட்டுமே எடுக்கப்படுகின்றன. இதனால் படம் எடுத்து பரிசோதனை செய்யவேண்டிய பல நோயாளர்கள் சாதாரணமாகக் கவனிக்கப்படுகின்றனர். அரசாங்க பதவிகளில் புதிதாக நியமனம் செய்யப்படுகின்றவர்கள் தமது மருத்துவப் பரிசோதனைகளுக்கு நாட்கணக்கில் அலைந்து திரியவேண்டியுள்ளது.

பிரேதங்கள் வைக்கப்படுகின்ற பிரேத அறைக்கு தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படாமையினால் குளிரூட்டும் நேரம் மட்டுப்படுத்தப்படுகின்றன. இதனால் பிரேதங்கள் பழுதடைந்து துர்நாற்றத்தை வீசுகின்றன. இதே போல சமயலறைக்கு பக்கத்தில் வைத்தியசாலை கழிவுப்பொருட்கள் முழுவதும் வெறும் தரையில் கொட்டப்படுகின்றன. இவ்வாறு கொட்டப்படும் கழிவுப் பொருட்கள் அடுத்த நாள் காலையே யாழ் மாநகரசபைப் பகுதியினரால் அகற்றப்படுகின்றன. இதனால் பெரும் துர்நாற்றம் வீசுவ்துடன் சமையலறையில் தயாரிக்கப்படும் உணவுப்பொருட்களும் சுகாதாரத்துக்கு உரியதாக தயாரிக்கப்படுவதாகத் தெரியவில்லை. வேறு வசதியான இடம் இல்லாமையினால் தான் சமையலறைக்குப் பக்கத்தில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவிக்கின்றது.



இவ்வைத்தியசாலை பல தடவைகள் இலங்கை இராணுவத்தினரின் ஷெல்தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பதுடன் பல வார்ட்டுக்களும் வைத்திய அதிகாரிகள் தங்கும் விடுதிகளும் சேதமடைந்தும் உள்ளன. இலங்கை இராணுவத்தினர் கோட்டை இராணுவ முகாமில் இருந்து ஏவிய ஷெல்லினால் பெண்கள் சத்திரசிகிச்சை விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த பல பெண் நோயாளர்கள் துடிதுடித்து மரணமான சம்பவமும், இந்திய அமைதிகாக்கும் படையினர் மேற்கொண்ட கண் மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் நான்கு வைத்திய அதிகாரிகள் உட்பட 21 பேர் துடிதுடித்து மரணமான சம்பவமு இவ்வைத்தியசாலை என்றும் மறக்க முடியாத சம்பவம் ஆகும்.

இவ்வைத்தியசாலை இன்று பல வழிகளிலும் பின் தங்கியதொரு வைத்தியசாலையாக காணப்படுகின்றது. இதனைப் போதனா வைத்தியசாலையாக மாற்றிய அரசாங்கம் போதிய கட்டிட வசதிகளையும் மற்றும் சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்க வேண்டும்.

லட்சக்கணக்கான மக்களின் நோய்களைத் தீர்ப்பதற்கு இருக்கின்ற ஒரேயொரு வைத்தியசாலையான இவ்வைத்தியசாலையின் குறைபாடுகளை அரசாங்கம் தீர்ப்பதற்கு மனிதாபிமான முறையில் முன்வர வேண்டியது அவசியம் ஆகும்.

சகல தரப்பட்டவர்களும் இவ் வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகளைத் தீர்த்துவைப்பதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டியது அத்தியாவசியமானதும், அவசியமானதும் ஆகும்.

அன்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# "எங்களால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்"

***"எங்களால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும், யாரை வேண்டுமானாலும் கைது செய்ய முடியும் என்று காட்டத்தான் என்னைக் கைது செய்தனர். நீதிபதியாகவிருந்த எனக்கே இந்தக்கதியென்றால் சாதாரண மக்களின் கதியை எண்ணிப் பாருங்கள்."*** **என்கிறார் அஜித் சிங் பெய்ன்ஸ். பஞ்சாப் மனித உரிமை அமைப்பின் தலைவர். பஞ்சாப்-அரியானா உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி.**

**1992 ஏப்பிரலில், தடா மற்றும் பிற கொடூரச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு மிருகத்தனமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டார். பொலிசாரால் கொடூரமானமுறையில் சித்திரவதை செய்யப்பட்டு குற்றுயிரோடு நிர்வாணக் கோலத்திலிருந்த ஒரு இளைஞன் முன்னால் அவர் நிறுத்தப்பட்டு அவனுக்கு நேர்ந்த கதிதான் அவருக்கும் ஏற்படும் என மிரட்டப்பட்டார்.**

**இந்தியாவிலும் சர்வதேச அளவிலும் செயல்படும் மனித-சிவில் உரிமை இயக்கங்கள் எழுப்பிய கண்டனக் குரல்கள் பலமாத சிறைவாசத்தின் பிறகு அவரை விடுதலை செய்ய வைத்தன.**

**அஜித் சிங் பெய்ன்ஸ் அவர்களுடன், வ.கீதா, எஸ்.வி.ராஜதுரை ஆகியோர் *நிறப்பிரிகை* இதழுக்காக நடத்திய நேர்காணலிலிருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.**

***கேள்வி: உங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள். மனிதவுரிமைப் பாதுகாப்பு இயக்கத்தில் நீங்கள் ஆர்வம் கொள்ளக் காரணம் என்ன?***

**பதில்:** நான் பஞ்சாப்பில் கிராமப்புறக் குடும்பமொன்றில் பிறந்தவன். எனது தந்தையாரும் அவரது சகோதரரும் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள். எனது தந்தையாரின் சகோதரர் கனடா நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட கத்தார் கட்சியைத் (Gaddar party) தொடங்கியவர்களில் ஒருவராவர். எனது தந்தையார் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுபத்தாண்டுச் சிறைவாசம் அனுபவித்தார். பிறகு அவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து பணியாற்றினார். அதன் பிறகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். 1977 இல் காலமான அவர் கடைசிவரை ஒரு இடதுசாரியாகவே விளங்கினார். சுதந்திரப் போராட்டத்தின் இறுதியாண்டுகளின் போது நான் லக்னோ பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்தேன். அப்போது என் தந்தையார் சிறையிலிருந்ததால் லக்னோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வந்த அவரது சகோதரர் ஒருவரின் கண்காணிப்பில் படித்து வந்தேன். மாணவர் இயக்கத்தில் கலந்து கொண்டேன். பொருளாதாரம், சட்டம் ஆகியவற்றில் முதுகலைப்பட்டம் பெற்றபின் நான் பஞ்சாப்பிற்குத் திரும்பினேன். சிலகாலம் ஒரு கல்லூரியில் பொருளாதாரத்துறையில் ஆசிரியராக வேலை பார்த்தேன். அப்போது கல்லூரியின் தலைமை ஆசிரியராலும் கல்லூரி நிர்வாகத்தாலும் ஏய்க்கப்பட்டு வந்த மாணவர்களுக்காகப் பரிந்து பேசியதற்காக, நானும் வேறு 4 ஆசிரியர்களும் வேலையிலிருந்து நீக்கப்பட்டோம். இதற்குப் பிறகு நான் எனது சட்டப்படிப்பை பயன்படுத்திக் கொண்டு சட்டத்துறையில் செயல்படத் தொடங்கினேன். முதல் இரண்டாண்டுகள் ஒரு மாவட்டத் தலைமையகத்தில் (District Head Quarters) வழக்குரைஞராக இருந்தேன். 1961 இல் சண்டிகரில் இருந்த உயர்நீதிமன்றத்தில் செயலாற்றத் தொடங்கினேன். பஞ்சாப் - அரியானா பார் கவுன்சிலில் ஒரு உறுப்பினராக்கப்பட்டுப் பிறகு கவுன்சிலின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் அமர்த்தப்பட்டேன். 1984இல் வேலையிலிருந்து ஓய்வு பெற்றேன். அப்போதுதான் மத்திய அரசு பஞ்சாப்பில் **'ஒப்ரேசன் ப்ளுஸ்டார்'** ( அமிர்தசரஸில் உள்ள பொற்கோயில் மீது இந்திய இராணுவம் நடாத்திய தாக்குதல்) என்ற ராணுவ நடவடிக்கையை தொடங்கியிருந்தது. ப்ளுஸ்டார் என்னை மிகவும் பாதித்தது. என் மனதை உலுக்கியது. அந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட தினத்தன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் அமிர்தசரஸில் இருந்த பொற்கோயில் **(Golden temple)** கூடியிருந்தனர். சீக்கியர்களின் 5வது மதகுருவான குரு அர்ஜுன்தேவ் வீர மரணம் அடைந்த நாள் அது. அவரை நினைவு கூர்ந்த வணக்கம் செலுத்த வந்தவர்களில் ஒரு சில (காலிஸ்தான்) போராளிகளும் இருந்தனர் - நான் இதை மறுக்கவில்லை. ஆனால் அன்று பொற்கோயிலில் தங்கள் சமயகுருவை வழிபடவந்தவர்களில் பெரும்பான்மையாய் இருந்தவர்கள் சாதாரண குடிமக்கள்தான். 'ப்ளுஸ்டார்' நடவடிக்கையில் போது ஒன்றுமே அறியாத, சாதாரண மக்களுமே ஆயிரக்கணக்கில் மாண்டனர்.

'ப்ளுஸ்டார்' நடவடிக்கைக்குப் பிறகு சிறிது சிறிதாக நான் அரசாங்கத்தை விமர்சிக்கத் தொடங்கினேன். மக்கள் மீது அது கட்டவிழ்த்து விட்டிருந்த வன்முறையைக் கண்டித்தேன். இதற்கிடையே லோங்கொவால் - ராஜீவ் ஒப்பந்தம் (Longowal - Rajiv pact) ஏற்பட்டது. பஞ்சாப்பில் தேர்தல்கள் நடைபெற்றன. அகாலித் தலைவர்களுள் ஒருவரான திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களின் தலைமையில் ஒரு அரசு ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்த இரண்டாம் நாளே அவர் 'ப்ளுஸ்டார்' நடவடிக்கையின் போதும், அதற்கு முன்னும் பின்னும், கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிரான புகார்களின் இருந்த உண்மைகளை அறிய ஒரு குழுவை நியமித்தார். நான் அக்குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றேன். என்னைத் தவிர குழுவில் ஜலந்தரைச் சேர்ந்த ஒரு மூத்த வழக்குரைஞரும் (இவர் பி.ஜே.பிக்கு சார்பானவர்.) அரசாங்கத் தலைமை வழக்குரைஞர் ஒருவரும், பஞ்சாப்பின் அட்வகேட் ஜெனரலும் இடம் பெற்றிருந்தனர். நாங்கள் எங்கள் விசாரணையைத் தொடங்கி அறிக்கையையும் முதல்வர் பர்னாலாவிடம் சமர்ப்பித்தோம். சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்களில் 6000 பேருக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டும் இல்லை என்றும், இவர்கள் உடனே விடுவிக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் பரிந்துரைத்தோம். இது எங்கள் அனைவரின் ஒருமித்த கருத்தாக விளங்கியது. **'ஜோத்பூர் கைதி'** கள் என்று குறிக்கப்பட்டவர்களும் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் கூறினோம். ஆனால் பர்னாலா அரசு எங்களது பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. 3500 - 4000 பேர்தான் விடுவிக்கப்பட்டனர். இது எங்களுக்கு குறிப்பாக எனக்கு பெரும் ஏமாற்றத்தையளித்தது. எனது ஏமாற்றத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கும் வண்ணம் அக்குழுவிலிருந்து விலகினேன். லோங்கொவால் - ராஜீவ் ஒப்பந்தத்தின் படி ஜனவரி 26, 1986 தேதியன்று சண்கர் அரியானாவிலிருந்து பஞ்சாப்பிற்கு மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். இதுவும் நடக்கவில்லை. பர்னாலா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பதவி விலக வேண்டும் என்று நாங்கள் கூறினோம். அவா கேட்கவில்லை. அப்போது அவர் 'தில்லிதர்பாரு'க்கு அடிபணியத் தொடங்கிவிட்டார். அந்தக் காலகட்டத்தில் தான் நான் பஞ்சாப் மனிதவுரிமை கழகத்தை (Punjab Human Rights Organization) தொடங்கினேன். பல்வேறு இடங்களில் நடைபெற்றுவந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களைப் பற்றிய உண்மைகளைக் கண்டறிந்து அவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரும் முயற்சிகளை நாங்கள் தொடங்கினோம். பர்னாலா அரசு நீக்கம் செய்யப்பட்டது. என்றாலும் நாங்கள் எங்கள் பணியைத் தொடர்ந்தோம். பஞ்சாப், அரியானா, தில்லி ஆகிய இடங்களிலிருந்து வெளிவந்த பார்ப்பனியப் பத்திரிகைகள் என்னை தனிப்பட்ட முறையில் குற்றங்கூறத் தொடங்கின - ப்ளுஸ்டார் நடவடிக்கை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு பரிந்துரைத்ததற்காக. ''ஜோத்பூர் கைதி''கள் அப்போது விடுவிக்கப்படவில்லை. 1989இல் தான் அதாவது நாங்கள் அறிக்கை சமர்ப்பித்து நான்கு ஆண்டுகள் முடிந்து விட்டிருந்த போது தான் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அதுவும் 1989 நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்து ஒரு புது மத்திய அரசு அமைக்கப்பட்ட பிறகே அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

***கேள்வி: தற்போது பஞ்சாப்பில் நிலைமை எப்படி இருக்கிறது 'பஞ்சாப்புக்கு அமைதி திரும்பி விட்டது' என்று அரசு கூறி வருகிறதே அது உண்மைதானா?***

பதில்: பஞ்சாப் இன்று இராணுவத்தாலும், துணை ராணுவப் பிரிவுகளாலும் முற்றுகையிடப்பட்ட ஒரு மாநிலமாகவே விளங்குகிறது. இங்கு 'சட்டம்' என்ற ஒன்று செயல்படுவதாகத் தெரியவில்லை. 20,000க்கும் மேற்பட்டோர் சிறைகளில் வாடுகின்றனர். அவர்களில் பலர் 5,6 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்து வந்துள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்டப்படி வழக்குகள் தொடங்கப்படாத நிலையில் அவர்கள் காரணமின்றி காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பஞ்சாப்பில் ஒரு ''பொலிஸ் ஆட்சி'' தான் நடைபெறுகிறது. சிவில் நிர்வாகம் என்பது பெயரளவுக்குத்தான் நடக்கிறது. அதற்கு எந்தவொரு தகுதியும் அதிகாரமும் கிடையாது. இன்றைய பஞ்சாப் முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்று 2 ஆண்டுகள் முழுமையாக இன்னும் முடியவில்லை (பெப்ரவரி 1994 இல் தான் 2 ஆண்டுகள் முடியும்.) ஆனால், அவரது இந்தக் குறுகியகால ஆட்சியில் 6000 - 7000 க்கு மேற்பட்ட இளைஞர்கள் பொலிஸ் காவலில் கொல்லப்பட்டுள்ளனர். பாலியல் வன்முறைகள், ஆட்களை கடத்திச் செல்லல், கொலை, சித்திரவதை - இவை அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. அண்மையில் மூன்று வழக்குரைஞர்களும் 2 பத்திரிகையாளர்களும் சீக்கிய சமயப் பெரியவர் ஒருவரும் இராணுவத்தால் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட வழக்குரைஞர்களில் ஒருவரான குல்வந்த் சிங் அவர்களுடன் அவரது மனைவியும், ஒன்றரை வயதுக் குழந்தையும் சேர்த்துக் கொல்லப்பட்டனர். பஞ்சாப்பில் காணப்படும் 'அமைதி'யின் அறிகுறிகள்தான் இம்மாதிரியான கொலைகள்! நடைபெற்று வரும் அக்கிரமங்களில் ஒருசிலவற்றையே நான் உங்களுக்கு எடுத்துக்காட்டியுள்ளேன். இவை யாவும் வெளி உலகுக்குத் தெரிய வருவதில்லை. பத்திரிகைகள் உட்பட அனைத்துத் தகவல் தொடர்புச் சாதனங்களும் உயர்சாதி/ஆதிக்க வர்க்கத்தினரின் கைவசம்தானே இருக்கின்றன. அவையாவும் 'தில்லி தர்பாரின்' சொற்படிதான் நடப்பன. எனவே தான் அவை இடைவிடாது ''பாஞ்சாப்புக்கு அமைதி திரும்பிவிட்டது'' என்று பொய்யுரைத்து வருகின்றன. ஆனால், பஞ்சாப்பில் எவ்வாறு அமைதி நிலவக்கூடும்? துப்பாக்கித் தோட்டாக்களைக் கொண்டு அமைதியை ஏற்படுத்திவிட முடியாது. அவை போராளிகளால் சுடப்படும் தோட்டாக்களாக இருந்தாலும் சரி - அவற்றால் அமைதியை நிறுவிடமுடியாது. பஞ்சாப்பில் காணப்படுவது ஒரு சட்ட - ஒழுங்குப் பிரச்சினை. தோட்டாக்களால் நாசத்தீயை உருவாக்க முடியுமே தவிர அரசியல் தீர்வையல்ல. இன்று பொதுமக்கள் ஒரு மாபெரும் பயங்கரத்தால், அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர். என்னை எடுத்துக் கொள்ளுங்கள். நான் என்றுமே வன்முறையை ஆதரித்ததில்லை. பொலிஸும் இராணுவமும் சட்டப்படி நடக்கவேண்டும்; சட்டத்தை மதிக்க வேண்டும். பொலிஸால் கைது செய்யப்படுபவர்கள் மறுநாளே கைதான 24 மணி நேரத்துக்குள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்றுதான் கூறி வந்துள்ளேன். ஆனால் என்னைப் போன்றவர்களையும் கூட விட்டு வைக்க அவர்கள் தயாராக இல்லை. என் வாயை அடைக்க வேண்டும். எனது மனோவலிமையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், பஞ்சாப்/ அரியானா உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியான என்னை ஒரு வாரண்ட் இன்றிக் கைது செய்தனர். கைது செய்த தகவலை எனது குடும்பத்தாருக்குத் தெரிவிக்கவில்லை. நான் கைதான செய்தி பத்திரிகையாளருக்குத் தெரியவந்த பிறகு, பி.பி.சியில் அச்செய்தி அறிவிக்கப்பட்ட பிறகுதான் என்னை ''முறைப்படி'' 'தடா'வில் கைது செய்தனர். அதாவது, நான் ஏப்பிரல் 3, 1992 அன்று இரவு கைது செய்யப்பட்டேன். ஆனால் மூன்று நாட்களுக்குப் பிறகுதான் நான் கைது செய்யப்பட்டதாகவும் அதுவும் மற்றொரு இடத்திலிருந்து கைது செய்யப்பட்டதாகவும் அறிவித்தனர். (நான் கைது செய்யப்பட்டதோ எனது வீட்டில் தான்) என்னைப் போன்றவர்களுக்கே இந்தக் கதியென்றால், சாதாரண மக்களின் கதியை எண்ணிப்பாருங்கள். ஒரு வாரண்ட் இன்றி எனது வீட்டுக்குள் புகுந்து எனது உடைமைகளைச் சின்னாபின்னமாக்கினர். இதையெல்லாம் எதற்காகச் செய்தனர்? சாதாரண மக்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கத்தான்; ''எங்களால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். யாரை

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை:

## அரசியல் யாப்பு சீர்திருத்தங்களும் மலையக மக்களும்

இக் காலப்பகுதியில் வர்த்தகத்தில் முன்னணிக்கு வந்துவிட்ட ''கராவ'' சாதியினரின் அரசியல் பிரவேசமும், சர்வதேச அரங்கில் பிரதான போக்காக ஆகி வந்த காலனியல் சுதந்திர கோரிக்கையும் இந்தியாவின் சுதந்திர இயக்கமும் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. படிப்பறிவில் முன்னணி வகித்த யாழ்ப்பாண நடுத்தர வர்க்கத்தின் தலைமை அரசியலில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது.

இதன் பின்னணியில் குறு - மக்கலம் சீர்திருத்தம் 1910ல் கோல்புறூக் அரசியலமைப்பில் புகுத்தப்பட்டு இச்சீர்திருத்தத்தின் விளைவாக படித்த இலங்கையர் ஒருவர் முதற்தடவையாக ''மட்டுப்படுத்தப்பட்ட வாக்குகள்'' மூலம் தெரிவு செய்யப்பட்ட ர். இத்தேர்தலில் மார்க்ஸ் பொன்னாண்டோவை தோற்கடித்து பொன்.இராமநாதன் வெற்றிபெற்றார் (1912). இனத்துவத்தை விட சாதி இங்கு பிரதான பாத்திரம் வகித்தது. ''கராவ'' சாதியினரான மார்க்ஸ் பொன்னாண்டோவுக்கு எதிராக சிங்கள உயர்சாதியினரான ''கொவிகம''காரர் வெள்ளாள உயர்சாதியினரை ஆதரித்தனர்.

பொன் இராமநாதனின் தம்பி பொன் அருணாசலத்தின் அரசியல் தலைமை அப்போது ஒப்பீட்டுரீதியில் முற்போக்கானதாக உருவானது. இவர் தோட்ட தொழிலாளரின் நலன் குறித்தும் குரல் எழுப்பியுள்ளார். ''(இவர்கள்) ஏழைகளாகவும், பாமரர்களாவும், உதவியற்றவர்களாகவும் இருப்பதனால் கங்காணிமார்களின் பேராசையிலும் கொடுங்கோன்மையிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள இயலாதவர்கள்'' என்ற அவரது விபரிப்பு பிரபல்யம் வாய்ந்தது.

இவ்வாறு 19ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஏனைய சமூகத்தின் செல்வாக்கு மிக்கக தலைமைகள் உருவாகிய போதும் மலையக மக்கள் பலவீனமாகவே இருந்தனர். தோட்ட தொழிலாளர்களின் நலனை விட பெருந்தோட்ட நலனே பாதுகாக்கப்பட்டு வந்தது.

எனினும், 1920களின் நடுப்பகுதிகளிலிருந்து மலையகத்தின் மந்த நிலைமை மெல்ல மாற்றமுறத் தொடங்கியது. இக்காலப்பகுதியில் பருவகால அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களின் உழைப்பில் சார்ந்து நின்ற கோப்பிப் பெருந்தோட்ட பொருளாதாரம் முற்றாக அழிந்து நிரந்தர உழைப்பாளரில் தங்கி நிற்கும் தேயிலை, றப்பர் தோட்டங்கள் நிலைபெற்று விட்டன. கோப்பியின் அழிவுகாலத்தில் அவலத்தின் உச்சத்தை அனுபவித்த தோட்ட தொழிலாளரின் பரிதாபநிலை இந்தியாவில் கொந்தளிப்பை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து இந்திய அரசு இலங்கை தோட்ட தொழிலாளரின் வாழ்வில் அக்கறை காட்டியது. அடிப்படை நலன்களைப் பாதுகாக்கும் கல்விச் சட்டம்(1920), குறைந்த பட்ச சம்பள சட்டம் (1927), மருத்துவ சட்டம் போன்ற சட்டங்கள் இந்தியாவின் நிர்ப்பந்தத்தாலேயே நிறைவேற்றப்பட்டன. நிரந்தரமாக இலங்கையில் வாழும் இந்திய தொடர்பபை துண்டித்துக் கொண்ட ஒரு தலைமுறை உருவாகிவிட்டது. ஓரளவு எழுத வாசிக்கத் தெரிந்த தொழிலாளர் தோட்டத்திற்கு ஒருவராவது உருவாகினர்.

இம்மாற்றங்களோடு ''மானிங்ஸ்'' 1924ல் கொண்டு வந்த இரண்டாவது சீர்திருத்தம் இனங்களை பிளவுபடுத்துவதாக இருந்தாலும் முதற்தடவையாக மலையக மக்களின் பிரதிநிதித்துவத்திற்கு வழி வகுத்தது.

### *1924 சட்ட சபைத் தேர்தல்:*

1924 மானிங் சீர்திருத்தத்தின்படி 49 அங்கத்தவர் கொண்ட சட்டசபையில் 12 உத்தியோக பூர்வப்பிரதிநிதிகளும் 37 உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதகளும் இடம் பெற்றனர். உத்தியோகப் பற்றற்றவர்களில் 3 பேரை தேசாதிபதி நியமிக்க 23 பேர் பிரதேசவாரியாக தெரிவு செய்யப்பட்ட அதேவேளை சமூக இனவாரியாக 11 பேர் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர்.

**கண்டிய பிரமுகர்களை தூண்டிவிட்டு கண்டிய பிரதேசத்திற்கு சமஷ்டிக் கோரிக்கையை முன்வைக்கச் செய்த பிரித்தாள்வதில் வல்ல மானிங் தமது சீர்திருத்தத்தின் மூலம் இலங்கை அரசியலில் இனப் பிளவை ஆழப்படுத்தினார். ஏற்கனவே இரு இன வன்செயல்களின் சுவடு இலங்கை வரலாற்றில் பதிந்து விட்டது.**

| | | |
|---|---|---|
| *நகர்ப்புற ஐரோப்பியர்* | - | *1* |
| *நாட்டுப்புற ஐரோப்பியர்* | - | *1* |
| *வர்த்தக ஐரோப்பியர்* | - | *1* |
| *பறங்கியர்* | - | *2* |
| *இந்தியர்* | - | *2* |
| *முஸ்லிம்கள்* | - | *3* |
| *மேல் மாகாணத் தமிழர்* | - | *1* |
| *மொத்தம்* | | *11* |

இச்சபைக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர் 25 ஆண்டுகளுக்கு மேல் இந்நாட்டில் வசித்தவராகவும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரஜையாகவும் ஆங்கிலத்தில் எழுத வாசிக்கத் தெரிந்தவராகவும் 1500 ரூபாவுக்கு குறையாத வருடாந்த வருமானத்தை அல்லது 5000 ரூபாவுக்கு குறையாத சொத்துடையவராகவும் இருத்தல் வேண்டும்.

வாக்குரிமை பெறுவதற்குரிய தகுதியாக 21 வயதுக்கு குறையாதவராகவும், பிரித்தானிய பிரஜையாகவும், ஆண்களாகவும், ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ் எழுத வாசிக்கத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும் என வரையறுக்கப்பட்டது. இதன்படி இந்நாட்டு சனத்தொகையில் நாலு சதவீதத்தினருக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது.

இத்தேர்தலில் இரு இந்திய பிரதிநிதகளுக்கான ஆசனங்களுக்கு 6பேர் போட்டியிட்டனர். அவர்களில் பிரதானமானவர் கோ.நடேச ஐயர். பெரும் தனவந்தர்களுடன் மக்கள் ஆதரவு ஒன்றை மூலதனமாக வைத்துப் போட்டியிட்ட அவரால் வெற்றிபெற முடியாமற் போனது.

தேர்தல் முடிவு வருமாறு:

| | |
|---|---|
| *ஐ.எக்ஸ்.பெரைரா* | *- 5741 வாக்குகள்* |
| *முகம்மது சுல்தான்* | *- 3511 வாக்குகள்* |
| *கோ.நடேச ஐயர்* | *- 2948 வாக்குகள்* |
| *எஸ்.பி.சார்ல்ஸ்* | *- 1877 வாக்குகள்* |
| *டேவிட்* | *- 0543 வாக்குகள்* |
| *ரஸ்டம்ஜி* | *- 0266 வாக்குகள்* |

இதில் கடைசி இருவர் கட்டுப்பணத்தை இழந்தனர். சார்ல்ஸை ஆதரித்து தோட்ட துரைமார் சுற்று நிருபங்கள் அனுப்பினர்.

ஆயினும் முகம்மது சுல்தான் திடீரென இறந்ததனால் ஆறு மாத காலத்துள் இடைத்தேர்தல் ஒன்று நடைபெற்று கோ.நடேசஐயர் வெற்றி பெற்றார். இத்தேர்தலில் கோ.நடேசய்யருக்கு 16,324 வாக்களும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திருமதி ஸி.எஸ்.ராஜரட்ணத்திற்கு 3,635 வாக்குகளும் கிடைத்தன.

நடேச ஐயர் ஐரோப்பியருக்கு இந்நாட்டில் இருக்கும் அனைத்து உரிமைகளும் இந்தியருக்கும் இருத்தல் வேண்டும் எனக்கோரிவந்தார்.

1919ல் பொன்,அருணாசலத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தொழிலாளர் சேவை நல கழகத்தின் செயலாளராக மலையக பட்டதாரியான பெரி.சுந்தரம் கடமையாற்றினார். இவர் பிற்காலத்தில் அமைச்சராகவும் இருந்தார். மலையக அரசியலில் செல்வாக்கு செலுத்திய ஆரம்பகால மலையக பிரமுகராக இவர் திகழ்ந்த போதும் நடேச ஐயரே மலையகத்தின் முதலாவது தலைவன் என்ற அந்தஸ்த்தைப் பெறுகின்றார். அவரது பங்களிப்பு மலையக வரலாற்றில் ஆழமான முத்திரை பதித்துள்ளது.

### *மானிங் சீர்திருத்தம் ஏற்படுத்திய இனப்பிளவு:*

கண்டிய பிரமுகர்களை தூண்டிவிட்டு கண்டிய பிரதேசத்திற்கு சமஷ்டி கோரிக்கையை முன்வைக்கச் செய்த பிரித்தாள்வதில் வல்ல ''மானிங்'' தமது சீர்திருத்தத்தின் மூலம் இலங்கை அரசியலில் இனப் பிளவை ஆழப்படுத்தினார். ஏற்கெனவே இரு இன வன்செயல்களின் சுவடு இலங்கை வரலாற்றில் பதிந்துவிட்டது.

இலங்கையின் முதலாவது இனவாத வன்செயல் (சரியாக 1883ல் வன்செயல் ஏற்பட்ட ஒரு நூற்றாண்டுக்கு முன்பு) கொழும்பு கொட்டாஞ்சேனையில் கத்தோலிக்கருக்கும் பௌத்தர்களுக்குமிடையில் வெடித்தது. இரண்டாவது இனவன்செயல் 1915ல் கண்டியிலே முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையில் மூண்டது. ஆனால் இலங்கை தமிழ் தலைவர்களுக்கு சிங்கள தலைவர்களுக்கும் இடையில் நல்லுறவே நிலவியது. இந்த நல்லுறவு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் நலனுக்கு ஆபத்தானது என்பது 1915 முஸ்லிம் - சிங்கள கலவரத்தின் போது நன்குணரப்பட்டது.

**-பீ.ஏ.காதர்**

வரும்

---

# வனத்தின் அழைப்பு - 4

ஊ
தவத்தில் அமைந்தவன்
உள்ளுணர்வுந்த கண்விழித்தான்!
ஏவப்பட்ட அம்பாய் பாய்ந்த பன்றியின் உடலில்
வீரனின் வில் பேசிற்று!
இரைக்காய் இன்னோர் அம்பும் தைத்தது!
இரைதேடி வேடனும் வந்தான்
போர் ஆரம்பமானது!

தாயாதிகள் உறவுகள் விட்டுப் போயின!
நீண்ட காலம்போல் தாயின் நினைவு!
வெறித்தோடிய நதியில் ஓய்ந்த கரங்கள்!
எனினும் போர்!

வெற்றுக் குரல்கள் ஓங்கிஒலித்த
பால்ய நாட்கள்!
வேட்டைவிதிகளை உரக்க
சொல்லி அலைந்த காடுகள்!
வெறித்துப் போன உறவுகள்
திடத்தினைச் சிதைக்கும் நினைவுகள்!
எனினும் போர்!

எதையெல்லாம் விட்டுதறிச் சென்றார்கள்!
எத்தனை வீடுகள் சோகங்களாய் எஞ்சின!
மறுக்கப்பட்ட நிலத்தில்
காதலுடன்
கால்புதைய நடக்கவெண்ணும் கனவு!

கடந்த பாதையில் இருபுறமும்
நம்பிக்கைதரும் எச்செய்தியும் இல்லை
போர்வெறில் பெயரிழந்த சுவடுகள்
கனக்கும் இதயம்!
சுவரொட்டியாய் சிரிக்கும் மரணதூதர்!

சலித்துச் சகித்த ஒளியிழந்த முகங்கள்!
சபிக்கப்பட்டது போல்
அனைத்தையும் மறந்த மக்கள்!
''சலித்துப் போன தேசமே....!''
கேவலாய் அவன் குரல்!

எதை எதிர்பார்த்து எதனுடன் இணங்குவது!
அவனால் முடியவில்லை தோற்றுப்போனான்!
வேடனின் கால்கள் மார்பில் அழுந்திக்கிடந்தன!

★★★ ★★★ ★★★

## பகுதி 3: விடைபெறுதல்

அவனே இயற்றிக் கொண்ட
தத்வ தளங்களை உதறி
கீழே இறங்கிய போது
வரவேற்க எவரும் இல்லை!
ஜனத்திரளில் கலந்தான்!

நேசித்த மனிதர்களை
சந்திக்க அவனிற்கு விருப்பம்
அவன் நினைவுகளை பத்திரப்படுத்தினான்!
நன்னாரி வேர்களின் மயிர்க்கணுக்களில்
அவை பதிந்து போயின!
மூலிகை தேடி மனிதர் வருமோர்
காலத்தில் உயிர்ப்பதற்காய்!

என்றுங் கூடவே இருக்கும்
பரிசுத்தமான பாதி
மங்காமல் இருக்கின்றது!

ஓசையற்றுப் போன இரவின் கணங்கள்
குலுங்கும் !
மீண்டும் மீண்டும் அதிர்ந்ததிர்ந்து குலுங்கும்!

மழை சோவெனப் பொழிந்து
பூமி பூத்திருக்கும் நாளை!
நச்சுக் கால்களால் பூமி
கன்றிப் போவதற்கு முன்
அவன் புறப்படுவான்.

★★★ ★★★ ★★★

கவிதையின் பக்கங்களில் போரின் விபரங்கள் வருகின்றன.
மகாபாரத அர்ஜுன சிவவேட, பீஷ்ம அர்ஜுன போர் விபரங்களை ஒத்தவையாக இருப்பினும், அக்கதைகள் தெரிந்திருக்க வேண்டிய அவசியத்தை இக்கவிதை கோரவில்லை. தெரிந்திருப்பின் அதன் தளம் விரிவுபடலாம்!
கவிதை என்பது ஒரு அனுபவமாகவே இன்றுவரை என் புரிதல். எப்போது பிரசுரமாகும் யாரைச்சென்று அடையும் என்பது என்னைப் பாதிக்கவில்லை. உண்மையில் மிகப் பயங்கரமானது இக்கவிதையினை வாசிக்கத்தக்கவர் எவரும் எனக்கில்லாமல் போனது! எனினும் இது எழுதப்பட்டுவிட்டது. ஒரு வருடத்திற்கு மேல் பல்வேறு வடிவங்களை எடுத்துவிட்டது எவராவது பார்க்குமட்டும் சிலையினை சீர்படுத்திக்கொண்டிருக்கலாம். எனக்கு சலித்துவிட்டது!
அறைகூவல் எதிர்ப்புக் குரலில் நம்பிக்கை இழந்த புறப்பட்டுச் செல்கின்ற செய்தியுடன் இக்கவிதை முடிகிறது. எங்கு என்ற செய்தி இத்தரிசு மண்ணில் எப்போதோ விதைக்கப்பட்டுவிட்டது!
வானத்தில் இரைச்சல்! கீழ் மாடிகளில் இரைச்சல், நானோ தனிமையில். நாளை முடிவுகள் தெரியும். நம்பிக்கையுடன் பேனையை மூடுகிறேன்.
-அஸ்வகோஸ்

www.tamilarangam.net




**ஷியாம் பெனகல். இந்தியாவின் ஆற்றல் மிகு திரைப்பட இயக்குனர்களுள் ஒருவர். 1974இல் தயாரிக்கப்பட்ட 'அங்கூர்' அவரை சிறந்த திரைப்பட நெறியாளராக இனம் காட்டியது. எனினும் அதற்கு முன்னரே ஏராளமான விளம்பர மற்றும் விவரணப் படங்களை உருவாக்கியிருந்தார்.**

**திரைப்படம் ஒரு சிறந்த கலைப்படைப்பாக இருக்கும் அதேவேளை பெருமளவு மக்களையும் சென்றடைய வேண்டும் என்கிற ஷியாம் பெனகலை Middle Cinema வின் முக்கியமான நெறியாளராகக் குறிப்பிடுவர் விமர்சகர்.**

**சத்யஜித்ரே என்கிற படைப்பாளியின் பன்முகப்பாங்கை வெளிப்படுத்தும் பாங்கில் ரே பற்றிய ஒரு நீள விவரணப்படத்தைத் தயாரித்திருந்தார்.**

**"திரைப்படம் வெறும் பொழுது போக்கு சாதனம் மட்டுமல்ல, அது ஒரு சமூக விமர்சனமாகவும் தொழிற்பட வேண்டும், பெருமளவிலான மக்களைச் சென்றடைய வேண்டும் என்று கூறும் ஷியாம் பெனகல் மந்த்தன், கலியுக், ஆரோஹறன் என்ற வரிசையில் இறுதியாக நெறியாள்கை செய்த திரைப்படம் தான் மம்மோ. அது தொடர்பாக ASIDE Feb - 13, 1995 இதழில் வெளியான நேர்காணலின் மொழிபெயர்ப்பு கீழே தரப்படுகின்றது.**

**ஆ-ர்**



# "நல்ல சினிமா நிலைக்கும்"

## ஷியாம் பெனகல்

'மம்மோ' பம்பாய் சர்வதேச திரைப்படவிழா ரசிகர்களை வியப்பிலாழ்த்திய, சியாம் பெனகலின் புதிய திரைப்படம். இந்தியாவினை தாயகமாகக் கொண்டு வாழ்ந்த ஒரு இந்தியப் பெண் - முஸ்லிம் பெண் அல்ல - இரவோடிரவாக பாகிஸ்தானுக்கு மாற்றப்படுகிறாள். இரவு படுத்தவள், விழித்தெழுந்து பார்க்கும் போது பாகிஸ்தானில் இருக்கிறாள்! இந்தியாவிலேயே இருக்க அவள் விரும்புகின்றாள். ஆனால் முடியவில்லை. நெஞ்சை அதிரவைக்கும் ஒரு வெளியீடு இது.

இதோ, சியாம் பெனகல் மம்மோ பற்றி கூறுகிறார்.

***"இவ்வாறான ஒரு சிக்கலான திரைப்படத்தை தயாரிக்குமாறு உங்களைத் தூண்டியது என்ன?"***

"சில வருடங்களுக்கு முன், செய்திப்பத்திரிகை ஒன்றில் படித்த ஒரு சிறிய துண்டுச்செய்தி. ஒரு வயதான பெண்மணி திடீரென ஒரே இரவில் பாகிஸ்தானியப் பிரஜையாக்கப்பட்டதன் காரணமாக தனது வீட்டைவிட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது பற்றிய நெஞ்சைத்தொடும் செய்தி அது. அவளது உறவுகள் எல்லாம் இந்தியாவில். திரும்பிவர அவள் துடிக்கிறாள். இந்தக் கருவை காலித் முகமத்திடம் கூறி அவரை ஒரு திரைக்கதை எழுதுமாறு கேட்டேன். மிகுதியை நீங்கள் திரையில் பார்க்கலாம்.

***இது தொடர்பாக தொடர்பு சாதனங்களில் எந்த விடயங்களும் வெளிவராதது ஏன்? இது ஒரு திடீர் வெளியீடாக, எந்தவித முன்னணி முகமும் இல்லாமல் வந்திருக்கிறது...***

உண்மையில் விளம்பரத்திற்கு நேரமே இருக்கவில்லை. திரைப்பட விழாவுக்கு இரண்டொரு நாட்களுக்கு முன்தான் படம் தயாரித்து முடிந்தது. உடனேயே தணிக்கை செய்யப்பட்டு இங்கே திரையிடப்பட்டது. ரசிகர்கள் எதிர்பாராத விதமாக இவ்வாறு இப்படம் வெளியானது குறித்து எனக்கு மகிழ்ச்சியே.

***இந்தப் படத்தின் மூலம், எமது சமூகத்திலுள்ள குறுகிய குழுவாத பிரிவினைவாதப் போக்குகள் குறித்த உங்களது ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளதாக கொள்ளலாமா?***

ஒரு வகையில் உண்மைதான். தென்கிழக்கு ஆசியாவின் ஒரு பகுதி முடிவேயின்றி பல்வேறு தேசங்களாக உடைந்து வருகிறது என்னை அடிக்கடி உறுத்தும். நாம் ஒருவரிலிருந்து ஒருவர் எந்தக் காரணங்களுமின்றியே அன்னியமாகி வருகின்றோம். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில், ஒரு குறிப்பிட்ட வாழ்வு முறையில் ஒன்றாக வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் திடீரென்று போடப்படும் எல்லைகளால் பிரிக்கப்படுகிறோம். இது உலகின் பிறபகுதிகட்கும் பொதுவான உண்மைதான். உதாரணத்துக்கு யூகோஸ்லாவியாவைப் பாருங்கள்.

***அதாவது படத்தில் நீங்கள் வெறும் மம்மோவின் கதையை மட்டும் சொல்லவில்லை. எமது வாழ்வினை அவலத்துக்குள்ளாக்கிக் கொண்டிருக்கும் அமைப்பின் மீது உங்கள் கவனத்தைக் குவித்துள்ளீர்கள்.***

"நிச்சயமாக இது வெறுமனே ஒரு மம்மோவின் கதை மட்டுமல்ல."

***மம்மோ நாடுகடத்தப்பட்ட பின்பும் கூட நீங்கள் கதையைத் தொடர்வதற்கு இதுதான் காரணமோ?***

நல்லது. நான் பிரதான கதைக்கு ஒரு முடிவுரையை வழங்க விரும்பினேன். அது இந்த சமூகத்தை எவ்வளவு மோசமாக நாம் மாற்றி விட்டுள்ளோம் என்று குறிப்பிடுவதாக அமைய வேண்டும் என நினைத்தேன். என்னைப் பொறுத்தவரை இரண்டும் இரண்டும் நாலு என்று சொல்வதற்காக ஒரு படம் தயாரிப்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அவ்வாறான படங்களில் எதுவுமே இருப்பதில்லை. சினிமா மூலமான அனுபவமானது இந்த இரண்டுமிரண்டும் நாலு என்கிற கூட்டல் அனுபவத்தை விடவும் மேலானதாக இருக்க வேண்டும்.

***வித்தியாசமாக நீங்கள் இந்தப் படத்தில் பல குரல்களை 'டப்' செய்யாமலே தயாரித்திருக்கிறீர்கள்.***

"நடிப்பையும், குரலையும் வேறுபடுத்துவது முடியாது. நடிப்பு உரையாடலுடன் சேர்ந்தே வருகிறது. 'டப்பிங்' செய்வது எமது திரைப்படங்களில் ஒரு தனியான துறையாக வளர்ந்துள்ளபோதும், என்னைப் பொறுத்தவரை நடிப்பு உரையாடலிலிருந்து பிரித்து செய்யப்பட வேண்டும் என்பதில் நம்பிக்கை அற்றவன் நான்.

***சினிமாத்துறை நீண்ட தூரத்தைக் கடந்து வந்துவிட்டது. இப்போது நூற்றாண்டைக் கூட கடந்துவிட்டது. அதன் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?***

சினிமா, ஒரு கலை வடிவம் என்ற முறையில் தன்னைத்தானே பரிசீலித்துக்கொள்ள இப்போது நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. இப்போது தொலைக்காட்சி பொழுது போக்குக்கான பிரதான சாதனமாக மாறிவிட்டபடியால், சினிமாக்கலைக்கு இன்னும் அதிகளவான தெளிவான பாத்திரம் உண்டு என்பது தெளிவு. அது காத்திரமான விடயங்களை வெளிக்கொணர்வதில் கவனம் செலுத்த வேண்டும். தொலைக்காட்சியின் வருகையையும் வளர்ச்சியையும் கண்டு சினிமாத்துறை இறந்துவிடப்போவதாக எண்ண வேண்டியதில்லை.

?

உதாரணமாக 'தியேட்டர்' (அரங்கு) ஒரு காலத்தில் பிரதான வெகுஜன பொழுதுபோக்கு சாதனமாக இருந்தது. இப்போது அது சினிமாவின் வருகைக்குப்பிறகு காத்திரமான விடயங்கள் குறித்து தனது கவனத்தை திருப்பியுள்ளது. அது இன்னமும் பலமாக உள்ளதுடன் படைப்புத்துறையில் புதிய பாதைகளைத் திறந்துமுள்ளது. நல்ல 'தியேட்டர்' பார்வையாளர்களை தன்னுடன் தொடர்ந்தும் வைத்துக்கொண்டுதான் இருக்கிறது. அது சினிமாத்துறைக்கும் உண்மைதான். நல்ல சினிமா, தொலைக்காட்சி இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, வாழும்.



# சிவானந்தன்



சிவானந்தன் காலமானார் எனும் செய்தி சுமார் ஒரு மாதகாலத்தின் பின்னரே தெரியவந்தது. சிவானந்தன் எமது நெருங்கிய நண்பர் அல்ல; எனினும், பரஸ்பரம் தொடர்பு கொண்டவர். ஒரு "சாதுவான அப்பிராணி" அவர்.

சிவானந்தன் பல்துறைகளில் ஈடுபாடுகொண்டவர். நடிகனாக, நாடக ஆசிரியனாக, கவிஞனாக, நெறியாளனாகக் கலைத்துறையில் ஈடுபாடுகொண்டார். அதில் அவர் பல வெற்றிகளையும் சாதித்திருக்கிறார்.

அபசுரம், கடூழியம், கந்தன் கருணை, வெறியாட்டு முதலானவை இவர் நடித்த நாடகங்கள். அபசுரம் நாடகத்தில் இவரின் நடிப்புத்திறனை இப்போதும் பலர் மெச்சுவர். விடிவை நோக்கி, காலம் சிவக்கிறது முதலானவை இவர் எழுதிய நாடகங்கள். இவர் எழுதி வெளியிட்ட நூல்கள் கண்டறியாதது, இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் நாடக அரங்கம் ஆகியன. நாடகம் நான்கு, மல்லிகைக் கவிதைகள், தாயகம் கவிதைகள் அறுபத்தாறு ஆகிய நூல்களில் இவரது படைப்புக்கள் இடம் பெற்றன.

நாடக, அரங்கச் செயற்பாடுகளில் இவர் கணிசமானளவு ஈடுபாடு கொண்டிருந்தார். கொழும்புப் பல்கலைக்கழகம் நடாத்திய "நாடகமும் அரங்கியலும்" பற்றிய இரண்டு வருட முழுநேர பட்டப்பின் படிப்பு நெறி இவரது ஆர்வத்திற்கு காரணமாய் அமைந்தது. ஹென்றி ஜயசேன, தம்ம ஜாகொட முதலான சிங்கள அரங்கக் கலைஞர்களுடனும், அ.தாசீசியஸ், குழந்தை ம. சண்முகலிங்கம் முதலான தமிழ் அரங்கக் கலைஞர்களுடனும் இப்பயிற்சி நெறியை இவர் மேற்கொண்டார்.

கிராமியப் பேச்சுவழக்கில் இவரது கவிதைகளும் சிறப்புப் பெற்றன. பாலப்பம் பற்றிக் கவிதை:

***"சொண்டால் வழிகின்ற***
***சுவையான பால் நக்கித்***
***தின்டால் இரண்டப்பம்***
***திகட்டாது திவ்வியமே***
***பால் சிந்தி வாய் வழியும்***
***பாலப்பம் வலு எழுப்பம்"***

இத்தகு சிறப்புப் பெற்ற, கவிஞர் இ.முருகையனின் சகோதரரான, இ.சிவானந்தன் 06.03.1995 அன்று காலமானார் எனும் செய்தி நெஞ்சில் துயரை எழுப்புகின்றது.


அஞ்சலி கூறி என்ன பயன்? அவரை இவ்வேளையில் நினைவு கூர்வோம்.

**மாதவன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மாத்தனின் கதை

"அம்மா, அப்பா இன்னிக்கும் வரலியா?" பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும் வேளையில் திரேஸ்யா தன் தாயிடம் கேட்டாள்.

பிரார்த்தனைக்கிடையேயும் படகுத்துறையில் தோணி வரும் சப்தம் கேட்கிறதா என கவனித்துக் கொண்டுதான் இருந்தாள் மரியா.

"வருவாங்கம்மா. இன்னிக்காவது வந்துடுவாங்க" என்று கூறினாள்.

மரியா மீண்டும் அன்றைய 'அப்ப'த்திற்காக பிரார்த்தித்தாள். கிடைத்துள்ள 'அப்ப'த்திற்காக நன்றி கூறினாள். திரேஸ்யாவும் தன் தாயின் வாக்கியத்தை உள்வாங்கி மீண்டும் கூறினாள். கைகளை நீட்டி தலையை ஒரு பக்கமாகச் சாய்த்து உடை, அவிழ்ந்து, வயிறு ஒட்டி, பாதி திறந்த அதரங்களோடும், பகுதி மூடிய நயனங்களோடும் மேலே நோக்கி சிலுவையில் தொங்கும் அந்த உருவத்தை திரேஸ்யா உற்று நோக்கினாள். காடா விளக்கின் மங்கிய வெளிச்சத்திலும் கூட அந்த அதரங்கள் அசைவதாகத் தோன்றியது. கர்த்தர் என்னவோ சொல்வதற்கு நினைக்கிறார்!

"எங்கள் மேல் கிருபை காத்தருளும் கர்த்தரே!" என்று அம்மா மீண்டும், பிரார்த்தித்தாள். அதை திரேஸ்யா தொடர்ந்து சொல்லவில்லை.

பக்கத்தில் படுத்துத் தூங்கும் ரோஸியா முனகத் தொடங்கினாள். திரேஸ்யா மீண்டும் "அப்பா வரலேன்னா, நாம எப்படிம்மா ராத்திரிக்குச் சாப்பிடறது?" என்று கேட்டாள். அதற்கும் அந்த குடும்பத் தலைவி நம்பிக்கையுடன் "வருவாரம்மா" என்று கூறினாள்.

"வெளக்கு நிக்கப் போவுதம்மா!"

மரியா விளக்கை எடுத்து மீண்டும் ஒருமுறை குலுக்கினாள்.

மாலை முடிந்து அந்தியும் அஸ்தமித்தது. மழைச்சாரல் அதிகரிக்கத் தொடங்கிற்று. காற்றும் வீச ஆரம்பித்தது.

மரியா மௌனமாக கண்களை மூடி அமர்ந்து பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். ஒரு ஆள் உயரத்தில் அலைகள் அடிக்கும் காயல்களைத் தாண்டி, ஆற்றில் சுழன்றடிக்கும் நீரோட்டத்திற்கு எதிரே எதிர்த்துச் சென்று தூரத்தில் காணும் மலையடிவாரம் வுரையில் அவளின் கணவன் போயிருக்கின்றான். படகுத்துறையை காண முடியாது; கையிலுள்ள மூங்கில் கோல் ஒடிந்தால் அவ்வளவுதான். எல்லாமே போச்சு... மரியா கர்த்தரின் பாதத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள், அவளுக்கு இரண்டு பெண் குழந்தைகள்தான் கிடைத்தன.

"இந்த மழையும் காத்துமெல்லாம் அப்பா மேல இப்ப விழுந்து கிட்டிருக்கும். அதுனால ஜுரம் கூட வருமில்லையாம்மா?"

மரியா கண்களைத் திறந்தாள். இதே நேரத்தில் அவளும் அதைத்தான் நினைத்துக்கொண்டிருந்தாள்.

விளக்கு இப்போது அணைந்துவிடும், படித்துறையில் தோணி வரும் ஓசை கேட்டது போல் தோன்றியது. தாயும் மகளும் வெளிப்புறமாக நோக்கினார்கள். ஒரே கும்மிருட்டு! எதையும் காணமுடியவில்லை. மீண்டும் சப்தம் கேட்டது.

"அப்பாவாம்மா!"

"அம்மா, திரேஸ்யா!

வெளியிலிருந்து யாரோ அழைக்கிறார்கள்.

"அந்த வெளக்கக் கொஞ்சம் காட்டும், திரேஸ்யா!"

"வெளக்குல ஒண்ணுமில்லேப்பா!"

என்றாலும், திரேஸ்யா விளக்கை எடுத்துக் கொண்டு திண்ணைக்கு வந்தாள். அப்போது அது அணைந்தேவிட்டது.

மாத்தன் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். அவன் கையில் ஒரு கூடையும் ஒரு பெரிய மூட்டையும் இருந்தது.

"விளக்கக் கொஞ்சம் ஏத்திக்கிட்டு வாம்மா!"

"நெருப்பில்லேப்பா?"

திரேஸ்யா தந்தையைக் கட்டிப்பிடிப்பதற்காக இரு கைகளையும் நீட்டி இருளில் துழாவிக் கொண்டிருந்தாள். ஆனால், தந்தை எங்கிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. ரோஸியாவும் விழித்துக் கொண்டாள். அவள் தந்தையை அழைத்தாள். தந்தையும் அவளின் அழைப்பைக்கேட்டான். தந்தையைக் கட்டிப்பிடிப்பதற்கான முயற்சியில் ரோஸியாவின் தலை திரேஸியாவின் உதட்டில் இடித்துவிட்டது.

"அடுப்புல நெருப்பில்லியாம்மா?" என்றான் மாத்தச்சன்.

"இன்னிக்கு அடுப்பே பத்த வைக்கலியேப்பா!"

மாத்தச்சனின் உடல் முழுவதும் ஒரு சூடு பரவிற்று. இன்றைக்கு அடுப்பு பத்த வைக்கவில்லையா!

"எம் புள்ளங்களுக்கு ஒண்ணும் கொடுக்கலயாட்டி! அதுங்க ஒண்ணும் சாப்பிடலையாட்டி?"

"அப்பா நனைஞ்சுருக்காங்க."

முதலில் தந்தையைத் தேடிக் கண்டுபிடித்துத் தொட்டுப் பார்த்த ரோஸியாதான் அதைக் கூறினாள். மாத்தச்சன் ரோஸியாவை தூக்கிக் கொண்டான்.

"அதுங்களுக்குக் காலையிலும் மத்தியானமும் கொஞ்சம் கொடுத்தேன். சாயங்காலம்தான் ஒண்ணும் கெடைக்கல."

மரியா சொல்லத் தொடங்கினாள். பக்கத்து வீடுகளிலிருந்து இரண்டு வேளையும் குழந்தைகளுக்குத் தேவையானது கிடைத்தன. அன்று எந்தவொரு வேலையும் செய்ய முடியவில்லை. பெரும் மழையும் காற்றுமாக இருந்தது. வீட்டிலும் ஒன்றும் இல்லை.

"அப்போ, நீ ஒண்ணும் சாப்பிடலியா?" - மாத்தச்சன் தன் மனைவியிடம் கேட்டான்.

"இல்ல"

மகளைக் கீழே இறக்கி நிற்க வைத்துவிட்டு, மாத்தச்சன் தீப்பெட்டி வாங்கிவரப் போனான்.

அன்றிரவு நடுச்சாமத்தில்தான் அந்த வீட்டின் வெளிச்சம் அணைந்தது. அதன் பின்பும் அங்கு உறக்கம் இல்லை. கணவனும் மனைவியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"மூணு ரூபாதான் கொடுத்தாரு. அதுக்குப் பின்னால அந்த மனுஷன் கார்ல ஏறிக்கிட்டு எர்ணாகுளத்துக்கு பேயிட்டாரு"

என்று கணவன் சொல்லிக்கொண்டிருந்தான்.

"அப்புறம் அந்த நாலு பணம் ஏது?"

"அது நேத்திக்குக் பாலா(பாலா கோட்டயம் அருகில் உள்ள நகரம்)வில் காலையில் காப்பிக் குடிக்கிறத்துக்காக தந்தாரு. பழைய கஞ்சியும் இல்ல. நான் காப்பியும் குடிக்கல"

"அரிசி எங்கேர்ந்து கெடைச்சிது?"

"அது வழிச் செலவுக்காக தந்ததுல மிச்சம் மீந்தது. எவ்வளவு இருந்தது?"

ரெண்டு படி"

மாத்தச்சன் போன பின்னால வீட்டில் நடந்த விஷயங்களைப் பற்றி மரியா கணவனுக்குச் சொன்னாள். மற்றைக் காட்டுக்கு இரண்டு நாட்கள் ஓலை பின்னுவதற்குச் சென்றாள். அதற்கும் கூலியாக ஒன்பது பணம் கிடைத்து. ஒருநாள் அறப்புறத்து வீட்டில் நெல் குத்தினாள். இன்றைக்கு மழைபெய்து கொண்டிருந்ததால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

"நா கொழந்தைகள ஒண்ணும் அப்பிடியே பட்டினிப் போட்டுடல."

"நீ மட்டும் பட்டினி கெடந்தியாக்கும்?"

மீண்டும் சிறிது நேரம் நிசப்தம் விளையாடியது. ஆனால், அந்த நிசப்தம் மிகவும் ஆழ்ந்ததாக இருக்கவில்லை. ஒவ்வொருவரின் மனதில் சுழன்றாடும் சிந்தனையினால் அது அபரிமிதமாக இருந்தது. எந்த நிமிடமும் அந்த அமைதியிலிருந்து சப்தம் எழும்பலாம்.

"இப்ப எவ்வளவு வந்திருக்கும்?"

"இதயும் சேர்த்தா? பதினாலாவும்!"

"பூராவுமா கொடுக்கப் போறீங்க?"

"பின்னே என்னாடி! இந்த ஒரு வருஷத்துலியே இவ்வளவு தான் சேர்ந்திருக்கு. அவளுக்கும் வயசு எட்டாயிட்டுதேடி? இன்னும் அஞ்சாறு வருஷந் தாண்டி இருக்கு!"

"அதுக்குச் சொல்லல. நாளைக்கு எப்படி பூராத்தையும் கொடுக்க முடியும்?"

"அதுல்லாம் கொடுக்க முடியும்டி!"

சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு, "பத்துப் பணம் கொறைச்சலாத்தான் கொடுக்க முடியும்னா அந்த அளவுக்கு கொஞ்சம் கொறையுள்ள பையனா தான் கிடைப்பான். அதனால நாமும் கொஞ்சம் கஷ்டப்பட்டாதான் முடியும்?" என்று மாத்தச்சன் கூறினான்.

அந்த யோசனைக்கு மனைவியும் சம்மதித்தாள்.

எதிர்காலத்தைப் பற்றிய திட்டங்களில் மூழ்கி அந்த மனங்கள் நித்திரையில் ஆழ்ந்தன. அப்போதும் அந்த கணவன் மனைவி இருவரும் கனவு கண்டு கொண்டிருக்கலாம்.... மகளின் திருமணம் பற்றி... அவளின் வீட்டைப் பற்றி.... அப்படி பலவற்றையும் பற்றி......

*** *** ***

விடிவதற்கு முன்பே மாத்தச்சன் அறப்புறத்து வீட்டிற்குச் சென்றான். அப்போது அங்கு சாக்கோவை காண்பதற்காக நான்கைந்து நபர்கள் வந்திருந்தார்கள்.

சாக்கோ அந்த ஊரிலேயே நிறைய சொத்துள்ளவர். நிறைய நிலங்களும் மனைக்கட்டுகளும் உண்டு. அவர் சொத்து சேர்த்தது பற்றி ஊரில் பற்பல கதைகளும் பேசுகின்றனர். இருப்பினும் அவர் தற்பெருமை பேசுவதில்லை. எப்போதும் நல்ல வார்த்தையும் வசனமும்தான் அவரிடமிருந்து வரும். முகத்தைச் சுணங்கியோ, கடுமையாகவோ வைத்துக் கொண்டு ஒரு வார்த்தை கூட யாரிடமும் பேசியதில்லை. அதே போல்தான் கடவுள் பக்தியும். ஒரு ஞாயிற்றுக்கிழமையில் கூட சர்ச்சிற்குப் போகாமல் இருந்ததில்லை. எது கூறுவதாக இருந்தாலும் தெய்வத்தை முன் வைத்துதான் கூறுவார். சர்ச்சுக்குக்கூட ஆயிரம் ரூபாய் தர்மம் கொடுத்துள்ளார்.

சாக்கோ விழித்தெழுந்து வெளியில் வந்த போதே மாத்தச்சனைப் பார்த்தார். மாத்தச்சனும் அவரைப் பார்த்து விட்டான்.

"எப்ப வந்தே மாத்தச்சா?"

"நேத்திக்கு ராத்ரிலே வந்துட்டேன்க."

சாக்கோச்சனை ரகசியமாகப் பார்த்து விடவேண்டும் என்பது மாத்தச்சனின் திட்டம். ஆனால், ஒவ்வொரு விஷயத்திற்கும் அங்கே நான்கு பேர்கள் வீதம் வந்திருந்தார்கள். அதே போல் வந்து கொண்டும் இருந்தார்கள். மாத்தச்சன் அமைதியற்றவனாக நேரத்தைக் கழித்தான்.

சாக்கோச்சனின் மகள் வந்து காப்பி தயாராகிவிட்டது என்று கூறினாள். உடனே அங்கிருந்தவர்களை உட்கார்ந்திருக்குமாறு கூறிவிட்டு சாக்கோச்சன் உள்ளே போனார். அவருடன் மாத்தச்சனும் உள்ளே தொடர்ந்து சென்றான். சிறிது நேரமானதும் மாத்தச்சன் திரும்பி வந்தான். அவனுடைய முகத்தில்தான் எப்படியொரு பிரகாசம் வந்துள்ளது! ஒரு பெரிய காரியத்தைச் சாதித்த திருப்தியல்லவோ அதில் தெரிகிறது! அந்த மூன்று ரூபாயையும் பத்திரமாக சாக்கோச்சனிடம் ஒப்படைத்து விட்டான். அதே போல், அவனுடைய ஜீவிதத்தின் எல்லாமான திரேஸ்யாவின் வரதட்சணையில் பதினான்கு ரூபாய் சேர்ந்து விட்டது.

கொஞ்சம் விறகைப் பிளந்து கொடுக்குமாறு கூறி சாக்கோச்சனின் மனைவி வடக்குப்பக்கத்திற்கு மாத்தச்சனை அழைத்தாள். விறகைப் பிளந்து போட்ட பின் மாத்தச்சனை வேறொரு வேலைக்காக சாக்கோச்சன் அழைத்தார். வயலில் உழவு வேலை நடைபெறுகிறது. அந்த இடத்திற்கு சாக்கோச்சன் ஒரு முறை சென்று வர வேண்டும். அங்கு போய் வருவதற்கு மாத்தச்சனை படகைத் துழாவிச் செல்ல அழைத்தார்.

படகில் செல்லும் போது மாத்தச்சன் சாக்கோச்சனின் செல்வாக்கையும் பெருமையையும் பற்றி கூறினான். பாலாயி முழுவதும் சாக்கோச்சனைத் தெரிந்துள்ளார்களாம். இன்ன ஊர்க்காரன் என்று கூறினாலே போதும், சாக்கோச்சனின் பக்கத்திலியா இருக்கறே என்பதுதான் அவர்களின் கேள்வியாகவுள்ளது. மாத்தச்சன் சாக்கோச்சனின் மகளுக்கு ஒரு வரனைப் பார்த்து வைத்துள்ளானாம். ஒரு தந்தைக்கு ஒரே மகன். கோடீஸ்வரனும் கூட. தோட்டங்களும் எல்லாமும் உண்டு. அதைக் கேள்விப்பட்டதும் யோசிக்கலாம் என்று சாக்கோச்சன் கூறினார்.

வயலிலிருந்து திரும்பி வந்ததும் மாடு கன்றுகளுக்கு வைக்கோலை பிடுங்கிப்போடும் வேலை மாத்தச்சனுக்குக் கிடைத்தது. அதன் பின் ஓலை கிழிக்கும் பணி. கிழிக்கும் பணி பின்பு, ஒம்பது பறை நெல்லை அளக்க வேண்டும். அப்படி இப்படி என்று அன்றைய பொழுதே போய்விட்டது.

மாத்தச்சனால் நிற்க முடியவில்லை. காலும் கையும் ஸ்தம்பிக்கின்றன. வடக்குப்பக்கம் சென்று சமையல்காரியிடம் ஒரு கிளாஸ் சுடு தண்ணீர் கேட்டான். அதில் தண்ணீர் இல்லை . அரிசிதான் அடுப்பில் கிடந்தது.

அந்த உரையாடல் அங்கு நடந்துகொண்டு இருக்கும் போதே சாக்கோச்சன் அங்கே வந்தார்.

"என்னடா டேய்! இப்பவா சுடுதண்ணி குடிக்கிறது?"

சிறிது சோர்வுடன் மாத்தச்சன், "ஒண்ணுமில்லீங்க, கொஞ்சம் களைப்பா இருக்குங்க" என்றான்.

"மத்தியானம் சாப்பிட்டேல்லே?"

"ஒண்ணும் சாப்பிடலேங்க"

"ஏன்?"

"வூட்ல ஒண்ணுமில்லேங்க."

அப்போது வேலைக்காரர்கள் கூலிக்கு வந்தார்கள்.

சாக்கோச்சன், "இங்க வாப்பா, இவுங்க கூலிய கொஞ்சம் அளந்துபோடு" என்று கூறினார்.

கூலியை அளந்து முடித்தபோது அந்தியாகிவிட்டது. சாக்கோச்சன் பிரார்த்தனை செய்யப் போக வேண்டும். மாத்தச்சனின் மனம் ஒரு நிலையில் நிற்கவில்லை. தலையைச் சொரிந்து கொண்டு அவன் சாக்கோச்சனின் பின்னால் போனான்.

சாக்கோச்சன் திரும்பி பார்த்து, "ஏன்டா போலியா?" என்று கேட்டார்.

"நாலாளு கூலி நெல்லு...."

"நெல்லா? எதுக்கு?"

"புள்ளைங்களுக்கு வூட்ல ஒண்ணுமில்லீங்க."

→

**<u>தகழி சிவசங்கரப்பிள்ளை</u>**

**'கடலின் அக்கரை போனோரே காணாப் பொன்னெனப் போனோரே' என்கிற மலையாளப் பாடல் இப்போதும் உங்கள் காதுகளுள் ஒலித்துக்கொண்டிருக்கலாம். அப்பாடல் இடம் பெற்றிருந்த திரைப்படம் 'செம்மீன்'. பார்த்தவர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.**

**அந்த 'செம்மீன்' நாவலாசிரியர் தான் இந்த தகழி சிவசங்கரப்பிள்ளை.**

**1930 களில் எழுத ஆரம்பித்தவர், அரை நூற்றாண்டுக்கும் மேலாக மலையாளத்தில் இலக்கியம் படைத்துவரும் ஒரு படைப்பாளி.**

**எண்ணூறிற்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், நாற்பதுக்கு மேற்பட்ட நாவல்களையும் படைத்திருக்கிறார்.**

***'சமூகப் பிரச்சினைகள் உருத்திரிந்து வரும் போது உணர்வுபூர்வமாகத் தான் நான் எழுதத் தொடங்குகிறேன். அது என்னிடமுள்ள ஒரு குணமாகவே ஆகிவிட்டது. அப்படித்தான் நான் என்னுடைய எல்லா நாவல்களையும் எழுதியுள்ளேன். வாழ்க்கையையும், வாழ்க்கையில் வளர்ந்து வரும் பிரச்சினைகளையும் தெளிவாக்கும் போது எனது பலவீனத்தாலோ, அணுகுமுறையிலுள்ள குறையினாலோ எரிச்சல் உண்டாகலாம். ஆனால் வாழ்க்கையும், வாழ்க்கையில் இருந்து இயல்பாகவோ, இல்லாமலோ உயர்ந்து எழும் பிரச்சினைகளும் தான் எனக்கு எப்போதும் கதை எழுதுவதற்கான தூண்டுதல்களாக இருந்து வந்துள்ளன'***

**என்று தனது படைப்பின் பாங்கு பற்றி கூறுகிறார் 'தகழி. *'ஒரு கதையின் படைப்பும், என் வயலில் விதைத்த விதை முளைவிட்டு எழும்புவதும் எனக்கு தரும் ஆத்ம திருப்தி ஒரே அளவில் தான் உள்ளன'* என்பது அவரது படைப்பனுபவம்.**

**தகழியைப் பூரணமாக அறிந்து கொள்ளும் வகையில் அவரது 12 சிறுகதைகளையும், ஒரு நாவலையும், அவருடைய படைப்புக்கள் பற்றிய திறனாய்வுகள், அவரின் வாழ்க்கைச் சம்பவங்கள் ஆகியவற்றையும் குறிஞ்சிவேலன் மொழிபெயர்க்க <u>வேர்கள் இலக்கிய இயக்கம் வெளியிட்டுள்ளது</u>. அத்தொகுப்பிலிருந்து இக்கதை பிரசுரிக்கப்படுகிறது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''நான் பிரார்த்தனை செஞ்சிட்டு வர்றேன்..'' நான்கு ஆட்கள் கூலி நெல்லும், இரண்டு ஆட்கள் கூலி மதிய சாப்பாட்டிற்குமாக ஆறு ஆட்கள் கூலியை இதுவரை செய்த வேலைகளுக்காக கேட்க வேண்டுமென்று மாத்தச்சனுக்குத் தோன்றிற்று.

*** *** ***

அந்த ஏழையின் வாழ்க்கையிலும் நிகழ்ச்சிகளைத் தோன்றச் செய்து காலம் ஓடிக்கொண்டிருந்தது. இப்போதும் சில நேரங்களிலெல்லாம் கடலுக்கு யாரோடு கூடவாவது படகைச் செலுத்திக் கொண்டு மாத்தச்சன் போவதுண்டு. ஆனால் அவனுக்கு முன்பு போல் சக்தியில்லை. உடல் க்ஷீணிக்கத் தொடங்கிற்று. அவனால் துடுப்பைத் துழாவ முடியவில்லை என்றும் எல்லோரும் கூறுகிறார்கள். ''என்னயும் கூப்பிட்டுகிட்டுப் போங்க!'' என்று மாத்தச்சன் அவர்களை வேண்டிக் கொண்டாலும் கூட, வேறு யாரும் கிடைக்கவில்லை என்னும் நிலைமை வரும்போதுதான் சிலர் மாத்தச்சனை அழைப்பார்கள். எதையாவது கொடுத்தால் போதும், என்றாலும் அவன் ஒரு பெரிய கணக்கைச் சொல்வான்.

சாக்கோச்சனின் வீட்டில் மாத்தச்சனால் செய்யக்கூடிய வேலைகள் நிறைய உண்டு சில்லரை வேலைகள்தான். எங்கும் வேலை இல்லை என்றால்தான் அவன் அங்கே போவான். எல்லா வேலைகளையும் பார்ப்பான். சாயங்காலம் கூலி அளக்கும் போது நான்கைந்து கூலியாள் கூலியைக் கேட்டு வாங்குவான். மரியாவிற்கும் அங்கே வேலை இருக்கும். நாட்கள் ஓடின.

ஆனால் அவ்வாறு நாட்கள் ஓடினால் போதுமா? உடுக்க வேண்டாமா? சர்ச் வழிபாடுகள் நடக்க வேண்டாமா? பிள்ளைகளின் படிப்புக்குச் செலவு செய்ய வேண்டாமா? எல்லாமும் சாக்கோச்சனால்தான் நடந்தன. இடையில் யாருக்காவது உடல் நலமில்லை என்றால் சிகிச்சைக்கான செலவுக்கும் சாக்கோச்சன் தான் வேண்டும்.

''அந்த ஆளு இல்லேன்னா, நம்மால என்னடி செய்ய முடியும்?''

'' நானும் அதைத்தான் நெனைக்கிறேன்.''

ஆனால், என்ன செய்திருக்க முடியும்? சாக்கோச்சன் அவர்களின் காப்பாளனாக மாறியிருந்தார். முகம் சுளித்து ஒரு வார்த்தை கூட பேசுவதில்லை. எப்படிப்பட்டதொரு கருணை! எப்படிப்பட்டதொரு தெய்வ நம்பிக்கை! சாக்கோச்சனுக்கு ஐசுவரியம் அதிகரிக்கிறதென்றால் அதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது.

*** *** ***

அந்தப் பாவப்பட்டவனின் கனவுகள் மகளின் எதிர்காலத்தில் வியாபித்திருந்தன. அவர்களின் வாழ்க்கையிலுள்ள முயற்சிகள் முழுவதையும் சட்டென்று ஒழுங்குபடுத்தி விடலாம். அந்த அளவிற்குக் குறைவாகத்தான் உள்ளன. பச்சைக்குழந்தைகள் பிறக்கின்றன; கைகால்களை அசைக்கின்றன; கவிழுகின்றன; உட்காருகின்றன; நான்கு கால்களால் நகர்கின்றன; வளர்ந்து வருகின்றன; தாய் தந்தையரை நேசிக்கத் தொடங்குகின்றன. குழந்தைகள் மேலும் வளருகின்றன; அந்தப் பச்சைக் குழந்தைகள் சிறிய துண்டுகள் அணிந்து சிலேட்டும் புத்தகமுமாக பள்ளிக்கூடத்திற்கும் செல்கின்றன.

அவர்களை மட்டும் இவர்கள் தங்களின் வாழ்க்கையில் சாதிக்கவில்லை. அதற்கும் மேலாக, அக்குழந்தைகள் வளர்வதோடு இணைந்து ஒருபோதும் மறக்க முடியாத ஒரு கணக்கையும் கூட அவர்களின் மனதில் எழுதிக் கொண்டிருந்தார்கள். தேதிப்படி அந்தக் கணக்கும் வளர்ந்தது. சாக்கோச்சனிடம் தினந்தோறும் கொஞ்சமாவது காசை ஒப்படைத்திருப்பார்கள். அவ்வாறு அந்த எண்ணிக்கையும் வளர்ந்தது. இப்போது தொண்ணூறு ரூபாய் வரையில் அத்தொகை வளர்ந்திருந்தது.

அவவாழ்க்கையில் தூண்டுதல் தேவையுணர்வாகவே இருந்தது. எங்களுக்குக் குழந்தைகள் உண்டு என்னும் நினைவு அவர்களின் உயிர்மூச்சாகவே இருந்தது. இக்குழந்தைகளுக்காகவே அவர்கள் வாழ்கிறார்கள்; ஆம், அவர்களுக்காகவேதான் தினந்தோறும் இரவில் படுத்துத் தூங்கும் போது மனைவியும் கணவனும் சேர்ந்து கணக்குக் கூட்டுவார்கள். அவ்வாறு அந்த எண்ணிக்கை உயர்வதில் அவர்கள் திருப்தியும் படுவார்கள். ஆம், அது அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. அப்படி அது அதிகரித்து அதிகரித்து...

மனைவி கணவனிடம் கேட்பாள்:

''எவ்வளவு ரூவா இருந்தா, கொஞ்சம் நல்ல மாதிரியான ஒரு பையன் கெடைப்பான்.''

''பத்தாயிரம் பணம் இருந்தாலே போதும், நஞ்சை புஞ்சை உள்ளவனே கெடைப்பான்.''

அந்தப் பெண் மீண்டும் கணக்குப் போடுவாள். இன்னும் எத்தனை வருடத்தில் அந்தக் கணக்கை அடைய முடியும்?

அவ்வாறு தாங்கள் தங்களின் பிள்ளைகளுக்காகத்தான் சம்பாதிக்கிறோம் என்னும் திருப்தியே அந்த வாழ்விற்கு மகிழ்ச்சியை அளித்தது. பட்டினியிலும் கூட அந்த வீட்டில் எவ்வித முணுமுணுப்புமில்லை. எப்போதும் ஒரே உற்சாகம்தான். பெண்களைக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டிய அளவு பணம் உள்ளது என்பதே அந்த உற்சாகத்திற்குக் காரணம்.

மாத்தச்சனின் உற்சாக இயல்பும் கூட ஊரில் பிரசித்தமாக இருந்தது.

திரேஸ்யா தினந்தோறும் இரவில் தாய் தந்தையர்களுக்கிடையே நடைபெறும் உரையாடலைக் கவனிப்பாள். ஒவ்வொரு நாளும் சேமிப்புக் கணக்கு உயர்வது அவளுக்கும் தெரியும். சில சமயங்களில் அவர்களின் கணக்கில் பிழை ஏற்படும். நான்கும் மூன்றும் எட்டாகும். அது தவறு என்பதும் அவளுக்குத் தெரியும். அதைக் கூறுவதற்கும் நாக்கு நீளும். ஆனால், சப்தம் வெளியே வராது. சிறுமிதான் என்றாலும், அவளும் ஒரு பெண் தானே?

எனவே திரேஸ்யாவிற்கு ஒரு தற்பெருமை உண்டு தன்னம்பிக்கை உண்டு. அவளின் நிலையில் அந்த அளவிற்கு ஆபத்து இல்லை.

மீன் வியாபாரி தோமாவின் மகள் ஒருநாள் ''நாங்க ரொம்ப ஏழைங்க'' என்று திரேஸ்யாவிடம் கூறினாள்.

திரேஸ்யா அப்போது ''நாங்களும் ஏழைங்கதான். இருந்தாலும் இப்ப இல்ல'' என்று கூறினாள்.

அதன் அர்த்தத்தை புரிந்து கொள்ளாமல் சாக்கோச்சனின் மகள் உரக்கச் சிரித்தாள். வீறாப்புடன் மேலும் ஒருமுறை அதே வாக்கியத்தைத் திரேஸ்யா கூறினாள்.

ஆமாம், திரேஸ்யாவிற்கு வேண்டுமானால் அதன் அர்த்தம் புரியலாம். மற்ற யாருக்கும் அதன் அர்த்தம் புரியவில்லை.

ஒரு நாள் மதியம் பள்ளிக்கூட முற்றத்திலுள்ள மாமரத்தின் கீழே திரேஸ்யாவும் சிநேகிதிகளும் விளையாடிக்கொண்டு நின்றிருந்தார்கள். ஒரு பாண்டு மேளக்கச்சேரியைக் கேட்டு அவர்கள் ஆற்றுக்கு ஓடினார்கள். அது ஒரு கல்யாண ஊர்வலம்.

தாலி கட்டி முடிந்தபின் சர்ச்சிலிருந்து போகிறார்கள். மரியாவிற்கு அவர்களைப் பற்றித் தெரியும்.

''எங்க கெழக்குப் பக்கத்து வூட்லவுள்ள அன்னச்சி அக்காதான் கல்யாணமாகி போறாங்க. மாப்பிள அமிச்சேரிக்காரன்.'' என்றாள் மரியா.

மணப்பெண் அவளைப் பார்த்தாள். மரியாவும் சிரித்தாள்.

''வரதட்சணை எத்தனை பணம்?'' என்று கேட்டாள் திரேஸ்யா.

''ஆ! அது எனக்குத் தெரியாதே!'' என்று மரியா பதிலளித்தாள்.

திரேஸ்யா அந்தக் கல்யாண ஊர்வலத்தை நோக்கி எதையோ நினைத்துக்கொண்டு சிலையைப் போல் நின்றாள். அவள் இந்த உலகத்திலேயே இல்லை. அருகில் நடப்பது அதுவும் அவள் அறியவும் இல்லை. அந்த பாண்டு வாத்தியத்துடன் அவளின் மனமும் ஆடிக்கொண்டிருந்தது.

சிநேகிதிகள் எல்லோரும் போய்விட்டிருந்தார்கள். கொஞ்சம் தூரம் போனபின்பு மரியா திரும்பி நின்று திரேஸியாவை அழைத்தாள். திரேஸியா அப்போதுதான் உணர்வு பெற்றாள். அவள் அதன்பின் தன் சிநேகிதிகளின் அருகே ஓடினாள்.

ஒரு சிநேகிதி, ''அவ அங்கியே அவளோட கல்யாணத்த நெனைச்சுக்கிட்டு நின்னுட்டா'' என்று கூறினாள்.

அப்போது மற்றொருத்தி, ''மாப்பிள எந்த ஊருக்காரன்?'' என்று கேட்டாள்.

வேறொருத்தி, ''வரதட்சணை எவ்வளவு?'' என்று கேட்டாள்.

திரேஸ்யாவிற்குக் கோபமும் வீம்பும் வந்தது. அவள் எல்லோரையும் பழிப்புக் காட்டினாள். அவர்கள் உரக்கச் சிரித்தார்கள்.

''எதுக்குச் சிரிக்கிறீங்கடி? எனக்கு வரதட்சணப் பணம் நெறையவே இருக்கும். எங்க அப்பா அம்மா சேர்த்து வச்சிருக்காங்கடி'' திரேஸ்யா வேகமாக அங்கிருந்து அகன்றுவிட்டாள்.

*** *** ***

ஆண்டுகள் சில கழிந்தன. மாத்தச்சனின் வரவு செலவு கணக்கு மிகவும் நீண்டது. அதோடு திரேஸ்யாவின் உடலும் மனதும் கூட வளர்ந்தன. அவள் ஒரு இளம்பெண்ணானாள். அந்த சேமிப்பைத் திரும்ப பெறுவதற்கான காலமும் நெருங்கியது. அவர்களைப் போன்ற ஏழைகளான பக்கத்து வீட்டுப்பிள்ளைகளைப் பற்றி நினைத்துக்கொள்ளும் போது மாத்தச்சன் உற்சாகமாகிவிட்டான். அவன் மகளுக்கு ஒரு நல்ல கணவன் கிடைப்பான்.

கணவனும் மனைவியும் சேர்ந்து கணக்கைக் கூட்டும் போது, அருகில் உறங்குவதற்குப் படுத்திருக்கும் திரேஸ்யாவின் மனம் விசாலமான உலகத்தில் சஞ்ச

→15

# ''25 கவிதைகளும் 500 கமாண்டோக்களும்''

கவிதைத் தொகுதி

-மொஹமத் தார்வீஷ்

மொழி பெயர்ப்பு இலக்கியத் துறையில் ஓர் நம்பிக்கை தரக் கூடியவராக இன்று திகழ்பவர் யமுனா இராஜேந்திரன். இவர் மூலமே ஐரோப்பியாவினதும், மூன்றாம் உலகினதும் பட்டைப்புக்களை - தகவல்களை எங்களால் ஓரளவாவது பெற முடிகின்றது. லண்டனில் வாழும் இவர் மாற்றுக் கலாசார சமூக அமைப்புக்களோடு நெருங்கிய தொடர்புகள் கொண்ட செயலூக்கங்கள் நிரம்பப் பெற்ற சமூகப் பிரக்ஞை கொண்ட ஓர் மனிதர். தமிழ் வாசகர்கள் மத்தியில் புதிய விசயங்களை, புதிய தேடல்களை அறிமுகப்படுத்துவதில் இவரின் பங்கு கணிசமானது. இவ்வாறான இவரின் சமீபத்திய முயற்சி ''25 கவிதைகளும் 500 கமாண்டோக்களும்'' எனும் கவிதைத் தொகுதி. பாலஸ்தீனியக் கவிஞன் ''மொஹமத் தார்வீஷ்''சின் கவிதையின் மொழி பெயர்ப்புத் தொகுதியே இக்கவிதை நூலாகும்.

கவிஞன் மொஹமத் தார்வீஷ் 1942ம் ஆண்டில் பாலஸ்தீனத்தில் பிறந்து ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுக்காக போராடியவர். 1960களில் அல் அர்ட்' எனும் இயக்கத்தோடு இணைந்து செயற்பட்டவர். தனது வாழ்வு முழுவதும் கம்யூனிச இயக்கவாதியாக நம்பும் அவர் எந்தக் கம்யூனிசக் கட்சியிலும் இப்பொழுது கட்சி உறுப்பினராக பதிந்து கொண்டு அட்டை கொண்டவராக வெறும் ''கட்சித் தனம்'' இல்லாமல் பாரிஸ் நகரத்தில் தற்சமயம் தன் வாழ் நாளைக் கழிக்கின்றார். மொஹமத் தார்வீஷ் 1969இல் ஆசிய ஆபிரிக்க எழுத்தாளர் அமைப்பின் விருதையும், 1983ம் ஆண்டு சோவியத் சோஷலிஸ குடியரசு ஒன்றியத்தின் லெனின் விருதையும் பெற்றவர்.

இவரின் கவிதைகள் கொண்ட இத்தொகுப்பில் பெரும்பான்மைக் கவிதைகள் ஜமுனா இராஜேந்திரனாலும், மூன்று கவிதைகள் பேராசிரியர் சிவசேகரத்தினாலும், ஏனைய கவிதைகள் சுகுமார், ஈ.க.பாலகிருஷ்ணன், பேராசிரியர் நடராஜன், விசுவநாதன், கவிதன், மொலீனா தேன்மொழி, குமாரசாமி ஆகியோரினாலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

மொழி பெயர்ப்புத் துறையில் எதிர்கொள்ளும் பல நெருக்கடிகளையும் சவால்களையும் தாண்டி இக்கவிதைகளில் கணிசமானவை தரம் கொண்டவையாக உள்ளமை கவனிக்கப்பட வேண்டியதொன்று. அதே சமயம் ஒரு சில கவிதைகள் மிகவும் தாழ்ந்த மொழிபெயர்ப்புத் தரத்தை அடைந்து உரைநடை போன்ற மயக்க நிலையை கொடுத்துவிடுகின்றன. ஒரு மொழியிலிருந்து இன்னோர் மொழிக்கு ஒரு படைப்பை கொணரும் போது பல இடையூறுகள் எழுவது தவிர்க்க முடியாதது. மூலமொழியில் காணப்படும் கவிதை நயம், சொல்லாக்கம், உணர்வு வெளிப்பாடு, கவிதையின் அகநிலை - புறநிலை மற்றும் சூழ்நிலைக் காரணிகளை மொழி பெயர்ப்பில் அங்ஙனமே வெளிப்படுத்துவது கடினமே. அதற்காக மொழி பெயர்ப்பானது வெறும் சொற்கோலங்களாகி வசன நடை மொழியாக்க வடிவத்தைப் பெறுமாயின் மூலக்கவிதைகள் பற்றிய ஓர் தவறான தோற்றத்தை நாம் பெற்றுவிட முயலும் அபாயமும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதொன்று. மொஹமத் தார்வீஷ்சின் மூலக்கவிதைகள் ஆன்மா இங்கே மொழிபெயர்ப்பில் இறப்பு நிலையை எய்திவிடுகின்றது. உதாரணமாக, பேராசிரியர் சிவசேகரம் அவர்களினால் மொழி பெயர்க்கப்பட்டுள்ள ''அதென்ஸ் விமான நிலையம்'' (பக்கம்51), ''அவர்கள் என்னைப் பிணமாகக் காண விரும்புகின்றனர்'' (பக்கம்39), போன்ற கவிதைகளைக் குறிப்பிடலாம். பின்வரும் ''அதென்ஸ் விமான நிலையம்'3 எனும் கவிதை (!)யை படிப்பதன் ஊடாக மொழிபெயர்ப்பின் குறைபாட்டை புரிந்து கொள்ள முடியும்.

### அதென்ஸ் விமான நிலையம்

*அதென்ஸ விமான நிலையம் எம்மை வேறு விமான*
*நிலையங்கட்கு உதைத்து விரட்டுகிறது. "நானெங்கே*
*போராடலாம்?" என்றான் ஒரு போராளி. "நாமெங்கே*
*நம் குழந்தையைப் பெறலாம்?" என்று ஒரு கர்ப்பிணி*
*அவனிடம் உளறினாள். "என்பணத்தை எங்கே*
*முதலிடலாம்?" என்றான் ஒரு உத்தியோகஸ்தன்.*
*"உனதும் எனதும்" என்றான் ஒரு ஆய்வறிவாளன்.*
*"எங்கிருந்து வருகின்றீர்கள்?" என்றனர் சுங்க*
*அதிகாரிகள். "கடலிலிருந்து" என்றோம். "போகுமிடம்?"*
*கடல்". "முகவரி?" "என் மூட்டை முடிச்சு என்*
*கிராமம்" என்றாள் நமது குழுவில் ஒரு பெண்.*
*அதென்ஸ் விமான நிலையத்தில் நாம் வருடக்கணக்காகக்*
*காத்திருந்தோம். ஒரு இளஞ்சோடிகளுக்குத் திருமணமாகி*
*அவசரமாக ஒரு அறை தேடினர். "எங்கள் முதலிரவை*
*எங்கு கழிப்பது?" என்று கேட்டான் மாப்பிள்ளை.*
*"அப்படியான ஆசைகட்கு இங்கு இடமே இல்லை*
*இளைஞனே" என்று சிரித்தபடி சொன்னோம். "தாம்*
*மரியாமலிருக்கும் பொருட்டு மரிக்கின்றனர்.*
*கவனியாமலே மரிக்கின்றனர்" என்றார் நம்மிடையிருந்த*
*ஒரு பகுப்பாளர். "நமது முகாம் விழ்வது*
*தவிர்க்க முடியாதது. நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார்கள்?"*
*என்றான் ஒரு எழுத்தாளன். அதென்ஸ் விமான*
*நிலையம் தனது சனங்களைத் தினமும் மாற்றுகிறது.*
*நாமோ கதிரைகள் மீது கதிரைகளாகக்*
*கடலுக்காகக் காத்தபடி போட்டபடி கிடக்கிறோம்.*
*இன்றும் எத்தனை நாளைக்கு அதென்ஸ் விமான நிலையமோ?*

எனினும் இக்கவிதைத் தொகுதியில் திரு.சிவசேகரம் அவர்கள் குறிப்பிடுவது போல ''ஒரு கவிஞரின் படைப்பை இன்னொரு கவிஞர் மொழி பெயர்க்கும் போது பின்னையவரது கவிதை உணர்வு மொழி பெயர்ப்பில் எவ்வளவு தூரம் தன்னை இனம் காட்டிக் கொள்ளக்கூடும்? மொழி பெயர்ப்பாளர் மூலக்கவிதையை உண்மையில் தன் கவிதை மொழியில் வியாக்கியானம் செய்கின்றார் என்பது உண்மைக்கு நெருக்கமானது. மொழி பெயர்ப்பாளரின் கவிதை உணர்வு மூலத்தின், கவித்துவத்தின் அடையாளத்தை இழக்கச் செய்யக் கூடுமாயின் மொழி பெயர்ப்பு என்ற வகையில் அது தவறி விடுகின்றது. கவிதை உணர்வில்லாத மொழிப் புலமை சார்ந்து மொழி பெயர்ப்போ உயிரற்றது. எனவே யோக்கியமானதும், கவித்துவத்தையுடையதுமான மொழி பெயர்ப்பு மிகவும் அபூர்வமான விஷயமே. தன்னுடைய கவிதை உணர்வை, இன்னொருவரது உணர்வை விளங்கிக் கொள்ளவும் தனது அகநியான வியாக்கியானங்களைத் தவிர்க்குமாறு மட்டுப்படுத்தவுமான ஒரு கருவியாக்கும் திறமை மிகச் சிலரிடமே உண்டு. இவ்வகையில் சில சமயம் திறமாகச் செயற்பட வாய்ப்பு உண்டு. எவ்வாறெனினும் சம்பந்தப்பட்ட மொழிகள் இரண்டிலும் மட்டுமன்றி இரண்டு மொழிக் கவிதைகளிலும் நல்ல பரிச்சயமின்றி கவிதை மொழி பெயர்ப்பில் இறங்குவது சங்கடமான காரியம்'' (கவிதைப் பாலங்கள், பக்கம் 2)

உண்மைதான். மொழி பெயர்ப்பில் மொழி பெயர்ப்பாளன் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை கவனத்தில் கொண்டு இவ்வாறான சில குறைபாடுகளை தவிர்த்துப் பார்ப்பின் இம்முயற்சி பயன் சார்ந்த பெரு முயற்சியாகவும், மொஹமத் தார்வீஷ்சின் அழிவுக் கெதிரான குரலையும், அவரின் நம்பிக்கைகளையும், தன் தேசத்தின் மீதான நேசிப்பையும் வெளிக்காட்டவும் இக்கவிதைத் தொகுப்பு எமக்கு துணை நிற்கின்றது

-துடைப்பான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொ.ஐ.மு.வின் உத்தேச அரசியல் திட்டம்:
## மலையக மக்கள் மீதான
# இன்னொரு சுருக்குக் கயிறு



– வேலுச்சாமி

பொது ஜன ஐக்கிய முன்னணியின் புதிய அரசியல் திட்டத்துக்கான முயற்சிகள் ஏறத்தாழ முற்றுப் பெற்ற நிலைக்கு வந்துவிட்டன. பகிரங்கமாக வராவிட்டாலும் கூட மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது அரசியல் திட்ட நகலின் இரண்டாவது வரைபும் வெளிவந்துவிட்டது. இவ்விரண்டு வரைபுகளிலும் மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய எந்த ஒரு அம்சத்தையும் சுழியோடிக் கூடப்பிடிக்க முடியவில்லை. பொது ஜன முன்னணி அரசாங்கமும், அரசியலமைப்புக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் மலையக மக்கள் என்கின்ற ஒரு தேசிய இனம் இலங்கையில் உள்ளது என்பதையே மறந்துவிட்டார்களோ என்று கேட்க வேண்டியநிலை உருவாகியுள்ளது.

மலையக தேசிய இனத்தைப் பொறுத்தவரை இப்புதிய அரசியல் திட்டம் பழைய அரசியல் திட்டத்தின் தொடர்ச்சி என்றே கூற வேண்டும். அவ்வளவு தூரம் பழைய அரசியல் திட்டத்தில் காணப்பட்ட ஒடுக்குமுறை அம்சங்கள் அனைத்தும் இதிலும் காணப்படுகின்றன.

பிரதானமாக பழைய அரசியல் திட்டத்தில் காணப்பட்ட பேரினவாத அம்சங்கள் இப்புதிய அரசியல் திட்டத்தில் நீக்கப்படவில்லை. மாறாக பல இடங்களில் அவை மேலும் மெருகூட்டப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளன.

தேசியக் கொடியைப் பொறுத்தவரையில் பேரினவாதக் கருத்தியலை முன்வைக்கின்ற வாளேந்திய சிங்கமும், மூலைகளில் அரச இலைகளும் மாற்றப்படவில்லை. அதைவிட முன்னைய அரசாங்கம் போலவே, மலையக மக்களை ஒரு தனியான இனமாக கணித்து அரச வேலை வாய்ப்புக்களில் இனங்களுக்கான கோட்டா முறையில் அதனையும் இணைத்த போதும் தேசியக் கொடியில் ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்களான இலங்கைத்தமிழர் முஸ்லீம்கள் என்போர்களுக்கு உள்ளது போன்ற அடையாளங்கள் மலையக மக்களுக்கு கொடுக்கப்படவில்லை.

இரண்டாவதாக பௌத்தமதம் அரசமதம் எனும் ஏற்பாடு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பௌத்தமதத்தை பேணிப்பாதுகாப்பது அரசின் கடமை என்பதுவும், இதன் மூலம் இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு உரியது எனும் கருத்தியலும் இவ்வரசியல் திட்டத்திலும் பேணப்படுவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவதாக மொழி விடயத்திலும் அதற்கான ஏற்பாடுகள் மலையக மக்களுக்கு பயனளிப்பதாக இல்லை. சிங்களமும். தமிழும் அரச கரும பொழிகளாக இரக்கும் என நகல்திட்டத்தின் 18வது பிரிவு கூறியுள்ள போதும், 19 (2)வது பிரிவு ஏற்கெனவே காணப்படுகின்ற ஏற்பாடுகள் தொடர்ந்தும் இருக்கும் எனக்கூறுகின்றது. இதன்படி மலையகப் பகுதிகளில் நிர்வாகங்கள் அனைத்தும் தனிச்சிங்களத்திலேயே தறபோது நடைபெறுகின்றன. இதுவே இனியும் தொடரப் போகின்றது. மலையக மக்கள் தமிழில் தொடர்பு கொள்ளும் போது தமிழில் பதில் அளிக்கக்கூடுமே தவிர நிர்வாக ஒழுங்குகள் பதிவேடுகள் அனைத்தும் சிங்கள மொழியிலேயே நடைபெறப் போகின்றன. சுருக்கமாகக் கூறுவதாயின் தமிழ் மொழியின் உபயோகம் இன்று என்ன நிலையில் மலையகத்தில் காணப்படுகின்றதோ அவை எந்தவித மாற்றங்களும் இல்லாமல் தொடர்வதற்கு அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் கொடுக்கப் பட்டுள்ளது.

நான்காவதாக அதிகாரப்பங்கீட்டு விடயத்தில் மலையக மக்களுக்கான பங்கு கவனத்தில் எடுக்கப்படவில்லை. ஒரு பல்லின சமூகத்தில் பெரும்பான்மைத் தேசிய இனம் சிறுபான்மைத் தேசிய இனங்களுடன் நியாயமான முறையில் அதிகாரங்களை பங்கிடுவதே நேர்மையான ஒழுங்குமுறையாக இருக்கும். ஆனால் இலங்கையில் மலையக மக்களுடன் அரதிகாரங்களை பங்கிட்டுக் கொள்வதற்கு பேரினவாதிகள் தயாராக இல்லை. இது தொடர்பாக தெரிவுக்குழுவுக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்த மலையக அமைப்புக்களான மலையக மக்கள் முன்னணி, புதிய ஜனநாயக கட்சி என்பன மலையக மக்களுக்கு அதிகாரப் பங்கீட்டினைக்கோரும் கோரிக்கைகளை முன்வைத்திருந்த போதும் அக்கோரிக்கைகள் எவையும்' ஆதரவுடன் நோக்கப்படவில்லை. மாறாக கோரிக்கை வைத்த அமைப்புக்ககளை சந்தேகக் கண்களுடனேயே பேரினவாதிகள் நோக்கினர். இவர்கள் மலையகத்தில் தனிநாடு கேட்கின்றனர் எனப்பிரச்சாரமும் செய்தனர்.

இப்பேரின்வாத அம்சங்களை விட தேர்தல் முறைமாற்றம், ஜனாதிபதி முறை மாற்றம் என்பவையும் மலையக மக்களை பாதிப்பனவாகவே உள்ளன. இதில் தேர்தல் முறை மலையக மக்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பது தொடர்பாக சென்ற இதழில் எழுதியுள்ளமையால் இந்த இதழில் அதனை தவிர்த்துவிடுகிறேன்.

ஜனாதிபதி முறையைப் பொறுத்தவரை அவ்வாட்சிமுறை ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு வழி கோலிய போதும் அதன் தெரிவுமுறை மலையக மக்களுக்கு சார்பானதாகவே உள்ளது. ஜனாதிப்தி நாடு முழுவதும் உள்ள மக்களால் தெரிவு செய்யப்படுவதால் மலையக மக்களின் ஆத்ரவும் அதற்குத் தேவை. இத்தேவை மலையக மக்களின் பேரம் பேசும் ஆற்றலை வளர்ப்பதோடு பேரினவாதிகளை இனவாதத்தை அடக்கி வாசிக்கும்படியும் வற்புறுத்துகின்றது. ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்காலத்தில் மலையக மக்கள் பிரஜாவுரிமை போன்ற ஒரு சில சலுகைகளை பெற்றுக்கொள்வதற்கும் இப்பேரம் பேசும் ஆற்றலே உதவியிருந்தது, ஜனாதிபதிமுறை மாற்றம் இப்பேரம் பேசும் ஆற்றலை இல்லாமல் செய்வதோடு பேரினவாதிகள் கட்டற்றவகையில் பேரினவாத செயற்பாட்டை மேற்கொள்வதற்கும் உதவப்போகின்றது.

இதைவிட அரசியமைப்புக் கவுன்சில் ஒன்று அதிக அதிகாரங்களுடன் புதிய அரசியல் திட்டத்தில் உருவாகயிருக்கின்றது. அவ்வரசியலமைப்புக்களின் சிவில் மலையக மக்களின் பிரதிநிதிகள் உறுப்பினராவதற்கு வாய்ப்புக்கள் கொடுக்கப்பட இல்லை. மேலும் மலையக மக்களைப் பாதிக்கின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போது அதனை தடுப்பதற்கு சட்ட ரீதியான வழிகள் கூட எவையும் ஏற்படுத்தப்பட இல்லை. பெரும்பான்மையினத்தினால் முழுமையாக சூழப்பட்டுள்ள மலையகப்பிரதேசத்திற்கு அவ்வாறான பாதுகாப்பு மிக மிக அவசியமான ஒன்றாகும்.

எனவே இறுதியாக பொது ஜன முன்னணியின் புதிய அரசியல் திட்டம் மலையக மக்களைப் பொறுத்தவரை பழைய ஒடுக்குமுறைகள் தொடர்ந்தும் இருப்பதற்கு உதவுவதோடு, ஏற்கெனவே கிடைத்த உரிமைகள் சிலவற்றையும் இல்லாமல் செய்வதற்கு வழி வகுக்கின்றது. ஒருவகையில் இது அவர்களுக்கு இன்னோர் சுருக்குக்கயிறாகவே இருக்கப் போகின்றது. மலையக அமைப்புக்கள் இது விடயத்தில் தமது உள்சண்டைகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு ஒன்றுபட்ட குரலில் கோரிக்கைகளை வைப்பது அவசியமானது. இல்லையேல் அவை வரலாற்றுப்பழிக்கு உள்ளாவது தவிர்க்கவியலாததாகும்.

---

# ஊழல்-4
# உறிஞ்சப்பட்ட சீமெந்து 265

அ. மணி

இன்று அதிகமாகக் கள்ளச் சந்தை நடக்கும் இடங்களில் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்டம் மாறிவருகின்றது. விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களின் தொகை குறைந்திருப்பதும் விசயம் அறியாத மேலதிகாரிகளின் தலைமையுமே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. ஆயினும், விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களின் 'தார்மீக' போக்குகளும் இந்தக் குறைபாட்டுக்கு மிகப் பெரிய காரணம்.

### சீமெந்து வியாபாரமும் அரச அதிபரும்:

சீமெந்து வியாபாரத்தில் பலரும் கொடிகட்டிப் பறக்கும் இந்தக் காலகட்டத்தில் சீமெந்தின் விலையேற்றத்தை எதிர்த்து மட்டு அரச அதிபராகிய திரு.ஏ.கே.பத்மநாதன் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கை வீரகேசரியில் வெளிவந்தது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விசயங்கள் பின்வருமாறு:

''தினசரி மட்டக்களப்பு மாவட்ட முகவர்களுக்கு 400 பக்கட் சீமெந்து விநியோகிக்கப்பட்ட போதிலும் முகவர்கள் நேரடியாக பொதுமக்களுக்கும், திணைக்களங்களுக்கும் அவற்றை விநியோகிக்காமல் தனியார் வர்த்தகர்களுக்கு விநியோகிப்பதாலேயே தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.''

இந்த அறிக்கை வெளிவந்த காலத்தில் பொறுப்பதிகாரிகளால் பிடிக்கப்பட்ட சீமெந்து வழக்குகள் அலுவலகத்தில் தூங்குகின்றனவாம்! பொறுப்பதிகாரி வெளியே போக வேண்டாம் எனக் கோரப்பட்டதாகவும் செய்திகள் தெரிவித்தன.

### ஆஞ்சநேயருக்கு பாதை ரைட்!

இம்மாவட்டத்தில் அதிகளவு சீமெந்தினை மொத்தமாகவும் சில்லறையாகவும் கிலோக்கணக்கில் அளந்து கொட்டுபவர் ஆஞ்சநேயரே! இவர் சீமெந்து மாத்திரம் அன்றி மரம், ஆணி, பெயின்ற் மேசை, கதிரை ஆகிய பொருட்களையும் விற்பதால் ஏகப்பட்ட சனக்கூட்டம்! ஒரு விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் அங்கு சென்று தனக்கு 5 பைக்கற் சீமெந்து காசுக்குக் கேட்டுள்ளார். அங்கிருந்த மனேஜர் ''இப்போது இல்லை; வரும் போகும்'' என்ற பாணியில் பதில் கூறினார். ''கத்துகடல் சூழ் காத்தான் தன் சத்திரத்தில் அத்தமிக்கும் போது அரிசி வரும்'' எனக் காளமேகம் பாடியது போல பி.பகல் 5 1/2 மணிக்கு இவ்விடம் சீமெந்து வரும், அவை காத்தான் குடி, பெரியகல்லாறு, களுதாவளை என்ற பாதைகளை நோக்கிப் பறக்கும்! அந்த நேரம் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் திறந்திருக்கவா போகிறது? பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தைப் பொலிஸார் அமுல் நடத்த முடியாமையால் அவர்களும் எதுவும் செய்ய முடியவில்லை! ஆஞ்சநேயர் பாடு கொண்டாட்டம். அவர் சீமெந்து இப்போது சில்லறையாக விற்கும் விலையை மொத்த விலையாகப் போட்டு சில்லறை வியாபாரிகட்கு விற்றுவிடுவார். (மிற்சுயி சீமெந்தின் இன்றைய விலை 272.50) கூட்டி விற்கும் சில்லறை வியாபாரி பிடிபட்டால் ''அம்போ'' எனக்கையை விரிக்க வேண்டியதுதான்.

### பிடிப்பட்ட ஆஞ்சநேயர் விடுபட்டார்:

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி கே.கனகரத்தினத்தின் ஆணையைத் தொடர்ந்து ஏ.சௌந்தரராசா நிலுவை அளவைத் திணைக்கள இன்ஸ்பெக்டர் எஸ்.சோதிப்பிரகாசம் ஆகியோரைக் கொண்ட குழு ஆஞ்சநேயருக்கு வலை விரித்தது. விரித்த வலையில் ஆஞ்சநேயர் விழுந்துவிட்டார். விலை கூட்டி விற்றதாக வழக்குப் பதிவேட்டில் குறிக்கப்பட்டது. அவர் 265/= ரூபா விற்றாராம். இதன் முதலாளி இராசதுரை, சண்முகராசா மீது நிச்சயம் வழக்குவரும் என்றும் முதலாளியின் வழக்கைப் பார்த்தாவது ரசிக்கலாம் என்றும் பொதுமக்கள் நினைத்தனர். இந்த இடத்தில்தான் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் தனது தந்திரத்தை எலும்புத் துண்டுகளாகக் கையாண்டது.

ரோக்கியோ சீமெந்து நிறுவனத்தால் சென்ற வருடம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் பிரகடனப்படுத்தப்பட்ட விலைகளைப் பின்வரும் பட்டியலில் காணலாம்.




இவ்வாறு சென்ற வருடம் மிட்சுயி சீமெந்து மட்டு மாவட்டத்தில் ரூபா 265/= விற்க அனுமதி கொடுக்கப்பட்டது என்றால், 265/=விற்கு விற்றது உச்சவிலையை மீறியது ஆகுமா? என்ன நடந்தது என்பது உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி கே.கனகரத்தினத்துக்கு புரிந்த விசயம்.

### அளவு குறைந்ததாம்! வழக்கு எங்கே?

விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகரும், சட்ட அறிஞருமான ஏ.சௌந்திரராசா விலைக்கட்டுப்பாட்டு வழக்கை எழுதிய போது நிறுத்தல் அளவைப் பரிசோதகர் ஏ,சோதிப்பிரகாசம் அந்தச் சீமெந்துப் பைக்கற்றை நிறுத்துப் பார்த்திருக்கிறார். அதில் ஒரு கிலோ உறிஞ்சி எடுக்கப்பட்டிருந்ததாம். இவ்வாறு தனது வழக்குப் பதிவேட்டில் குறித்துக் கொண்ட இன்ஸ்பெக்டர் பின்பு வழக்கு எதனையும் பதிவு செய்யவில்லை. தமக்குத் தேவைப்பட்டவர்கட்கு இவர்கள் வழக்குப் போட மாட்டார்களாம்! 50கிலோ சீமெந்து ரூபா 265 என்றால் 49 கிலோ சீமெந்தின் உச்சவிலை இவர்கள் மறைத்த விசயங்களில் ஒன்று.

### மாயமாக மறைந்த சீமெந்து

இது இவ்வாறிருக்க உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி சமீபத்தில் இவரின் வழக்கை மன்னித்துவிட்டார். எந்தவொரு உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியும் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தில் முதலாவது தவறின் விசயத்தில் எதிரியை மன்னிக்க உரிமை உண்டு. கே.கனகரத்தினம் ஒரே நேரத்தில் பல்வேறு எஸ்.எல்.ஏ.எஸ் பதவிகளை வகித்து வருகின்றார். (எவ்வாறு என்பது அவருக்கே தெரியும்) அவர் ஓ.ஏ. ஆக இருந்த போது விலைக்கட்டுப்பாட்டுத்திணைக்கள அதிகாரியாகவும் தனக்குத்தானே மகுடம் சூட்டிக் கொண்டார். கே.கனகரத்தினத்தைப் பொறுத்தமட்டில் இவர் உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியாக முறையாக நியமனம் பெறவில்லை! எனவே முதலாவது தவறின் விசயத்தில் மன்னிக்கும் அதிகாரம் இவருக்குக் கிடையாது. ஆனால் மன்னித்து விடுவார். அதைக்கேட்க எவரும் கிடையாது. ஆஞ்சநேயர் போன்ற வர்த்தகர்கட்கு இவரைப் போன்ற உத்தியோகத்தர்கள் இருக்கும் மட்டும் கொண்டாட்டம்தான்! வழக்கிற்காக எடுத்துச்சென்ற சீமெந்து கக்கூஸ் கட்டப்பயன்படுவதாகவும் தகவல். அம்போ!

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மாத்தனின் கதை...

சஞ்சரித்துக் கொண்டிருக்கும். அவளுக்காக எங்கேயோ ஒரு ஆண் இருக்கின்றான். அவன் எப்படி இருப்பான்? இப்போது என்ன செய்து கொண்டிருப்பான்.

முழுக்காற்சட்டை அணிந்து. கழுத்தில் டைகட்டி சர்ச்சுக்கு வருபவனை அவள் காண்கிறாள்.... கணவனின் வீடு! அது எப்படிப்பட்ட வீடாக இருக்கும்? ஒன்று மட்டும் உறுதி, அந்த வீடும் தோட்டமும் அவர்களுடையதாகத்தான் இருக்கும்.... அவள் அவனை நேசிக்க ஆரம்பிப்பாள்; நன்கு பணிவிடை செய்வாள்.... அதேபோல் அவனும் அவளை நேசிப்பானோ?.... நேசிப்பான்.... அவள் ஒரு தாயாவாள்..... அவ்வாறு திரேஸ்யா சிந்தித்துச் சிந்தித்து உறங்கும் போது, தூக்கத்தில் அந்த அடையாளம் தெரியாதவன் அவளைக் கூப்பிட்டு எழுப்புவான். திரேஸ்யா அப்படியே நாணத்தால் முகம் கவிழ்த்து கொள்வாள்.

கல்யாண வயது எது? பதினாறு வயதில் திருமணமான பலரையும் அவள் நினைத்துப் பார்த்தாள். அவளுக்குப் பதினேழாகிவிட்டது. ஒருவேளை அவளுக்கு என்ன வயதாகிறது என்று அப்பாவுக்குத் தெரியாமலிருக்கலாம். என்றாலும், அம்மாவுக்குத் தெரியுமே!

ஒரு நாள் மரியா மாத்தச்சனிடம்,, ''ஆமாம், நீங்க இப்படியே இருந்தா போதுமா? அவளுக்குப் பதினேழாயிட்டுது'' என்றாள்.
அப்பாடா! திரேஸ்யா ஆசுவாசமானாள்.

''என் மனசிலும் இருக்குடி! நானும் பார்த்துக்கிட்டுதான் இருக்கேன். நல்ல வரனா இருக்க வேணாமா? இன்னும் நாலு பணம் சேர்ந்தா அவ்வளவும் நல்லதுதானே?'' என்று மாத்தச்சன் பதிலளித்தான்.

மேலும் சில நாட்கள் கழிந்தன. மாத்தச்சன் பாலாய்க்குப் போனான். திரும்பி வந்தபோது அவனுக்கு ஒரு நல்ல செய்தி மனைவியிடம் சொல்வதற்கு இருந்தது.

ஆள் கிடைத்துவிட்டான். நல்ல இளைஞன். இருபது வயதுதான். பீடி சிகரெட்டு புகைப்பது இல்லை. தாய் தந்தைக்கு ஒரே மகன். ஐந்து ஏக்கர் நிலம் உண்டு. எல்லாம் உறுதியாகிவிட்டது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை பெண் பார்க்க வருவார்கள்.

'' எவ்வளவு ரூபா?'' என்று அம்மா கேட்டாள்.

''ஐயாயிரம் பணம்தான்.''

திரேஸ்யா அந்த தோட்டத்தையும் வீட்டையும் மனதில் பார்த்துக் கொண்டாள். அவளுக்கு புதிய அப்பா, அம்மா கிடைத்தார்கள். இனி அவர்களுடன் தான் வாழ்க்கை நடத்த வேண்டும். அடுத்த ஞாயிறுக்கிழமை பெண் பார்க்க வந்தார்கள். இதன் மூலம் அவளது கனவு நனவானது. அவள் எதிர்கால கணவனை பார்த்தாள்; அவனும் அவளைப் பார்த்தான். 'அவர் வந்து சேர்ந்து விட்டார்' என திரேஸ்யாவுக்கு திருப்தியாயிருந்தது.

*** *** ***

எல்லாம் நிச்சயமாகிவிட்டன. வரதட்சணைப் பணம் கூட ஐயாயிரம் தான். அதைக் கொண்டு போய் கொடுப்பதற்கான நாளும் நிச்சயிக்கப்பட்டது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை பணத்துடன் அங்கே செல்ல வேண்டும் என்பது தீர்மானம்.

திரேஸ்யாவிற்கு முன்னெப்போதும் இல்லாத ஒரு பிரகாசம் முகத்தில் வந்துவிட்டது. அவளின் சிநேகிதிகள் எல்லோரும் கிண்டல் செய்யத் தொடங்கினார்கள். சம வயதுள்ள திருமணமான பெண்கள் அவளுக்குச் சில பொறுப்புக்களைச் சொல்லிக் கொடுத்தார்கள். அவள் நாட்களை எண்ணிக்கொண்டிருந்தாள்.

கணவனும் மனைவியும் கூட கணக்கைக் கூட்டிக்கொண்டிருந்தார்கள். வரதட்சணையும் திருமணச் செலவும் போக இன்னும் ஒரு தொகைகூட கணக்குப் பிரகாரம் மீதி வரும். அதோடு சேர்த்து ரோஸியாவிற்கும் சேமிக்கத் தொடங்கிவிடலாம்.

பாலாய்க்குப் பணத்துடன் போவதற்கு இரண்டு நாட்கள் முன்பு அறப்புறத்து வீட்டிற்குச் சென்றிருந்த மரியா திரும்பி வந்து கணவனிடம் கூறினாள்.

''சாக்கோச்சன் வந்துட்டாரு. நாளைக்குக் காலையில் அந்த மனுஷன் சந்தைக்குப் போய்டுவாரு. அப்படியே போயி பணத்தைக் கேட்டு வாங்கிக்கணும்ங்க.''

''அதெப்படிடீ முடியும். அந்த ஆளோட மொறை விழாவல்லே இந்த ஞாயிற்றுக்கெழம வருது?''

''அதுக்கு அவுரு வேற ஏதாச்சும் ஏற்பாடு செஞ்சிகிடுவாரு!''

மாத்தச்சன் நேராக அறப்புறத்துக்குத் திரும்பினான். சர்ச்சு திருவிழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு நின்றார் சாக்கோச்சன். என்றாலும், மாத்தச்சனைக் கண்டவுடன் சிரித்தார்.

''என்னப்பா, எல்லாம் நிச்சயிச்சாச்சா?''

மாத்தச்சன் தலையைச் சொறிந்தான்.

''ஆமாங்க. இங்கு வந்துட்டு போயிதான் நிச்சயிக்கணும்னு நெனச்சிருக்கேன்.''

''நான் நெனச்சதவிட எட்டு பத்து நாளு அதிகமா தங்கிட்டேன் போலிருக்கே! அதுக்கு இப்ப என்ன? சரி இருக்கட்டும். வரதட்சண எவ்வளவு?''

''ஐயாயிரம் பணம்''

''அப்போ மத்த செலவுங்களும் சேத்து ஏழாயிரமாச்சும் ஆகுமேடா?''

மாத்தச்சன் சிரித்துக் கொண்டே முணகினான். சாக்கோச்சன் மாப்பிள்ளையின் தகுதியைப் பற்றிக் கேட்டார்.

மாத்தச்சன் எல்லாவற்றையும் விபரமாக கூறினான். ''அப்போ, அவ்வளவு பணத்தை எங்கேடா வச்சிருக்கே? குழி கிழி தோண்டி பொதைச்சி வைச்சிருக்கியாடா?''

மாத்தச்சன் அப்படியே நிலைகுலைந்து போனான். என்ன கூறுவது என்று கூட அவனுக்குத் தெரியவில்லை. குரல் வெளிவரவில்லை.

''இங்கதான்.... அப்பப்போ... இங்க கொடுத்த பணம்....''

அவன் அயாமலேயே இத்தனை வார்த்தைகளும் வெளியே வந்தன.

''அப்பப்ப கொடுத்த பணமா?'' என்று கேட்டார் சாக்கோச்சன்.

இடி முழக்கம் போல் அந்த சப்தம் மாத்தச்சனின் செவிப்பறையில் பதிந்தது.

''எல்லாத்துக்கும் கணக்கு இருக்குடா உனக்குத் தெரியாதா அது? நீ வாங்கினது போவ ரெண்டு ரூபா பதினேழு பணம்தாண்டா எங்கிட்ட இருக்கு.''

''நான் வாங்கன கடனா?''

''ஆமாம்''

''நான்.... நான்... அப்பப்ப வேலை செஞ்சதுக்கு?''

''நீ இங்க வேல செஞ்சியா? உன்ன வச்சா? கர்த்தர்கிட்ட நம்பிக்கையுள்ள நான் உன்கிட்டே வேலை வாங்குவேனா? அற்ப பயலே.''

''நான் ஓலை கிழிச்சி... வைக்கப் புடுங்கி....''

சாக்கோச்சன் சிரித்தார்.

''அதுக்கெல்லாம் ஏதுடா கூலி?''

மாத்தச்சன் அப்படியே மனம் உடைந்து உட்கார்ந்துவிட்டான்.

''பொண்ணுக்கும் கொடுப்பினை இருந்தா எல்லாம் தானாகவே நடக்கும்டா, வேணும்னா நான் பதினைஞ்சு ரூவா தர்றேன். கேட்டியா'' என்று சாக்கோச்சன் தொடர்ந்து கூறினார்.

யாரோ பெரிய மனித வீட்டைச் சேர்ந்த மூன்று நான்கு ஆட்களும் பாதிரியாரும் சேர்ந்து ஆற்றுப் படித்துறையை நெருங்கினார்கள். அவர்களை வரவேற்பதற்காக சாக்கோச்சன் வேகமாகச் சென்றார்.

*** *** ***

நேரம் மிகவும் இருட்டியது. மாத்தச்சனின் வீட்டிலுள்ள விளக்குத்திரி கரித்தும் மாத்தச்சன் வரவில்லை. அந்த விளக்கு அணைந்தும் கூட தாயும் பெண்களும் அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரவுச்சாப்பாடும் ஆறி விரைந்துவிட்டது.

மறுநாள் காலையில் மரியா அறப்புரைக்குச் சென்றாள். அந்த வீட்டு தென்புற திண்ணையில் மாத்தச்சன் கூனிக் குறுகி உட்கார்ந்திருந்ததைப் பார்த்தவர்கள் இருந்தார்கள். அதன்பின் அவன் எங்கே போனானோ?

மறுநாளும் மாத்தச்சன் வந்து சேரவில்லை. ஆனால் அறப்புறத்து வீட்டில் திருவிழாவிற்கான வேலை மட்டும் நடந்தது.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை. சாக்கோச்சன் முன்னின்று நடத்தும் திருவிழா அன்றுதான் நடந்துகொண்டிருந்தது. ஒரு பிணம் மாத்தச்சன் வீட்டுப் படித்துறை அருகே கிடந்தது. கால்களும் இரண்டு கைகளும் தென்னை நாரால் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன. அப்பிணம் மாத்தச்சனுடையதுதான்.

திருவிழாவின் போக்கை வெளிப்படுத்தும் வேட்டு சப்தம் சாக்கோச்சனின் பெருமையையும் தெய்வ பக்தியையும் ஷோழ்த்தும் போது, இங்கே தாயும் பெண்களும் அந்தப் பிணத்தைக் கட்டிப்பிடித்து
அழுதுகொண்டிருந்தார்கள்.

## எங்களால்...

வேண்டுமானாலும் கைது செய்ய முடியும்'' என்று காட்டத்தான்.

பஞ்சாப்பில் காணப்படுவது அரசியல் பிரச்சினை. போராளிக்குழுக்கள் தோன்றக் காரணமாகவிருந்த அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகள் இன்னும் மாறவில்லை. அரசியல் பிரச்சினை அரசியல் ரீதியாகத் தீர்க்கப்படாதவரை பஞ்சாப்பில் அமைதி ஏற்படாது. வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும் இந்த 'அமைதி', இப்போதுள்ள 'அமைதி' ஒரு மயான அமைதி தான்; புயலுக்குமுன் காணப்படும் அமைதிதான். பஞ்சாப்பில் மட்டுமல்ல, காஷ்மீரத்திலும், வடகிழக்கு மாநிலங்களிலும் கூட இந்திய அரசால் 'அமைதி'யை ஏற்படுத்திவிட முடியாது - அமைதிக்கு முன் நிபந்தனையாக இம்மாநிலங்களில் முதலில் அரசியல், சமூக, பொருளாதார நீதியும் சமத்துவமும் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

***கேள்வி: பஞ்சாப்பில் காணப்படும் ஒடுக்குமுறையை எதிர்கொள்ள மக்கள் என்ன வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றனர். மக்களுக்கு வழிகாட்டக்கூடிய தலைவர்கள் .யாரேனும் இருக்கின்றனரா?***

**பதில்:** பஞ்சாபிய மக்களுக்கு சரியான தலைவர்கள் வாய்க்கவில்லை என்றதான் கூற வேண்டும். இருக்கக்கூடிய தலைவர்களும் கூட வெவ்வேறு குழுக்களில் பிரிந்து காணப்படுகின்றனர். அகாலிக்கட்சி (உங்கள் தி.மு.க.வைப் போன்றது) பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்துபோய்விட்டது. சில அகாலித் தலைவர்கள் 'தில்லிதர்பாரி'ன் அடிவருடிகளாகவும் சுயநலக் காரர்களாகவும் விளங்குகின்றனர். மக்களோ பீதியாலும் பயத்தாலும் பீடிக்கப்பட்டுள்ளனர் நம்பிக்கை குலைந்தவர்களாக, மனோவலிமை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர். கூட்டம் நடத்த அரசாங்கம் அனுமதி வழங்குவதில்லை. சமயச் சடங்குகளில் மக்கள் பங்கேற்பதையும் வரக்கூட அனுமதிப்பதில்லை. பஞ்சாப்பிலிருந்து கூடிய செய்திகள் பெரும்பாலும் இருட்டடிப்புச் செய்யப்படுவதால், இவ்விபரங்கள் ஒரு வேளை உங்களுக்குத் தெரியாமல் போயிருக்கலாம்.

மத்திய அரசோ ஜனநாயகத் தன்மையற்ற அரசாகவும், சோசலிசம், மதச்சார்பின்மை ஆகிய நிலைப்பாடுகளிலிருந்து விலகியே செயல்படும் அரசாகவும் விளங்குகிறது. 'சோசலிச' அரசு என்று தன்னைக் கூறிக்கொள்ளும் தகுதியையும் அரசு இழந்துவிட்டது; மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் - இவர்கள் பெரும்பாலும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாம்- பசியால் வாடுகையில் அரசு அவ்வாறு கூறிக் கொண்டாலும், அதை யார் நம்புவர். இங்கு என்ன ஜனநாயகம் காணப்படுகிறது. 2 ஆண்டுகளுக்கு முன் நடந்த பஞ்சாப் சட்டசபைத் தேர்தல்களை 90% மக்கள் புறக்கணித்தனர். இன்று முதல்வராக ஆட்சிபுரியும் பியான்த் சிங்கை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, அவர்களது அரசியல் விருப்பங்களை நிறைவேற்றவல்ல பிரதிநிதியாக யாரால் ஏற்றுக்கொள்ள முடியும்? நடந்தது தேர்தலுமல்ல. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்கள் பிரதிநிதிகளும் அல்லர். இன்று பஞ்சாப்பில் ஆட்சிபுரியும் அரசாங்கம் மத்திய அரசின் கையாளாகத்தான் செயல்படுகிறது. இது எங்கள் தலைவிதிபோலும்....

***கேள்வி: போராளிகளுக்கு மக்கள் ஆதரவு வழங்கி வருகின்றனரா?***

**பதில்:** உண்மையில், போராளி இயக்கம் சரியான அரசியல் பாதையை பின்பற்றவில்லை என்றே கூறவேண்டுமும். மேலும், அவ்வியக்கத்தில் அரசாங்க ஏஜெண்டுகள் ஊடுருவி புகுந்து நாசவேலை செய்துவருகின்றனர். இவர்கள் தான் பேருந்துகள், ரயில் பெட்டிகள் ஆகியவற்றுக்குள் நுழைந்து அவற்றுக்கு தீ வைப்பதும், பயணிகளை கொல்வதும் போன்ற செயல்களை மேற்கொண்டனர். பர்னாலா முதல்வராக இருந்தபோது, இம்மாதிரியான செயல்களுக்கு பின் ஒளித்து கொண்டிருக்கும் உண்மைகளை அறிய ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்று நான் கூறினேன். ஆனால், அவர் கேட்கவில்லை. அவ்வாறு ஒரு விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தால் பல உண்மைகள் வெளிப்பட்டிருக்கும். எனினும் ஒரு நாள் இல்லையென்றாலும் ஒரு நாள் உண்மை வெளிப்படத்தானே வேண்டும். பொதுவாக சீக்கியர்கள் வன்முறையை ஒரு வழிமுறையாகக் கொள்வதை அவர்களது மதம் அங்கீகரிப்பதில்லை. சீக்கியர்கள் குருத்வாராக்களில் வழிபாடு நடத்துகையில் தங்களது சமயத் தலைவர்களையும், சமயத்தின் பொருட்டு வீரமரணம் எய்தியவர்களையும் , சமய குருமார்களையும் நினைவு கூர்ந்து , பிறகு உலக நன்மைக்காகப் பிரார்த்தனை செய்வர்.

இன்றுள்ள தலைமையைப் பொறுத்தவரை, மக்களுக்குத் தலைவர்கள் பால் நம்பிக்கையில்லை. நான் போராளிக் குழுக்களின் தலைமையையும் சேர்த்துதான் சொல்கிறேன். போராளிகள் சிலசமயம் பொருளற்ற, பயன்தராத வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். மக்கள் விரோத சக்திகளை அவர்கள் எதிர்கொண்டு தாக்குவது நியாயமான செயல்தான். ஆனால் சாதாரண மக்களின் சாவுகளுக்கும் அவர்கள் சில நேரம் காரணமாக உள்ளனர். இதை நாம் ஏற்றுக்கொள்ளவே முடியாது. , போராளிக்குழுக்களுக்கு அரசியல் விவேகம் இல்லை. ஒரு பரந்த ஆழமான அரசியல், சமூக குறிக்கோளும் தரிசனமும் இல்லை. உண்மையான வெகு மக்கள் இயக்கத்தால்தான் பஞ்சாப் மக்களுக்கு வழிகாட்ட முடியும்.

## உறிஞ்சப்பட்ட..

### *விடுபட்ட பட்டியல்கள்:*

இவரை மாத்திரம் நாம் குறை கூறுவதில் பயனில்லை. விலைப்பட்டியல் போடாத வியாபாரத்தை மட்டக்களப்பு நகரில் இருந்து பெரிய கல்லாறு ஈறாக மேற்கே ஓட்டமாவடி வரை காணலாம். விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை மதியாதவர்களாக ஈஸ்ரன் ஹாட்வெயா ஸ்ரோர்ஸ், சொலுக்கார், பிரசாந் (திருமலை வீதி), ஏ.எம்.ஐ.காத்தான்குடி, சுகன் ஸ்ரோர்ஸ் களுதாவளை என்பனவும் அடங்கும்.

எதிர்காலத்தில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் விழுந்து பிடிக்கப்போகிறார்கள் என்ற அரச அதிபரின் கூற்று நகைப்புக்கு இடமானது. பிடிப்பதிலும் பார்க்க கச்சேரி உத்தியோகத்தர்கள் வந்த சீமெந்தைப் பொறுப்பெடுத்து விநியோகிக்கலாம் அல்லவா?

அடிக்கடி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யும் ஒரு பொறுப்பதிகாரியை மூன்றாம் பேர்வழி கொடுத்த முறைப்பாட்டை அடுத்து அரச அதிபர் ஏ.கே.பத்மநாதன் அலுவலகத்தில் முடக்கிவிட்டார். 1993, 1994 ஆகிய ஆண்டுகளிலும் பின்பு 1995 ஆம் ஆண்டிலும் கொழும்பு திடீர் பரிசோதனைக் குழுவில் இருந்து அனுப்பப்பட்ட ஒரு உத்தியோகத்தரை யாழ்ப்பாணத்தான் என்ற காரணம் காட்டி இடமாற்றம் கொடுத்து விட அங்குள்ளோர் துடிக்கிறார்களாம்! அவரை அனுப்பிவிட்டு உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (பதில்) செயற்படப்போவதாகவும் தகவல்கள் கூறின. எல்லாம் போகப் போகப்புரியும்! புதிய பூக்களின் வாசம் தெரியும்.

### *நன்றிக்கடன்*

ஆஞ்சநேயர் தன்னை மன்னித்த உதவிவிலைக்கட்டுப்பாட்டு அதிகாரியைச் சும்மா விடுவாரா? ஐந்து பெரிய கலண்டரையும் அனுப்பி வைத்தாராம். அந்தக் கலண்டர் இப்போதும் அலுவலகத்தில் தொங்கி மனச்சாட்சி விபச்சாரம் போனதைக் காட்டுகிறதாம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR

## 'இழப்பும் நெருப்பும்'

"செஸ்" ஆட்டம் பற்றி சொல்லித் தெரிய வேண்டிய தில்லை.

ஆடுபவர்கள் ஒருவரை ஒருவர் எப்படி அசையமுடியாமல் செய்துவிடலாம் என்பதிலேயே குறியாக இருப்பார்கள்.

எவர் முதலில் எந்தக் காயையும் நகர்த்தமுடியாத நிலைக்கு தள்ளப்படுகிறாரோ அவரே ஆட்டத்தில் தோற்றவராகக் கருதப்படுவார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் இப்போது நடந்துகொண்டிருக்கும் ஆட்டத்தில் யார் முதலில் தோற்கப்போகிறார் என்பதுதான் இப்போதைய கேள்வியாக உள்ளது.

முதலில் 'செக்மேற்' சொல்பவர் பிரபாகரனா சந்திரிகாவா என்பதில் கன்னை கட்டிக்கொண்டு பத்திரிகையாளர்களும், அரசியல் கட்சிகளும் பந்தயம் வைக்காத குறையாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆட்டத்திற்கு தயார் என முதலில் ஜனாதிபதி அறிவித்ததைத் தொடர்ந்து ஆரம்பமான இந்த 'ஆட்டம் கடந்த 8 மாதங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அன்றாடப் பிரச்சினையை முதலில் கவனிப்போம் என்று முதலில் ஒத்துக்கொள்ளப்பட்ட போதும், பூநகரி விவகாரத்துடன் அது 'செக்மேற்' நிலைக்கு வந்தது.

அதை தவிர்க்க சந்திரிகா அரசியல் பிரச்சினை என்ற காயை நகர்த்தினார்.

பதிலுக்கு பிரபாகரன் காலக்கெடு விதித்தார்.

ஜனாதிபதி பழைய காயைக் கொஞ்சம் முன்னோக்கி நகர்த்திப் பார்த்தார்.

பிரபாகரன் பதிலுக்கு தனது காலக்கெடுவை பின்போட்டார்.

ஜனாதிபதி நான்காவது சுற்றுப் பேச்சுக்கு அமைச்சர்களை அனுப்புவதாக கூறினார்.

பிரபாகரன், 'அதனால் எந்தப் பயனுமில்லை. முதலில் ஒப்புக்கொண்டபடி அன்றாடப் பிரச்சினையைப் பேசுவோம்' என்று அறிவித்தார்.

அமைச்சர் குழுவுக்குப் பதில் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான ஒரு குழு அனுப்பப்பட்டது.

இம்முறை சற்று மாறுதலாக பெயர் பெற்ற மனித உரிமை மற்றும் ஜனநாயக இயக்கங்களை சேர்ந்த சிலரையும் சேர்த்து அனுப்பினார் ஜனாதிபதி.

அரசாங்கம் முடிவெடுக்க முடியாதவர்களை அனுப்புகிறது. எமது மக்களின் அன்றாடப் பிரச்சினையை, பாதுகாப்புக் காரணங்களுக்காக புறக்கணிக்கும் இனவாத நடவடிக்கைகளை தொடர்கிறது என்றது புலிகள் தரப்பு.

இல்லை, இதோ நாம் தயார்தான் என்று கூறும் ஜனாதிபதியின் கடிதம் இறுதியாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

நான் சிறப்பாக ஆடுகிறேன் என்பது, எதிராளி ஆடமுடியாத நிலைமையைத் தோற்றுவிப்பதே என்ற 'செஸ் ஆட்ட வரைவிலக்கணத்துக்கமைய ஆடுகின்றார்கள் அவர்கள்.

'செஸ்' ஆட்டத்தைப் பொறுத்தவரை இந்த விளையாட்டு உற்சாகம் தரும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால், எமது நாட்டு நிலையைப் பொறுத்தவரை, இந்த ஆட்டம் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வுப்பிரச்சினையாக உள்ளது; எதிர்காலம் எப்படிப் போகுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது; ஒரு மூன்றாவது ஈழப்போர் மூண்டு நாமெல்லாம் மாண்டு விடுவோமோ என்று நடுநடுங்க வைப்பதாக உள்ளது.

ஏனென்றால், எமது நாட்டின் கடந்தகால வரலாறு முழுவதும் யுத்தத்தினதும், சாவினதும், மரண ஓலங்களினதும் வரலாறாகியுள்ளது. இந்த நிண நாற்றம் நிறைந்த வரலாற்றிலிருந்து விடுபடுவதற்காகவே மக்கள் சமாதானம் வேண்டும் என்று குரல் எழுப்பினர்; அது அடையப்பட்டால் மட்டுமே 'இத்தனை கால இழப்பும் நெருப்பும்' அர்த்தமுள்ளதாக இருக்கும்!

ஆனால், ஆடுபவர்கள் இவைபற்றி அக்கறைப்படுவதாக தெரியவில்லை.

குறிப்பாக அரசாங்கம், புலிகளை அரசியல் நெருக்கடிக்கு உள்ளாக்குவதில் காட்டும் அக்கறையை அரசியல் தீர்வினை முன்வைப்பதில் காட்டவில்லை.

'புலிகளுடன்பேசிய பின்னரே அரசியல் தீர்வு தொடர்பான விடயங்கள் அரசியல் திட்டத்தில் சேர்க்கப்படும்' என்று கூறுகிறார் சட்டப் பேராசிரியரும் நீதியமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் அவர்கள்.

புலிகளுடன் பேசுவது சரி, உங்கள் கருத்தை சொல்லுங்களேன் என்று கேட்டால், ..நற்கு 'சொக்லேட்' கதை சொல்கிறார் ஜனாதிபதி. ஆக, என்னதான் நடக்கப்போகிறதோ என்ற அச்சம் கலந்த எதிர்பார்ப்புடன் மக்கள்.

துப்பாக்கி குண்டுகளால் சரித்திரம் எழுதப்படுவதில்லை; அதை எழுதுபவர்கள் மக்கள்; மக்களால் மட்டுமே அது சாத்தியம் என்பதை எப்போதுதான் இந்த அரசியல்வாதிகள் படிக்கப் போகிறார்களோ?

அவர்கள் தான் சொல்ல வேண்டும்!

## மீண்டும் மீண்டும் மீண்டும்...

கொழும்பில் திரும்பவும் தமிழ் இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரிப்பதற்கு பொலிசாருக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வுப் பணியகம் (C.D.B) பல்வேறு பொலிஸ் குழுக்களை அமைத்து தீவிர கண்காணிப்பு, தேடுதல், கைது செய்தல் போன்ற நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பணியகத்திற்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்தே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அண்மையில் குற்றப்புலனாய்வு பணியகத்தினால் தமிழ் ரெஜிமென்டில் இருந்த சிலரும் கைது செய்யப்பட்டு இதுவரை விசாரிக்கப்பட்டு வந்துள்ளதாக தெரிகிறது.



முன்னைய ஐ.தே.க. அரசின் காலத்தின் போது வடகிழக்கில் பாதுகாப்பு படையினருடன் இணைந்து செயற்படுவதற்கும், ஐ.தே.க. அரசியல்வாதிகள் தங்கள் தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் தமிழ் இளைஞர்கள் சிலரைக் கொண்டு தமிழ் ரெஜிமென்ற் என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. இதிலிருந்து செயற்பட்டவர்கள் அனேகமானோர் இன்று கைவிடப்பட்டுள்ளார்கள்.

இந்த தமிழ் ரெஜிமென்டில் முக்கிய பங்காற்றிய ஒரு சிலர் இராணுவ உயரதிகாரிகளுடன் இணைந்து பாஸ் எடுத்து வடபகுதிக்கு தடை செய்யப்பட்டிருந்த பொருட்களை அனுப்பி லட்சக்கணக்கில் உழைத்தார்கள். ஆனால் இதில் கூடுதலாக லாபம் தேடிக்கொண்டவர்கள் இராணுவ உயரதிகாரிகளே.

இப்போது கைது செய்யப்பட்டிருக்கும் தமிழ் ரெஜிமென்டைச் சேர்ந்தவர்களிடமும் இதில் சம்பந்தப்பட்ட இராணுவ உயரதிகாரிகள் அனுப்பிய பொருட்களின் தொகை என்பன பற்றியும் விசாரிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

இதைவிட கொழும்பில் தமிழர்களைக் கைது செய்யும் படலம் இன்னமும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. அண்மையில் மருதானைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் ஒரு தமிழ் இளைஞர். இவர் முன்னர் பொலிஸாருடன் இணைந்து இளைஞர்களைக் காட்டிக்கொடுத்தவர்.

கைது செய்யப்பட்டபோது, முன்னர் உங்களுக்கு விசுவாசமாக எத்தனையோ வேலை செய்துள்ளேன். என்னுடைய பாஸ் இது, எனக்காட்டியுள்ளார். பாஸைக் கிழித்தெறிந்த பொலிஸார் (முன்னைய பொலிஸ் உயரதிகாரி டக்ளஸ் பீரிஸ் ஒப்பமிட்டது) கெரித்தெமிழா வேசிக்க புத்தா என இழுத்துக்கொண்டு போய் ஒரு நாள் கூட்டில் வைத்தே அனுப்பினார்கள். இது நமது தமிழ்த்தலைவர்களுக்கும் சமர்ப்பணமாகட்டும்.

## 'பிரபாகரன் அகால மரணமாவார்' -ஸ்ரீ லங்கா சோதிடர்

"விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இவ்வருட முடிவுக்குள் அகால மரணமாவார்" இவ்வாறு ஸ்ரீலங்கா சோதிட விஞ்ஞான சங்கத்தின் முகாமைத்துவ இயக்குனர் லொ.வ.நந்தசேன என்பவர் 1995 வருடகணிப்பு பிரசுரத்தில் தெரிவித்துள்ளதாக ஏப்ரல் 9ம் திகதி வெளியான 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி சோதிடர் இதுபற்றி மேலும் தெரிவித்திருப்பதாவது, "புலிகள் இயக்கத்துக்குள் தோன்றும் உள்முரண்பாடு காரணமாகவோ, இலங்கை அல்லது இந்திய அரசினால் மேற்கொள்ளப்படும் பாரிய திட்டமொன்றின் மூலமாகவோ பிரபாகரன் கொல்லப்படுவார். இவ்வருட இறுதிக்குள் இது நடக்காவிட்டால் 1996 யூலை 7ம் திகதிக்குள் இது நடந்தே தீரும். அதே போல் 1996 பெப்ரவரி 8ஆம் திகதிக்கு முன் வடக்கு கிழக்கு யுத்தகளத்தில் பணியிலிருக்கிற மேஜர் ஜெனரல் அல்லது அதனிலும் உயர்ந்த பதவியைச் சேர்ந்த இராணுவ அதிகாரியொருவர் கொல்லப்படுவார். இக் காலப்பகுதிக்குள் அரசாங்கத்தால் அடிக்கடி ஊரடங்கு சட்டம் அமுலுக்கு கொண்டு வரவேண்டிவரும்" என்றும் சோதிட நிபுணர் லொ.வ. நந்தசேன தெரிவித்திருப்பதாகவும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.



பிரபாகரனை தீர்த்துக்கட்டிவிட்டால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என கனவுகாண்போருக்கு சில காலத்துக்காவது இச்சோதிடம் பாலை வார்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

## ஸ்ரீபாத கல்லூரி: என்னடி மீனாட்சி சொன்னது என்னாச்சி!

அரசாங்கம் வாக்குறுதியை நிறைவேற்ற தயங்குகின்றது. ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியைத் தமிழ் பேசும் மக்களுக்கான கல்லூரியாக ஆக்குவதாக ஜனாதிபதி எமக்கு வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் மீண்டும் பழைய முறையினடிப்படையிலேயே தொடரவிருப்பதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இது எமக்கு அரசின் மீதான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணி தலைவர்களில் ஒருவரான வி.ரி.தர்மலிங்கம் அண்மையில் சரிநிகருக்கு தெரிவித்தார்.

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்காக ஜேர்மன் அரசு கட்டித்தந்த கல்லூரி. எட்டு சிங்கள கல்வியியல் கல்லூரிகள் ஏற்கெனவே அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அம்பாறையில் ஒரு முஸ்லீம் கல்வியியல் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. மலையக மக்களுக்கான கல்வியியல் கல்லூரி இல்லாத நிலையை தீர்க்க ஜேர்மன் அரசு முன்வந்தது. அதனடிப்படையில் கட்டப்பட்ட ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் மலையக மாணவர்கட்கு 50%மும், சிங்கள மாணவர்கட்கு 25% மும், தமிழ் பேசுவோர்க்கு 25%மும் என்ற ரீதியில் அனுமதியளிக்கப் போவதாக அன்று அதிகாரத்திலிருந்த ஐ.தே.க அரசு அறிவித்த போது இ.தொ.கா. ஏற்றுக்கொண்டது. எனவே அன்றைய மோசகாரமான சூழ்ச்சிக்கு எதிராக குரலெழுப்ப எவருமிருக்கவில்லை. ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி செயற்படத் தொடங்கியபோது மலையக மக்கள் இது தங்கள் தலைவிதி என்று நொந்து கொண்டதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை.

ஒருமுறை "சரஸ்வதி பூஜை" கொண்டாடிய போது சிங்களம் பேசும் மாணவர்கள் இறைச்சி, மீன் சமைத்தே ஆக வேண்டும் என ஆர்ப்பாட்டம் செய்த போது பிரச்சினை வெளிக்கிளம்பியது. கல்லூரியும் இழுத்து மூடப்பட்டது.

இன்று மலையக மக்கள் கோருவது ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் 100% தமிழ் பேசும் மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய வழியை ஏற்படுத்த வேண்டுமென்றே.

தொகுத்தேர்தல் நடப்பதற்கு முன்னரும் பொதுத்தேர்தல் முடிந்து ஆட்சியமைக்கும் போதும் அரசுடன் மலையக மக்கள் முன்னணி பேச்சுவார்த்தை நடாத்திய போது வைத்த கோரிக்கைகளில் ஒன்று இந்த ஸ்ரீபாத கல்லூரியில் 100% தமிழ் பேசும் மாணவர்களுக்கான அனுமதி. அன்று அதை ஏற்றுக் கொண்ட பொ.ஜ.மு. இன்று பழைய முறையைத் தொடர்வதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக அறியக்கிடைத்துள்ளது.

"இப்பிரச்சினை இவ்வளவு தூரம் வெளிக்கிளம்பியும் கூட இதுவிடயத்தில் இ.தொ.கா. அரசின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போவதன் காரணமாக மலையக மக்களுக்கான நியாயம் பின்போடப்பட்டுக் கொண்டே போகிறது என்பது வேதனைக்குரிய விடயம்" என்றும் வி.ரி.தர்மலிங்கம் மேலும் தெரிவித்தார்.

சரிநிகர் பிரதம ஆசிரியர் - சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: இல 4, ஜெயரட்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு - 05. ☎ : 593615
வெளியீட்டாசிரியர் - ச.பாலகிருஸ்ணன். ... கொழும்பு - 03.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்